# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

சென்னை – 600 097

*இளங்கலை கல்வியியல் (பி.எட்.) முதலாம் ஆண்டு*

## பாடம் - 4: கலைத்திட்டத்தில் மொழி

**பாடங்களைத் தயாரித்து வழங்குவோர்**


**அலகு - 1** : **மொழியும் சமூகமும்**

முனைவர்.வை.பாலகிருஷ்ணன், துறைத்தலைவர்

**அலகு - 2** : **வகுப்பறையில் மொழியின் பன்முகத்தன்மை**

*முனைவர்.ஆ.இராஜேஸ்வரி, உதவிப்பேராசிரியா*

**அலகு - 3** : **வகுப்பறைக் கற்பித்தலில் தாய்மொழியின் இடம்**

திருமதி.க.தேவிஸ்ரீ, உதவிப்பேராசிரியர்

**அலகு - 4** : **கலைத்திட்டத்தில் மொழி**

திரு. இரா. செந்தில்குமார், உதவிப்பேராசிரியர்

**அலகு - 5** : **மொழி தொடர்பான சிக்கல்கள்**

முனைவர். கு. விஜயா, உதவிப்பேராசிரியர்


---


**கலைத்திட்ட வரைவு மற்றும் மதிப்பீட்டுத்துறை**

**தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை**

## அலகு- 1 மொழியும், சமூகமும்

## (Language and Society)

### பாடப்பொருள் நோக்கங்கள் (COURSE OBJECTIVES)

இப்பாடப் பொருளினைக் கற்ற பின்பு ஆசிரிய-மாணவர்கள் கீழ்க்காணும் கற்றல் இலக்குகளை அடைவர்.

- மொழியின் செயல்பாடுகளை அறிதல்
- முகப்பு மொழி மற்றும் பள்ளி மொழியை புரிந்து கொள்ளுதல்
- கற்பவரின் மொழிதிறன் பின்புலத்தை புரிந்து கொள்ளுதல்
- பள்ளியில் வாய்மொழி மற்றும் எழுத்து மொழிகளை வளர்த்தல்
- மொழி மற்றும் கலாச்சாரத்தை அறிதல்

### முன்னுரை

மொழி மனித சமூகத்தின் இன்றியமையாத ஆக்கக் கூறாகும். மொழி சமூக உறுப்பினர்களிடையே தகவல் தொடர்புக்கான ஒரு வழிமுறையாகும். ஒரு குழுவின் தனித்தன்மைக்கு தொடர்புடைய மரபுகளையும் விழுமங்களையும் வெளிப்படுத்தும் கருவியாகும். மொழிப்பண்பாட்டின் உட்கூறாகும். மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்தும் சிறப்பம்சம் மொழித்திறன் ஆகும். சமுதாய பண்பாடு உயர்ந்தநிலையை எட்டிடுவதற்கு மொழியே காரணமாகும். நமது சிந்தனை, கனவு, பிரார்த்தனை, தியானம், பிறரோடு உள்ள உறவுகள், தகவல் தொடர்பு என அனைத்திலும் மொழி இடம் பெறுகிறது. மனிதர்களுக்கு இடையேயான தகவல் தொடர்பில மொழியே சிறப்பிடம் பெறுகிறது. மனித தகவல் தொடர்பில் அபிநயங்கள், தலையசைத்தல், கண்சிமிட்டுதல், பிரெயில் எழுத்துக்கள், மோர்ஸ் குறியீட்டு முறை, நடித்துக்காட்டுதல், உடலசைவுகள் மூலம் கருத்தை வெளிப்படுத்துதல் போன்ற வேறு பல வழிமுறைகள் இருந்த போதிலும் அவற்றின் மிகக்குறைவு என்பதோடு, அவையும்கூட மொழியை சார்ந்தே அமைந்தவை என்பது குறிப்பிடத் தக்கதாகும். மொழியே மனிதனின் சிந்தனைக்கு வடிவம் கொடுத்து, அவனது அனைத்து செயல்பாடுகளையும் கட்டுப்படுத்தி வழிநடத்துகின்றது. பாடப்பொருள் மற்றும் உயிர்ப்பொருள் பண்பாட்டை ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்தத் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் கருவியாக மொழி விளங்குகிறது. மானிட அறிவு சேமித்து வைக்கப்பட்டு ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படுவதற்கான சாதனமாக மொழியே விளங்குகிறது. மொழி மனிதனின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் மூன்றினையும் ஒருங்கிணைக்கும் வல்லமை பெற்று விளங்குகிறது. மனிதர்கள் வாழும் இடங்களில் எல்லாம் மொழி வியாபித்துக் காணப்படுகிறது. ‘மொழி’ என்பதன் பொருள், வரையறை,

மொழிபற்றிய பொதுமைக்கருத்துகள், மொழியின் பணிகள், வீட்டுமொழி , பள்ளியில் பயன்படுத்தப்படும் மொழி, பேச்சு மொழி, எழுத்து மொழி, கற்போரின் பின்புலத்தைப் புரிந்துகொள்ளுதல், வகுப்பறையில் வாய்மொழி மற்றும் எழுத்து மொழியினை வளர்த்தல், மொழியும் பண்பாடும் ஆகியவைக் குறித்து இவ்வலகில் விளக்கப்படவுள்ளன.

**மொழியின் பொருள் விளக்கம்**

மனிதனின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும், விருப்பங்களையும் பிறருக்குத் தெரியப்படுத்த மனிதனால் உருவாக்கப்பட்ட குறியீட்டு முறையே மொழியாகும்.

ஒவ்வொரு மனிதனின் இனப்பிரிவும், மனித வாழ்க்கையில் இடம் பெறும் பொருட்கள், நிகழ்ச்சிகள், செயல்முறைகள் ஆகியவற்றைக் குறித்திடுவதற்கான ஒலித்தொகுப்புகளை உருவாக்கிக் கொண்டுள்ளன. இத்தகைய ஒலித்தொகுப்புகள் ‘‘சொற்கள்’’ எனப்படும். சொற்களை குறிப்பிட்ட வகையில் இணைத்து சொற்றொடர்கள் உருவாக்கப்படுகின்றன.

**நோம் சோம்ஸ்கி** என்பார், ‘‘ மொழி என்பது எண்ணற்ற சொற்றொடர்களின் தொகுப்பு எனவும், ஒவ்வொரு சொற்றொடரும் அளவிடக் கூடிய நீளம் கொண்டதாகவும், பல்வேறு ஒலித்தொகுப்புகளைக் கொண்டு உருவாக்கப்பட்டு, குறிப்பிட்ட வகையில் ஒருங்கிணைக்கபட்டதாகவும் இருக்கும்’’ என்கிறார்.

மொழியிலுள்ள ஒலிக்குறிகள் வாய்மொழிக் குறிகளாகவோ, எழுத்து வடிவிலான குறிகளாகவோ இருக்கலாம். குறிப்பிட்ட எண்ணிக்கையில் அமைந்த ஒலிக் குறியீடுகளைக் கொண்டு எண்ணற்ற ஒலித் தொகுப்புகளை உருவாக்கும் திறனை மனித மனம் படைத்துள்ளது என்கிறார் சோம்ஸ்கி.

ஒவ்வொரு மனித இனப் பிரிவும், தமக்கென ஒலிக் குறியீட்டு முறையினை உருவாக்கிக் கொண்டுள்ளதால், உலகில் பல்வேறு மொழிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மனித இனப்பிரிவும் தத்தம் உறுப்பினர்களுக்கு இடையே தகவல் பரிமாற்றத்திற்கு என பிரத்தியேகமான குறியீட்டு முறையினை உருவாக்கிக் கொண்டுள்ளனர். அதாவது ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் மொழிகளில் பேசி வருகின்றனர். ஒரு மனிதப்பிரிவு, பிறிதொன்றின் மொழியைக் கற்றாலொழியை அப்பிரிவினரோடு இடைவினையாற்றிட முடியாது.

‘மொழி’ என்பது ஒலிக் குறியீட்டு முறையையும், ஒலித்தொகுப்புகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி முறைப்படி வாக்கியங்களாக அமைத்திடும் முறையையும் கொண்டதாகும். மொழி என்பது முறைப்படுத்தப்பட்ட, தன்னிச்சையாக இயங்குவது சமூகத்தேவைகளை நிறைவு செய்வதாகவும், முழுமை பெற முயல்வதாகவும் உள்ளது.

## மொழியின் வரையறைகள்

- ‘மொழி என்பது தமது கருத்துகளையும் உணர்வுகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்துவதற்கு மனிதர்கள் மட்டுமே பயன்படுத்தும் வழிமுறையாகும் : இது மனித இயல்பூக்கத்தில் இருந்து எழுந்தது அல்ல. இது குறியீட்டுக் கட்டமைப்புமுறையை பயன்படுத்துகிறது’. - **ஸ்பேர்.**
- ‘மொழி என்பது சமூகக் குழு இடைவினையாற்றிடுவதற்கு பயன்படும் , ஒழுங்கு நியதிகளற்ற ஒலிகளின் குறியீட்டு அமைப்பு ஆகும்’. **– ப்ளாக் மற்றும் ட்ராகர்.**
- ‘மனிதர்கள் தமக்குள் இடைவினையாற்றிடவும், தகவல் பரிமாறிக் கொள்ளவும் பயன்படுத்தும், மரபு ரீதியிலான மற்றும் தன்னிச்சையுடன் இயங்கும், வாய் மற்றும் செவிசார் ஒலிக்குறியீடுகளின் தொகுப்பே மொழியாகும்’. **– ஹல்**

மேற்கண்டவற்றில் முதல் வரையறை, மொழி என்பது உளரீதியாக மனிதனால் மேற்கொள்ளப்படும் மொழிசார் நடத்தை, அதாவது மொழிகளைக் கற்றுக்கொண்டு, அவற்றின் மூலம் தமது எண்ணங்களையும், கருத்துகளையும் வெளிப்படுத்திடல் மற்றும் கூறுபவற்றை பொருளுணர்ந்து அறிதல் என்னும் நடத்தை என உரைக்கிறது. இவ்வரையறை மொழிகளின் பொதுத்தன்மையையும் மொழிகளைக் கற்பதற்கான மனித ஆற்றலின் உயிரியல் அடிப்படையையும் வலியுறுத்துகிறது.

மற்றொரு வரையறை, மொழி என்பது, ஒலிக் குறியீடுகளை இணைத்துக் கட்டமைத்திடவும், அதற்கு பொருள் கொள்ளவும் உரிய விதிமுறைகளைக் கொண்ட அமைப்பு என்பதை முதன்மைப்படுத்துகிறது. அதாவது சொற்களை உருவாக்கவும், அவற்றிற்கு பொருள் அளித்திடுவதற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.

மூன்றாவது வரையறை , மொழி என்பது மனிதத் தகவல் தொடர்பு மற்றும் இடைவினைகள் ஆற்றிடலுக்குப் பயன்படும் ஒலிகளின் கட்டமைப்பு என உரைக்கிறது. இவ்வரையறை மொழியின் சமூகப் பயன்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

மொழி என்பதற்கு அளிக்கப்படும் வரையறைகளிலிருந்து அதன் இயல்புகளாக முறையான அமைப்பு கொண்டிருத்தல், தன்னிச்சைத் தன்மை, சமூகவியல்பு பெற்றிருத்தல் மற்றும் முழுமை பெற்று விளங்குதல் போன்றவற்றை அறிந்துணரலாம்.

## மொழியின் பொதுமைக் கருத்து

மொழி என்பது ஆழ்ந்த, சிறப்பான வகையில் உள்ளத்தைக் காட்டும் கண்ணாடியாகும். இது மனித மதிநுட்பத்தின் படைப்பாகும். இதை ஒவ்வொரு மனிதரும் தன்னளவில் புதுப்பித்துக் கொள்கிறார்: அது அவரது சொந்த விருப்பு அல்லது உள்ள உணர்விற்கு அப்பாற்பட்டது.

மனித சமூகத்தின் பிரிக்க முடியாத பகுதியாக மொழி விளங்குகிறது. தீவுகள், காடுகள் போன்ற குறுகிய, புற உலகத் தொடர்பு குறைந்த பகுதிகளில் வாழும் மக்களும் தங்களுக்கென மொழிகளை உருவாக்கிக் கொண்டுள்ளனர்.

மொழி வாயிலாகவே அறிவியல், தொழில்நுடபம், இலக்கியம், மானிடவியல் போன்றவை பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ளன. தகவல் பரிமாற்றத்திற்கும் மொழி இன்றியமையாதது. சொல்லுக்குப் பிறகு எழுத்தும் அதன்பின் இலக்கணமும் தோன்றி வளர்ந்துள்ளன.

மனித மொழி விலங்குகளின் ஒலிச் சைகைகளிலிருந்து வேறுபட்டதாகும். மொழியின் சிறப்பியல்புகளாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

**தன்னிச்சைத்தன்மையுடையது மொழி**

ஒரு மொழியில் மொழியில் உள்ள சொற்களுக்கும் அவற்றால் அறிந்து கொள்ளப்படும் பொருளுக்கும் இடையே இயல்பான தொடர்பு ஏதும் இருப்பதில்லை. (உ.ம்.) கல், மரம், விலங்கு, பெண் போன்ற சொற்கள் அவை சுட்டிக்காட்டும் பொருளுக்கு ஏன் இடப்பட்டது என்பதற்கான காரணம் ஏதுமில்லை. இது போன்றே திருமணமான பெண்ணை, திருமதி, ஸ்ரீமதி, மிஸஸ் போன்ற வெவ்வேறு சொற்களால் பல்வேறு மொழிகளில் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறு தன்னிச்சையாக வெவ்வேறு சமூகக் குழுவினர் சொற்களை உருவாக்கிக் கொண்டதாலேயே பல்வேறு மொழிகள் தோன்றின.

**சமுதாயத்திற்குரியது மொழி**

பொருள்களையும் அவற்றிற்கு இடையேயுள்ள உறவுகள், நிகழும் இடைவினைகள் போன்றவற்றைச் சுட்டிக் காட்டுவதற்கு என மரபுரீதியாக பின்பற்றப்படும் சொற்கள் மொழியில் அமைந்து காணப்படுகின்றன. சமூகநிலைக்கேற்ப, ஒருவர் பேசும் மொழிச் சொற்களும் வேறுபடும்.(உ.ம்)நான், அடியேன்,நீ, நீங்கள், தாங்கள், அவன், அவள், அவர் ,அவர்கள், உன்னுடையது, அவனுடையது, அவர்களுடையது, தங்களுடையது, என்னுடையது போன்ற சொற்கள் உறவு நிலையை ஒட்டி எழும் விளிச் சொற்கள் ஆகும். மொழியால் சமூக உறவுகளும் பண்பாடும் வளரும். மொழியின்றி, சமூக இணக்கம் , நல்லுறவு , சமூகத்தொடர்பு, சமூக நிறுவனங்கள் ஆகியவை ஏற்பட வழியில்லை.

**குறியீடாகமைந்தது மொழி**

மொழி என்பது ஒலிகளுக்கான குறியீடுகளால் ஆனது. மொழிகள், ஒலிக் குறியீடுகளை அமைத்திட வெவ்வேறு முறைகளைக் கொண்டு விளங்குவதால், அவை வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஒவ்வொரு மொழியும், ஒலிக் குறியீடுகளை தன்னிச்சையாகத் தேர்வு செய்கின்றன: ஆனால் தேர்வு செய்தபின் அவை மரபு

ரீதியில் பயன்படுத்தப்பட்டு வரும். மொழியில் உள்ள சொற்கள் வெறும் குறியீடுகள் மட்டுமல்ல: அவை பொருளை உணர்த்துபவையாகவும் விளங்குகின்றன. உதாரணமாக 'மகளிர்' என்ற சொல் வயது வந்த பெண்களையும், 'ஆடவர்' என்ற சொல் வயது வந்த ஆண்களையும் குறிப்பிடும்.

**முறைப்படுத்தப்பட்ட அமைப்புடையது மொழி**

மொழி என்பது தன்னிச்சையான ஒலிக்குறியீடுகளைக் கொண்டது என்றாலும் அவை ஒரு குறிப்பிட்ட வழிமுறைப்படி வரிசைப்படுத்தப்பட்டு சொற்களாகவும், சொற்கள் குறிப்பிட்ட விதத்தில் கட்டமைக்கப்பட்டு சொற்றொடராகவும் விளங்குகின்றன. ஒலிக்குறியீடுகளை முறைப்படுத்தி வரிசைப்படுத்திட ஒவ்வொரு மொழிக்கும் தனியொரு அமைப்புமுறை உள்ளது. ஒலிகளை உச்சரித்தலுக்கும், சொற்களை இணைத்து சொற்றொடராக அமைத்திடுவதற்கும் ஒவ்வொரு மொழியிலும் விதிமுறைகள் உள்ளன. மொழி அமைப்பில், உச்சரிக்கும் முறை, வாக்கிய அமைப்புமுறை, ஒலிக்குறியீடுகளாக இணைத்து சொற்களாக மாற்றிடும் முறை என பல உள்ளமைப்புகள் உள்ளன. மொழி அமைப்பில் ஒருமை-பன்மை, நிகழ்காலம்-இறந்த காலம்-எதிர்காலம் போன்றவற்றை சுட்டிக்காட்டுவதற்கான வினைச் சொல் வடிவமைப்பு, உணர்வுகளை வெளிப்படுத்தும் சொல் அமைப்பு, பொருட்களின் பண்புகளைத் தெரிவிக்கும் சொற்கள் என பல உள்ளமைப்புகளும் உள்ளன.

**குரல்வளை அதிர்வுநாளங்கள் எழுப்பும் குரலொலி சார்ந்தது மொழி**

மொழி என்பது அடிப்படையில் ஒலிக்குறியீடுகளால் ஆனது. மனித உறுப்புகள் ஒலியை எழுப்பி கட்டுப்படுத்தும் முறையினால், ஒலிக் குறிகளுக்கான உச்சரிப்புத் தோன்றுகிறது. பேச்சு தோன்றிய பின்பு, எழுத்து வடிவில் ஒலிக் குறியீடுகள் உருவாக்கப்பட்டன. எழுத்து என்பது ஒலிகளுக்கான சித்திர வடிவம் ஆகும். எனவே மொழியில் 'பேச்சு' என்பது முதன்மை இடம் பெறுகிறது. பேச்சு வழக்கு ஒழிந்த மொழிகள், மெல்ல மெல்ல மறைந்துபோகும்.

**இயல்பூக்கம் சாராத மரபு முறை சார்ந்தது மொழி**

எந்த ஒரு மொழியும் மனிதர்கள் தமக்கிடையே ஒப்புதல் அளித்து, குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றி ஒரே நாளில் தோற்றுவிக்கப்பட்டதல்ல. மொழி என்பது சிறுக சிறுக வளர்ச்சி பெற்று, மரபுரீதியாக வழக்கத்தில் இருந்து வருவது ஆகும். ஒவ்வொரு தலைமுறையும் மொழிசார்ந்த மரபினை தனக்கு அடுத்த தலைமுறையிடம் சேர்ப்பிக்கிறது. மனிதனால் உருவாக்கப்பட்ட சமூக நிறுவனங்களைப் போன்றே, மொழியும் மாற்றங்களுக்கு உட்படக் கூடியது, அழியக்கூடியது, வளர்ச்சிப் பெறக்கூடியது, அகன்று விரியக்கூடியது. பேச்சு என்பது மனித குழந்தைக்கு இயல்பிலேயே வருவது அல்ல. குழந்தை, மொழியை முயன்று கற்றுக்கொள்கிறது. அதாவது 'பேச்சு' மனித குழந்தைக்கு பிறப்பின்போதே மரபு ரீதியாக

கடத்தப்படுவது அல்ல. ஆனால் பேசுந்திறன் அல்லது பேச்சினைக் கற்கும் திறன் குழந்தையிடம் இயல்பாக அமைந்து காணப்படுகிறது.

இயல்பூக்கங்கள் மனிதர்களது வெவ்வேறு வளர்ச்சிப் பருவங்களிலும் சூழல்களிலும் தோன்றுபவை. பாலூக்கம், மகவூக்கம், பாதுகாப்பு ஊக்கம் போன்றவை தாமாகத் தோன்றி, மனித நடத்தையின் மீது ஆதிக்கம் செலுத்தி, பின்னர் மறைபவை ஆகும். ஆனால் மொழி, தானே குழந்தையிடம் இயல்பாகத் தோன்றுவதில்லை, முயற்சியால் உருவாகி, மாறுதல்களுக்கு உட்பட்டு வளர்வது. மொழி வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் தன்மை கொண்டது.

மொழி, சமூக மரபு வழியே பின்பற்றப்பட்டு வருவது ஆகும். சொற்களின் உச்சரிப்பும், பேசும் முறைகளும், வாக்கிய அமைப்பும் மொழிகளும் இடையேயும், ஒரே மொழியைப் பேசும் பல உட்குழுவினரிடையேயும் வேறுபடுவதைக் காணலாம்.

**உருவாக்கத்திறனும், படைப்புத்திறனும் உடையது மொழி**

ஒலிக்குறியீடுகளை பல்வேறு விதங்களில் இணைத்து புதுப்புது சொற்களை உருவாக்கிட , மொழி இடம் தருகிறது. மக்களாட்சி, வங்கி சீர்திருத்தம் போன்றவை பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்துதான் வழக்கிற்கு வந்தன. பல புதிய கலைச்சொற்கள் அறிவியல், தொழில்நுட்பம், சமூக மாற்றங்கள் ஆகியவற்றின் விளைவாகத் தோன்றும். வேட்பாளர், முன்மொழிதல், வாக்குச்சீட்டு, ஏற்புரை என்பது போன்ற சொற்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வழக்கில் இல்லை. எனவே, மொழி, புதுப்புது சொற்களை படைக்கும் தன்மை கொண்டு திகழ்கிறது எனலாம்.

மொழியின் வளர்ச்சியால் புதியன தோன்றுதல் இயல்பு ஆகும்.தமிழில் புதினம் சிறுகதை வசன கவிதை போன்றவை மேனாட்டு மொழிகளின் தொடர்பால் உருவானவை ஆகும்.கற்பனை வளமுடையோர் புதிய இலக்கிய வடிவங்களைத் தோற்றுவிக்க மொழியின் நெகிழ்வுத்தன்மை பெரிதும் உதவுகிறது.

மொழிகளை அவற்றின் நோக்கங்களின் அடிப்படையில் பல பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.அவையாவன உலகப் பொதுமொழி உலகத்திலுள்ள அனைவரும் அல்லது பெரும்பாலான மக்கள் பேசும் மற்றும் புரிந்து கொள்ளும் மொழியே உலகப் பொதுமொழி எனப்படும். இத்தகைய மொழியை உருவாக்க சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.அவற்றுள் ஒன்றான எஸ்பிராண்டோ என்கிற செயற்கையான மொழியை லூட்விக் என்பார் உருவாக்கினார்.அறிவியலடிப்படையில் அமைந்திருக்கும் இம்மொழி மக்களது வரவேற்பைப் பெறவில்லை.

இந்திய மொழிகளுக்கு பொதுவான வரிவடிவம் (எழுத்து வடிவம்) பின்பற்றப்படலாம் என்று சில தலைவர்கள் கூறியதற்கும் ஆதரவு கிட்டவில்லை.தரம் சார்ந்த மொழி ஒரே மொழியை பல்வேறு பகுதிகளில் வசிப்போர்பேசினாலும் அவர்களது சொல் உச்சரிப்பு பேச்சு வழக்கு போன்றவை மாறுபட்டு தனித்த தோற்றம் கொண்டு காணப்படும். இவ்வகை சொல்லாட்சி கொண்ட மொழியின் உட்பிரிவுகளை உள்ளடக்கி பொதுவான இலக்கணம் அகராதிகள் கலைச்சொற்கள் போன்றவற்றை அமைத்துக் கொள்ளலாம். இதனை தரப்படுத்துதல் என்கிறோம்.தரப்படுத்தப்பட்ட மொழியை எவரும் எளிதில் பேசவும் புரிந்து கொள்ளவும் கற்றறியவும் முடியும்.ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளுக்கு பொதுவான இலக்கணம் அகராதிகள் கலைச்சொற்கள் போன்றவற்றை உருவாக்கிடலாம். இதனால் ஒவ்வொரு மொழியின் தனித்தன்மையும் அழியாது.எ-டு திராவிட மொழிக் குடும்பம் வடமொழிக் குடும்பம் அராபிய மொழிக் குடும்பம் ஐரோப்பிய மொழிக் குடும்பம் போன்றவை.தரம் சார்ந்த மொழி என்பது பன்மையத்தன்மை (எ-டு)அரேபிக், இங்கிலீஷ் பிரெஞ்சு, ஹிந்தி, போர்ச்சுகீஸ், ஸ்பரினஷ் போன்றவை அல்லது ஒருமையத் தன்மை எ-டு இத்தாலியன், ஜப்பானிஸ் இரஷ்யன் போன்றவை கொண்டு விளங்கலாம்.

### ஆட்சி மொழி

ஆட்சி மொழி என்பது ஒரு நாடு அல்லது அரசு சட்ட ரீதியாக சிறப்பு அந்தஸ்து அளித்து தனது நிர்வாகத்தை நடத்திட பயன்படுத்திடும் மொழியாகும். சில நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்சி மொழிகள் இருக்கக்கூடும்.உதாரணமாக ஸ்ரீலங்காவில் சிங்களம் தமிழ் ஆகிய இரண்டுமே ஆட்சி மொழிகளாகும். இந்தியாவில் இந்தியும் ஆங்கிலமும் ஆட்சிமொழிகளாக ஏற்கப்பட்டுள்ளன.எனினும் ஆங்கில மொழிக்கு இரண்டாம் தகுநிலையே தரப்பட்டுள்ளது.

### சகோதரி மொழிகள்

ஒரு தொன்மையான பொதுமொழியிலிருந்து தோன்றிய சில மொழிகள் சகோதரி மொழிகள் எனப்படுகின்றன.தேவநாகரி எழுத்தைப் பயன்படுத்தும் வட இந்திய மொழிகளான பஞ்சாபி, இராஜஸ்தானி, ஒரியா, பெங்காலி, குஜராத்தி போன்றவை இந்தி மொழியின் சகோதரி மொழிகள் ஆகும்.

### வட்டார மொழி

சாதாரண மக்கள் பேசும் மொழி வட்டடார மொழி எனப்படும். இது பொதுமக்கள் பயன்படுத்தும் கொச்சை வழக்கு வசைபாடும் சொற்கள் இழித்துரைக்கும் சொற்கள் ஆபாச வார்த்தைக்ள ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கும். பொதுமக்கள் நடைமுறையில பேசும் மொழி இலக்கியத்தரத்துடன் இராது.ஆட்சி மொழி போன்றும் இருக்காது.

ஆங்கிலேய ஆட்சியில் இச்சொல்லை ஓரளவு இகழ்ச்சியுடன் இந்திய மொழிகளைக் குறிப்பிடப் பயன்படுத்தினா். அறியாமை காரணமாக இந்திய மொழிகளில் இலக்கிய இலக்கணங்கள் இல்லை சுதேசிகள் பேசும் வளா்சிசயுறா மொழிகள் என்ற கருத்தில் பயன்படுத்தினா்.

**சா்வசேத துணைவினை மொழி**

பல்வேறு நாடுகளைச் சோ்ந்தோரிடையே பொதுவான முதன்மை மொழி இல்லாத நிலையில் அவா்கள் தமக்குள் தகவல் தொடா்பு கொள்ள வேறொரு இரண்டாவது மொழியை பயன்படுத்துவா். ஐரோப்பாவில் உள்ள நாடுகளில் வசிக்கும் மக்கள் பிற நாட்டினரோடு தொடா்பு கொள்ள ஆங்கிலம் பிரெஞ்சு ஜொ்மன் போன்றவற்றில் ஒன்றை இரண்டாவது மொழியாகக் கற்கின்றனா். ஐ.நா. சபையும் சா்வதேச கருத்தரங்குகளும் பேன்றவை ஒரு சில மொழிகளைணேய பயன்படுத்துகின்றன. வேறு மொழிகளில் பேசுவோரது சொற்பொழிவுகளை சிறப்பு மொழிப் பெயா்ப்புக் கருவிகள் உடனுக்குட்ன மொழியாக்கம் செய்து தருகின்றன. நம் நாட்டடில் இரண்டாவது மொழிப் பட்டடியலில் முக்கிய உலக மொழிகளும் இடம் பெற்றுள்ளன.

**இரு மொழிக் கலப்பு**

இரண்டாவது மொழியொன்றைக் கற்போா் அதில் போதிய தோ்ச்சி பெறாத நிலையில் முதல் மொழியுடன் இரண்டாவது மொழியையும் கலந்து பேசுவா்.இரு மொழிகளின் அம்சங்களும் இவா்களது பேச்சில் காணப்படும்.பள்ளி வளாகத்தில் ஆங்கிலத்தில் மட்டுமே உரையாட வேண்டும் என்கிற விதி உள்ள பள்ளிக் கூடங்களில் பயிலும் சிறாா்களிடம் இம்மொழிக் கலவையைக் காணலாம்.எந்த மொழியில் அதிகத் தோ்ச்சி உள்ளதோ அம்மொழிச் சொற்களையே அவா்கள் அதிகம் கையாள்வா்.பிற மாநிலங்களில் பல தலைமுறைகளாக வசிப்பவா்களிடமும் இப்போக்கைக் கவனிக்கலாம்.ஒலியின் ஒழுங்கமைப்பு இலக்கணம் சொற்றொடா் இலக்கணம் சொல் வடிவமைப்பு சொல் வளம் மொழியைப் பயன்படுத்துவதிலுள்ளள தரங்கள் பேன்றவற்றை அவா்கள் தமது முதல்மொழியோடு ஒப்பிட்டு விளங்கிக் கொள்ளலாம்.

**உருவாக்கப்பட்ட மொழி**

இயல்பாக மொழிகள் படிப்படியாக மாறுதல்களையும் வளா்ச்சியையும் காண்கின்றன.பழைய கல்வெட்டு எழுத்துகள் சித்திர எழுத்துகள் வட்டெழுத்துகள் போன்றவை காலப் போக்கில் தோன்றியவை.மாறாக மனித இனத்தின் தகவல் தொடா்புக்கென உருவாக்கப்படும் செயற்கை மொழிகளும் உள்ளன. கணினி மொழி இவ்வகையில் அடங்கும்.

**தாய் மொழி முதல் மொழி**

குடும்பத்தினரிடமிருந்து குழந்தை கற்றுக் கொள்ளும் மொழி தாய்மொழி எனப்படும். ஒரு குடும்பத்தில் இரு மொழிகள் பேசுபவர்கள் இருந்தால் இரு மொழிகளையுமே குழந்தை சமமாகக் கருதும்.

**அயல்மொழி**

தமிழ்நாட்டில் தமிழ்க் குழந்தைகளுக்கு ஆங்கிலம் அன்னிய மொழியாகத் தெரியும்.வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்தில் குடியேறி உள்ளவர்களுக்கு தமிழ் அயல் மொழியாகவே இருக்கும். அவர்கள் தத்தம் தாய்மொழியில் உரையாடுதலில் மகிழ்ச்சி அடைவர். எனினும் இராணுவ வீரர் குடியிருப்பபுகளில் வசிப்போரது குழந்தைகள் பல மொழிச் சொற்கள்களை அவர்கள் கூடி விளையாடும்போது முயற்சியினறிக் கற்றுக் கொள்வதைக் காணலாம்.

**மாநில மொழி மண்டலமொழி**

இந்தியா மொழி வழி மாநிலங்களாகப் பிரிக்கப்படுடுள்ளது.ஒவ்வொரு மாநிலத்திலும் பெரும்பான்மையோரது மொழி மாநில மொழியாகவும் மாநில அளவில் ஆட்சி மொழியாகவும் உள்ளது.

**சிறுபான்மை மொழி**

ஒவ்வொரு மாநிலத்திலும் மொழிச் சிறுபான்மையினர் உள்ளனர்.மாநகர்களில் பல இந்திய மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்டவர்கள் வசிக்கிகன்றனர்.சிறுபான்மை மொழிகளைப் பாதுகாப்பது அரசின் கடமையாகும். அவர்களது குழந்தைகளும் தங்களது தாய்மொழியில் கல்வி பெற உரிமை உள்ளது.

**செம்மொழிகள்**

தொன்மை மொழிகளான இலத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம், ஹீப்ரு, தமிழ் போன்ற பல மொழிகள் இலக்கியச் செழிப்பால் செம்மொழிகள் என்கிற பெருமையைப் பெற்றுள்ளன.

**மொழியின் பணிகள்**

மொழியின் பணிகள் என்பது எந்நோக்கங்களுக்காக மொழியைப் பயன்படுத்துகிறோம் என்பதைக் குறிக்கின்றன.முறைசார்ந்த மற்றும் முறைசாரா தகவல் பரிமாற்றத்தில் மொழியின் பயன்பாடு குறிப்பிடத்தக்கதாகும். மொழியின் ஒவ்வொரு பணிக்கும் குறிப்பிட்டதொரு இலக்கண அமைப்பும் சொற்கள் தொகுப்பும் பயன்படுத்தப்படுகின்றன.மொழியின் முக்கிய பணிகள் அல்லது செயற்பாடுகளாவன:மொழி தகவல் தொடர்பிற்கான அடிப்படை சாதனம் மொழி ஒருவரது

ஆளுமையையும் சமூகத்தின் பண்பாட்டையும் பிரதிபலிக்கிறது.மொழி பண்பாட்டின் வளர்ச்சிக்கும் அதனைப் பரப்புவதற்கும் தேவைப்படுகிறது.சமூகத்தின் தொடர்ச்சி நீடிக்கவும் சமூகக் குழுக்கள் திறம்பட செயல்படவும் சமூகக்குழுக்களை கட்டுப்படுத்தவும் மொழி இன்றியமையாததாகும்.மொழியின் மூன்று அடிப்படைப் பணிகளாவன:

**1.தகவலளிக்கும் பணி**

மொழி தகவல் பரிமாற்றத்தில் பயன்படுகிறது. இப்பணி உலகில் உள்ள மனிதர்கள் பொருட்கள் நிகழிவுகள் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை செய்திகளை அளிப்பதில் கவனம் செலுத்துகிறது.இப்பிணயில் பயன்படுத்தப்படும் கூற்றுகள் உண்மைத்தன்மை கொண்டோ அல்லது தவறாகவோ இருக்கலாம்.

**2.வெளிப்படுத்தும் பணி**

மொழி பேசுவோர் எழுதுவோர் கேட்போர் ஆகியோரது உணர்வுகள் ம்றறும் மனப்பான்மைகளை வெளிப்படுத்த உதவுகிறது.மொழியைப் பயன்படுத்துவோர் தமது உணர்வுகளை வெளிப்படுத்தவோ பிறரிடம் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பவோ முயலும்போது மொழிய்ன இப்பணி வெளிப்படுகிறது.

**3.நெறிப்படுத்தும் பணி**

மனிதர்களின் நட்ததைகளைக் கட்டுப்படுத்த மொழி பயன்படுகிறது. பொதுவாக இப்பணியில் மொழியானது ஆணையிடும் வகையிலோ கோரிக்கை வைக்கும் வகையிலோ பயன்படுத்தப்படும்.

**ரோமன் ஜாகப்சன்** என்பார் தகவல் தொடர்பில் மொழி ஆறுவித பணிகளை செய்திடுவாதாக வரையறை செய்துள்ளார்.அவையாவன வருணனைப் பணி, கவிதைசார் பணி, உணர்ச்சிசார் பணி, அறிவுசார் பணி, உபசாரப் பணி மொழியியல் பணி இனி இவை பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்

- **வருணனைப் பணி**

ஒரு சூழல் பொருள் அல்லது மனநிலை நிகழ்வு போன்றவற்றை வர்ணிப்பது தகவல் தொடர்பில் மொழியின் சீரிய பணியாகும்.

- **கவிதைசார் பணி**

இதில் செய்தியை அதன் தன்மைக்காகவே தெரிவிப்பதுடன் நயத்துடனும் கவர்ச்சிகரமான சொற்டொடர்கள் மூலமும் கூறப்படும்.விவேகானந்தரின் எழுமின் விழிமின் செயலாற்றுமின் என்ற முழக்கத்தையும் திருமூலரின் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கவிதை வரியையும் மொழியின் கவிதைசார் பணிக்கு எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.

- **உணர்ச்சிசார் பணி**

இது ஒரு தகவலை உணர்ச்சியைக் குழைத்து கேட்போரிடம் உள்ளக்கிளர்சியைத் தூண்டும் வகையில் அளித்தலைக் குறிக்கிறது. வெள்ளையனே வெளியேறு வறுமையை ஒழிப்போம் போன்றவை குறிக்கோளை எட்டத் தூண்டுவனவாகும்.

- **அறிவுசார் பணி**

இது தகுந்த எளிய இனிய பொருள் பொதிந்த சொற்களைக் கையாண்டு புதிய கருத்துகளையும் அளித்து அறிவை விரிவுபடுத்தும் பணியாகும்.இப்பணியே ஆசிரியப் பணியில் முதன்மை பெறுகிறது.

- **உபசாரப் பணி**

ஒருவரை சந்திக்கும்போது வணக்கம் தெரிவித்தல் நலம் விசாரித்தல் பொதுவான அன்றைய சிறப்புப் பிரச்சனைகளைப் பற்றி கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளல் நன்றி கூறி விடைபெறுதல் போன்றவை இப்பணியில் உள்ளடங்கும். அறிமுகமில்லாதவர்களுடன் கூட பயணத்தின்போது இத்தகைய உரையாடல்கள் நிகழும்.

**மொழியியல் பணி** இது மொழியின் தோற்றம் தன்மை வளர்ச்சி இலக்கண இலக்கிய மரபுகள் ஆகியவற்றை விளக்குவதாகும்.

**முதன்மை மொழி வீட்டு மொழி , முகப்புமொழியும் பள்ளி மொழியும்**

முதல் மொழியை தாய்மொழி, குடும்ப மொழி, சுதேசி மொழி, மண்ணின் மொழி இயல்பாகப் பெறப்படும் மொழி என்ற பெயர்கள் கொண்டும் அழைக்கின்றனர்.

ஒருவர் தனது முன்குழந்தைப் பருவத்தில் கற்றிடும் மொழியே அரவது முதல் மொழி அல்லது முதன்மையான மொழியாகும். இது குடும்ப உறுப்பினர்களிடமிருந்தும் வாழும் பகுதியிலிருந்தும் கற்கப்படுவதாகும்.ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசுவோர் **இருமொழியினர்** என்றும் சில மொழிகளைக் கையாளும் திறன் உடையோர் பன்மொழியினர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.தற்கால மொழியியலாளர்கள் குழந்தையின் முதல் மொழியை தாய்மொழியைஎன்றும் இரண்டாவது மொழியை அல்லது வேற்று மொழியை என்றும் குறிப்பிடுகின்றனர்.**ப்ளூம்.ஃ.பீல்ட்** என்பாரது கருத்துப்படி தாய்மொழி தாயின் மடியில் அமர்நது கற்பதாகும். இதுவே அக்குழந்தை பேசும் முதல் மொழியாகும்.அம்மொழியையே குழந்தை மிக இயல்பாகப் பேசும்.தாய்மொழியில் ஒருவர் பேசும்போது மிக்கத் தன்னம்பிக்கையுடன் இருப்பார்.

குடும்ப மொழி (வீட்டுமொழி) என்பது வீட்டிலுள்ளோர் அனைவரும் பேசிக் கொள்ளும் இயல்பான மொழியாகும்.சொற்களை ஒலிப்பது வாக்கிய அமைப்பு போன்றவை தனித்தன்மை கொண்டவையாக இருக்கும்.

சுதேசி மொழி (பாமர் மொழி) என்பது தரப்படுத்தப்படாத மொழி என்று பொருள் கொள்ளப்படுகிறது.

ஒருவர் தாம் வாழும் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறாக ஒரு மொழியை அது பேச்சு மொழியாகவோ குடும்ப மொழியாகவோ இல்லாவிடினும் விரும்பி மதித்துப் போற்றக் கூடும்.இத்தகைய மொழிகள் மரபுரிமை மொழிகள் எனப்படும்.

**வால்டெஸ்**என்பாரது வரையறைப்படி ஒருவர் குழந்தையாக இருக்கும்போது கற்றுக் கொண்ட தாய்மொழி தான் வாழும் சமுதாயத்தில் சிறுபான்மை மொழியாக இரக்கும் பட்சத்தில் பொரும்பாலானோரால் பேசப்படும் மொழியைச் சிறுவயதிலேயே கற்றுக் கொண்டு அதில் தனது எண்ணங்களை வெளிப்படுத்துவதையே அதிகம் விரும்பினால் அம்மொழியே அவருக்கு மரபுரிமை மொழியாகும்.

**முதல்மொழியைக் கற்றலில் அடங்கியுள்ள முக்கிய பண்பியல்புகள்**

**இயல்பூக்க வழியிலானது**

தாய்மொழியைக் கற்றுக் கொள்ளும் ஊக்கம் குழந்தையிடம் இயல்பாகவே அமைந்த காணப்படுகிறது. இதனைக் கற்பதற்கு சூழ்நிலையின் உதவியும் தேவைப்படுகிறது. இது இரு கண்களாலும் ஒரு பொருளைத் தெளிவாகப் பார்த்தல், இரு காதுகளாலும் ஒரே ஒலியைக் கேட்டல் ஆகியவற்றைப் போன்றது.

**விரைவாக நிகழ்வது**

தாய்மொழியைக் கற்பதற்கு குறுகிய காலமே தேவைப்படுகிறது.இரண்டாவது மொழியைக் கற்பதற்குத் தேவைப்ப்டும் நேரம் மற்றும் முயற்சிகளைக் காட்டிலும் தாய்மொழியைக் கற்பதற்கு குறைந்த அளவு நேரம் மற்றும் முயற்சிகள் போதுமானவை ஆகும்.

**முழுமையானது**

முதல் மொழியைக் கற்பது முழுமையானது. இரண்டாவது மொழியை கற்பதைக் காட்டிலும் இது முழுமை பெற்றதாக இருக்கும். இம்மொழியை ஒருவர் என்றும் மறப்பதில்லை.

**தனியாக கற்பிக்க தேவையில்லை**

தாய்மொழியில் பேச தனியாக கற்பிக்க வேண்டிய அவசியமில்லை. சில மொழிவல்லுனர்கள் தாய் அல்லது குழந்தையின் பராமரிப்பாளர் கூட குழந்தைக்கு பேச கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்கின்றனர். குழந்தை தானே பேசத் தொடங்கி தேர்ச்சி பெறும்.

**முதல்மொழியின் முக்கியத்துவம்**

குழந்தையின் முதல் மொழி (தாய்மொழி)அதன் தன்னடையாளமாவும் சமூக பண்பாட்டு அடையாளங்களாகவும் விளங்குகிறது.நடித்தல் மற்றும் பேசுதலில் சிறந்த முன்மாதிரிகளைப் பினபற்றத் தூண்டுகிறது. அதாவது தாய் மொழியைக் கற்கும் குழந்தை அதை இயல்பாக பேசுவோரைப் பார்த்து தானும் அதுபோன்றே பேசும் முறையை உள்வாங்கிக் கொள்கிறது.தாய்மொழியாக இராத மொழியைக் கற்றுத் தேர்ச்சியடைய முனைப்புடன் செயல்படும் நடுத்தர வயது உடையாருக்கு இரண்டாண்டுகள் தேவைப்படுவதாகவும் தாய்மொழியாகக் கொண்ட குழந்தை தனது மொழியில் தேர்ச்சி பெறும் அளவுக்கு பிற குழந்தைகள் அம்மொழியில் தேர்ச்சி பெற 5 முதல் 7 ஆண்டுகள் தேவைப்படுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தாய்மொழி அல்லாத பிறமொழியை குழந்தைகள் கற்றல் எவ்வளவு கடினமானது என்பது இதன் மூலம் தெரிய வருகிறது. ஒரு குழந்தை இரு மொழிகளில் (தாய்மொழி மற்றும் ஒரு மொழி) சம அளவு தேர்ச்சி பெற்றிருப்பின் அதை இரு மொழியாளராக கருதலாம்.தமிழகத்தில் முற்றிலும் ஆங்கிலவழிக் கற்கும் முன்பள்ளிக் கல்வி நிலைய குழைந்தைகளுக்கு இது பொருந்தும்.

**இரண்டாவது மொழி பள்ளி மொழி**

ஒரு குழந்தையின் இரண்டாவது மொழி என்பது தாய் மொழியோடு கூட பள்ளியில் பயில வேண்டிய மற்றுமொரு மொழியாகும். தாய்மொழியே பள்ளியின் போதனா மொழியாக இருந்தால் அக்குழந்தையின் வீட்டுமொழியும் பள்ளி மொழியும் ஒன்றே. மாறாக தாயமொழி அல்லாத பிறிதொரு மொழி போதனா மொழியாக இருந்தால் அந்த போதனா மொழி இரண்டாவது மொழி என்றறியப்படும். உதாரணமாக மலையாளத்தை தாய்மொழியாகக் கொண்ட குழந்தை தமிழ்வழிப் பள்ளியில் பயின்றால் அக்குழந்தைக்கு வீட்டுமொழி மலையாளம் எனவும் பள்ளி மொழி (இரண்டாவது மொழி) தமிழ் எனவும் அமைந்திடும். வீட்டுமொழி (தாய்மொழி) தவிர்த்து இரண்டாவது மூன்றாவது மொழிகளையும் பள்ளிக்கல்வியின் உயர்நிலைகளில் கற்க வேண்டியுள்ளது. பல மொழிகளையும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பும் சில குழந்தைகளுக்கு கிடைக்கிறது. இரண்டாவது மற்றும் மூன்றாவது மொழி வெளிநாட்டு மொழியாக இருக்க வேண்டுமென்பதில்லை. ஒரு நாட்டின் பிற பகுதிகளி பேசப்படும் மொழியாகவும் இருக்கலாம்.

**இரண்டாவது மொழியாக ஆங்கிலம்**

ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கற்பது அதைப் பாடமொழியாக்குவதிலிருந்து (போதனா மொழியாக்குவதில் இருந்து) வேறுபட்டது என்பதை முதலில் உணர வேண்டும். தாய்மொழி தவிர பிற பாடங்களை ஆங்கில வழிக் கற்பித்தல் இங்கு இரண்டாவது மொழி என குறிப்பிடப்படவில்லை.

ஆங்கிலம் இரண்டாவது மொழி என்பதற்கான வேறு பெயர்களாவன:

-ஆங்கிலம் வெளிநாட்டு மொழியாக

-ஆங்கிலம் ஒரு கூடுதல் மொழியாக

-பிற மொழிகளில் பேசுபவர்களுக்காக

-ஆங்கிலம் ஆங்கிலம் கற்பவர்களுக்காக

**இரண்டாவது மொழியைக் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் உத்திகள்**

இரண்டாவது மொழியைக் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் முக்கிய உத்திகளாவன:

**சுற்று வழியில் கூறுதல்** உறவு முறைகளை விளக்க முற்படும்போது

**சொற்களின் பொருள்** சிக்கலான சொற்கள் வரும்போது அதை விளக்க எளிய அறிமுகமான சொற்களைப் பயன்படுத்துதல்.

**சொல்லாக்கம்** அறிமுகமான சொற்களைக் கொண்டு கலைச் சொற்களை விளக்குதல்.

**சொற்களை மாற்றல்** தேவை ஏற்படும்போது வழக்குச் சொற்களையோ முதல்மொழிச் சொற்களையோ பயன்படுத்துதல்.

**விளக்கம் கேட்டு பெறல்** தகவல் தொடர்பில் உதவி அளிப்போரிடம் புதிய சொற்களுக்கு தெளிவான விளக்கம் கேட்டுத் தெளிவு பெறல்.

**மொழிசாரா உத்திகள்**

வாய்மொழித் தகவல்களுக்கு வளமும் வலிமையும் சேர்க்க குரலில் ஏற்றத்தாழ்வு முகபாவ மாற்றங்கள் நகைச்சுவை தரும் பாவனைகள் போன்ற அபிநயங்களைப் பயன்படுத்துதல்.

**தவிர்த்தல்**

சில பாடங்கள் பிற நாடுகள் பண்பாடுகள் சார்ந்ததாக இருப்பின் அவற்றை விளக்குவதும் புரிந்து கொள்வதும் சிக்கலானவையாக இருக்கும். சில சொற்கள் உச்சரிக்கவும் கடினமாக இருக்கக் கூடும். இத்தகைய பாடப்பகுதிகளை இரண்டாவது மொழியில் தவிர்க்கலாம்.

**கற்பவரின் மொழிப் பின்புலத்தை புரிந்து கொள்ளுதல்**

பண்பாடு மொழியறிவு கல்வித்திறன் ஆகியவற்றில் மாணாக்கரிடையே காணப்படும் பெருத்த வேறுபாடு 21 ஆம் நூற்றாண்டில் முன் குழந்தைப் பருவத்தினருக்கான வகுப்பறைகளில் வேறூன்றிக் காணப்படுவதை சுட்டிக்காட்டும் ஜெனிஷி மற்றும் டைசன அனைவருக்கும் ஒரே மாதிரியான பொது கலைத்திட்டத்தையும் கல்விச் செயல்களையும் செயற்படுத்திடலாகாது என்று வலியுறுத்துகினறனர். தனிமனித வேறுபாடுகள் மாணவர்களிடையே குறிப்பாக இரண்டாவது மொழியைக்கற்கும் குழந்தைகளிடையே இருப்பது மிகவும் இயல்பான ஒன்றாக இருப்பதால் மாணவர்களுக்கான கலைத்திட்டம் நெகிழ்ச்சியுடையாதாக இருக்க வேண்டும்.

**ஆசிரியர்களுக்கு மொழியியல் அறிவின் தேவை**

மாணக்கர்களிடம் காணப்படும் மொழித்திறன் வேறுபாடுகளைப் பற்றி அறிந்திருப்பதுடன் மொழியாசிரியர்களுக்கு மொழியியல் தொடர்பான அறிவும் அவசியமாகும். மொழியியல் பொருளுடைய சொல் ஒலியை மனிதர்கள் எவ்வாறு எழுப்புகிறார்கள் (இத்தகைய ஆய்வுக்கு பேச்சொலியியல் என்று பெயர்.) சொற்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன (இத்தகைய ஆய்வுக்கு சொல் வடிவமைப்பியல் என்று பெயர்) சொற்களை இணைத்து வாக்கியமாக அமைத்திடும் முறை (இதனை அல்லது சொற்றொடரியல் என்பர்) ஆகியவை குறித்த அறிவும் அவசியம் தேவையாகும். சுருங்கக்கூறின் மொழியியல் அறிவு கொண்ட மொழியாசிரியர்களே மாணவர்களின் மொழித்திறன் வேறுபாடுகள் பற்றி அறிந்து அதற்கேற்றவாறு பொருத்தமான கற்பித்தல் அணுகுமுறையை மேற்கொள்ள முடியும்.

**இரண்டாவது மொழியைக் கற்பதில் உள்ள சிக்கல்கள்**

இரண்டாவது மொழியைக் கற்கும் மாணவர்களிடையே மொழித் திறன் வளர்ச்சி வெவ்வேறு நிலைகளில் இருக்கக் கூடும். குறிப்பிட்ட மொழிப் பின்புலம் இன்றி விளங்கும் மாணவர்கள் முதலாம் வகுப்பில் வேண்டுமானால் இருக்கலாம்.

ஏனைய வகுப்புகளில் ஓரளவு மொழித்திறன் பெற்றவர்கள், பெருமளவு மொழித்திறன் பெற்றவர்கள் மற்றும் சிறந்த மொழித்திறன் பெற்றவர்கள் என பலதரப்பட்ட மாணவர்கள் இரண்டாவது மொழியைக் கற்பதற்கான வகுப்பில் இருப்பர். குறிப்பாக கூட்டுப் பள்ளிகளில் இருந்து கீழ்உயர்நிலைக் கல்வி வகுப்பில் சேருவோரிடையே இத்தகைய மொழியறிவு வேறுபாடு

மிகுந்து காணப்படும். இதற்குக் காரணம் ஊட்டுப்பள்ளிகளில் இரண்டாவது மொழியைக் கற்பிக்க திறன்மிகு ஆசிரியர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லாமலிருத்தல் இரண்டாவது மொழிக் கற்றலுக்கு போதிய முக்கியத்துவம் அளிக்கப்படாமலிருத்தல் பள்ளிகளில் போதிய வசதிகள் இல்லாமலிருத்தல் ஆகியவையாகும்.

**இரண்டாவது மொழியைக் கற்போரது தேவைகளை மதிப்பிடல்**

இரண்டாவது மொழியைக் கற்பவர்கள் ஒவ்வொருவரது தேவையையும் மதிப்பீடு செய்வதில் மிகவும் முக்கியமானது நேர்காணலாகும்.மொழியாசிரியர் ஒவ்வொரு மாணவரிடமும் 10-15 நிமிடங்கள் நேர்காணலை நடத்தி அவர்களை இரண்டாவது மொழியை படிக்கச் செய்தல் கேட்பதை புரிந்து கொள்ளுதல் பேசுதல் எழுதுதல் கற்றறிந்த விஷயங்களை ஒருங்கிணைக்கும் திறன் போன்றவற்றில் சிறுசிறு சோதித்தலை மேற்கொள்ளுதல் வேண்டும். இதனுடன் மாணாக்கரது பண்பாட்டு அறிவு, சமூக பொருளாதார அந்தஸ்து, குடும்பப் பின்னணி ஆகியவற்றையும் ஆசிரியர் கண்டறிந்திட வேண்டும். இப்பணியை வகுப்பறை நேரத்துக்கு வெளியே மேற்கொள்ள வேண்டும்.

**மொழிக் கற்பித்தலில் அடங்கியுள்ள அடிப்படைக் கோட்பாடுகள்**

மொழிக் கற்பித்தலில் அடங்கியுள்ள அடிப்படைக் கோட்பாடுகளை மொழியாசிரியர் அறிந்திருந்தால் மட்டுமே தமது வகுப்பில் உள்ள மொழியறிவு மற்றும் பண்பாட்டு வேறுபாடுகள் கொண்ட மாணவர்களின் தேவைகளையும், ஆர்வங்களையும், நாட்டங்களையும் பூர்த்தி செய்ய முடியும்.

மொழிக் கற்பித்தலுக்கான அடிப்படைக் கோட்பாடுகளாவன: கற்பித்தல் முறைகளும் உத்திகளும் நெகிழ்ச்சியுடையனவாக இருத்தல்.

கற்பித்தல் முறைகளில் சமரசப் போக்கை கடைப்பிடித்தல் அதாவது பாடத்தின் தேவைக்கேற்ற சிறந்த நுட்பங்களையும் அணுகுமுறைகளையும் கடைப்பிடித்தல். மாணக்கர் இரண்டாவது மொழியை தங்குதடையின்றி படைப்பாற்றலுடன் வெளிப்படுத்த பல்வேறு தகவல் பரிமாற்ற வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல். மாணாக்கர் துணிவுடன் இடர்களை எதிர்நோக்கவும் தன்னம்பிக்கையுடன் செயல்படவும் ஊக்கமளிக்கும் வகுப்பறை சூழலை உருவாக்கித் தருதல்.மிகுதிறன் உடைய மாணாக்கரை கடினமான பாடக் கருத்துகளைக் கற்றல் மற்றும் புத்தாய்வு விசாரித்தறிதல் தகவலறிவித்தல் தன்னை அறிதல்போன்ற பல்வேறு செயல்களில் ஈடுபட ஊக்குவித்தல். தொடர்புடைய அனுபவத் தொகுப்புகளை சீரமைத்துக் கொண்டு கருத்தாக்க வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள உதவிடுதல். கற்பித்தல் கற்றல் சூழல்களை வகுப்பறையில் சம அளவில் தருதல்.மாணாக்கர் இணைந்து கற்றலில் ஈடுபட்டு ஒருவருக்கு ஒருவர் உதவி தமது மொழிக் கற்றலை வளப்படுத்திக் கொள்ளல். மாணவர்கள் மொழியின்

அம்சங்களான சொல்வளப் பெருக்கம் வாக்கியக் கட்டமைப்பு உச்சரிப்பு போன்றவற்றில் மேம்பாடு அடைய தேவைப்படும் செயல்பாடுகளை அமைத்துத் தருதல்.

**இரண்டாவது மொழிக் கற்றலுக்கு தேவைப்படும் உதவி அளித்தல்**

பொதுவாக தாய்மொழி அல்லாத பிறமொழியை கற்கும் மாணவர்கள் (அதாவது இரணடாவது மொழியை கற்கும் மாணவர்கள்) தாய்மொழி மற்றும் இரண்டாவது மொழிகளின் பண்பாட்டுத் தாக்கங்களுக்கு ஆட்படுகின்றனர்.எனவே இத்தகைய மாணவர்களது சமூக மற்றும் பண்பாட்டுச் சூழலை அறிந்திருப்பதன் மூலமே மொழியாசிரியர் தகுந்த கற்றல் சூழலை ஏற்படுத்தித் தரமுடியும். இத்தகைய கற்றல் சூழல் மாணவன் இரண்டாவது மொழியைக் கற்பதற்கு துணை செய்வதாகவும் அம்மொழி சார்ந்த பண்பாட்டினை புரிந்து கொள்ள உதவிடுவதாகவும் இருத்தலோடு அவனது தாய்மொழி மற்றும் அது சார்ந்த பண்பாட்டினை மதித்திடும் மனபான்மையை ஏற்படுத்திடுவதாகவும் அமைந்திடல் வேண்டும்.

பின்வரும் கல்விசார் நடவடிக்கைகள் அனைவரையும் உள்ளடக்கிய வகுப்பறையில் மொழிக் கற்றலை மேம்படுத்திட உதவும்.

ஆராய்தறிதலையும் பங்கு பெறுதலையும் ஊக்குவிக்கும் வகுப்பறைச் சூழலை உருவாக்கிடல் அனைத்து மாணவர்களிடமும் தமது கற்றலடைவு குறித்த உயரளவு எதிர்பார்ப்பை வளர்த்திடல். பாடப்பொருள் கற்பித்தலில் உள்ளுறை பொருள் அலகுகளாக எடுத்துக் கொள்ளல். பொருத்தமான விவாதப் பொருள்கள் கொண்டு மொழியினைக் கற்பித்தல். மாணவர்களுக்கு பரிச்சயமான பண்பாட்டுச் சூழலைப் புகுத்தி கற்பித்திடும் உத்தியைப் பயன்படுத்துதல். பல்வேறு கற்பித்தல் அணுகுமுறைகளையும் உத்திகளையும் கையாளுதல். பொருத்தமான மதிப்பீட்டு முறையை பயன்படுத்துதல். இரண்டாவது மொழியைக் கற்றலில் மாணவர் தமது முதல் மொழியை பயன்படுத்துதலை அங்கீகரித்தல் இருந்த பொதிலும் கற்கும் இரண்டாவது மொழியிலேயே அதிக அளவு இடைவினை தொடர்பு சொல்லாடல் நடைபெறுதலை ஊக்குவித்தல்.

**வகுப்பறையில் வாய்மொழி மற்றும் எழுத்து மொழியை வளர்த்தல் பேச்சுமொழி**

பேச்சு என்பது மனிதனின் குரல்வளை உண்டாக்கும் ஒலி. குரல்வளை நாண் மூலம் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வெவ்வேறு அதிர்வுகளாக வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வதிர்வுகளுக்கு குறியிட்டு தொகுப்புகளான சொல் உண்டாகிறது. பேச்சுமொழி என்பது ஒலிக் குறியீடுகளின் தொகுப்புகளால் உருவானது ஆகும்.

பேச்சுமொழியில் சொற்களின் பொருள் பேசப்படும் சூழ்நிலைக்கு ஏற்ப பொருள விளக்கம் கொள்ளப்படுகிறது. பேச்சு மொழியானது பேசுபவர் பிறரோடு கொண்டுள்ள தொடர்பையும்

வெளிப்படுத்துகிறது. பேசும்திறன் மனிதனிடம் இயல்பாகவே உறைந்துள்ளது. பேச்சுமொழி வாய்மொழி அன்றாட மனித வாழிவில் 90 விழுக்காடு பயன்படுகிறது. மக்கள் தமக்கிடையே தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளவும் தமது பிரச்சனைகளையும் தேவைகைளையும் பிறருக்குத் தெரிவிக்கவும் வாய்மொழி பயன்படுகிறது.

பேசுதல் கேட்டல் வாசித்தல் எழுதுதல் ஆகிய நான்கும் அடிப்படை மொழித்திறன்களாகும்.மொழியைக் கற்றலில் பேசுதல் மற்றும் கேட்டல் ஆகிய இரண்டு திறன்களின் வழியே குழந்தை சுய முயற்சியால் மொழியைக் கற்றுக் கொள்கிறது.வாசித்தல் எழுதுதல் என்னும் இரண்டு திறன்களையும் பெற முறையான கற்பித்தல் தேவைப்படுகிறது.தவிர வாசித்தலுக்கும் எழுதுதலுக்கும் எழுத்து வடிவிலான ஒலிக் குறியீடுகளை புரிந்து கொள்வது அவசியமாகிறது.எனவே வாசித்தலும் எழுதுதலும் **எழுத்தறிவுத் திறன்கள்** எனப்படுகின்றன.கேட்டலும் வாசித்தலும் **உள்வாங்கிக் கொள்ளும் திறன்கள்** எனப்படுகின்றன. பேசுதலும் எழுதுதலும் **வெளிப்படுததும் திறன்கள்** எனப்படுகின்றன.

கேட்டல் → பேசுதல் → வாசித்தல் → எழுதுதல் என்பதே மொழிக் கற்றலின் இயல்பான முறையாகும். பேசுதல் என்பதுதான் குழந்தையிடம் முதலில் தோன்றும் திறனாகும். பேசிப் பழகுவதால் குழந்தையிடம் பேச்சு மொழி உருவாகிறது.

**வாய்மொழிப் பயிற்சியின் நோக்கங்கள்**

குழந்தைகளிடம் பேசும்திறன் இயற்கையிலேயே அமைந்து காணப்பட்டாலும் வாய்மொழிப் பயிற்சியின் மூலம் அதன் பேச்சு மொழியினை செம்மைப்படுத்திட முடியும்.வாய்மொழிப் பயிற்சியின் முக்கிய நோக்கங்களாவன:

சரியான உச்சரிப்புடன் சொற்களை திருத்தமாக வெளிப்படுத்துதல்.சொல்வளம் பெருக்குதல் சொற்களின் இணைப்பை விதிகளைப் பின்பற்றி அமைத்திடச் செய்தல் சொற்களின் பொருளறிந்து பேச பழுக்குதல் சரியான வேகத்தில் சொற்களை வெளிப்படுத்த உதவுதல்.பொருத்தமான குரல் ஏற்ற இறக்கத்துடன் பேசச் செய்தல் பேசும்போது பொருத்தமான சைகைகளை இணைத்தல் மூலம் பேசும் கருத்தினை மற்றவர்களுக்கு எளிதாக புரிய வைக்க முடியும் என்பதை உணர்த்துதல் போன்ற செயல்களே வாய்மொழிப் பயிற்சியின் முக்கிய நோக்கங்களாகும்.

**வகுப்பறையில் பேச்சுமொழியினை வளர்த்தல்**

மாணவர்களிடம் திறன்மிகு பேச்சுமொழியை வளர்த்திடுவதற்கான வகுப்பறைக் கற்பித்தலில் ஐந்து ஆக்கக்கூறுகள் உள்ளதாக மொழியலாளர்கள் கூறுகின்றனர். அவையாவன: கேட்டல் மற்றும் பேச்சுத் திறன்களை மேம்படுத்துதல் மொழியின் எழுவித பயன்பாட்டிலும்

சரியான சொற்களை பயன்படுத்திட உரிய பயிற்சி அளித்தல்.பேச்சு மொழியைக் கற்பதற்கான உகந்த சூழலை உருவாக்குதல் சொல்வளத்தைப் பெருக்குதல் பேச்சு மொழியில் தம்மிடம் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அறியச் செய்தல் இனி இவை பற்றி விரிவாகக் காண்போம்.

**கேட்டல் மற்றும் பேச்சுத் திறன்களை மேம்படுத்துதல்**

கேட்டல் மற்றும் பேச்சுத் திறன்களைக் கற்பிக்க ஆசிரியர் மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும். மாணவர்களை இரண்டு பேர் இணைகளாகப் பிரித்து ஒவ்வொரு இணையிலும் ஒருவர் பேச மற்றொருவர் கேட்டக பின் இரண்டாமவர் பேச முதலாமவர் கேட்க அவற்றை வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களும் கவனிந்துப் பார்த்திடச் செய்திடலாம். இதே போன்று ஒவ்வொரு இணையையும் வகுப்பில் செயல்படச் செய்யலாம். இப்பயிற்சியின் மூலம் எப்போது பேச வேண்டும் எப்போது செவிசாய்க்க வேண்டும் என்பதை மாணவர்கள் கற்றறிவர். இதனை நன்கு கற்றாலதான் இடைவினையாற்றலில் சரியானபடி இயங்க முடியும்.ஒருவர் பேசி முடிக்கும் வரை பொறுமையாகக் கேட்காமல் இடையிடையே மற்றவர் குறுக்கிட்டுப் பேசினால் இடைவினை தொடர்புகள் சிறப்பாக நடைபெறாது.

**மொழியின் ஏழுவித பயன்பாட்டிலும் சரியான சொற்களை பயன்படுத்திட உரிய பயிற்சி அளித்தல்**

**மைக்கேல் ஹாலிடே** என்னும் ஆங்கிலேய மொழியிலாளரின் கருத்துப்படி மொழி பின்வரும் ஏழு விதங்களில் பயன்படுகிறது.கருவியாகப் பயன்படுதல் தேவைகளை வெளிப்படுத்துதல், நெறிப்படுத்துதல் பிறரைக் கட்டுப்படுத்துதல், கலந்துரையாடல், பிறரோடு சுமுகமாக கருத்தளாவுதல், தன் உணர்வுகளை வெளிப்படுத்துதல், தனது சூழ்நிலையை தானே கண்டறிதல், கற்பனை செய்திடல், கதைகளை புனைதல், குறியிடுதல் தகவலளித்தல்.மேற்கண்ட மொழியின் எழுவித பயன்பாட்டிலும் பயன் படுத்த வேண்டிய சொற்களின் அமைப்பை மாணவர்களுக்கு கற்பித்தல் அவசியம்.

**பேச்சு மொழியைக் கற்பதற்கான உகந்த சூழலை உருவாக்குதல்**

பேச்சு மொழிக்கான உகந்த சூழல் மூன்று பகுதிகளைக் கொண்டது (அ) புறச்சூழல் (ஆ)வகுப்பறைப் பண்பாடு (இ) தகவல் பரிமாற்றத்திற்கான வாய்ப்புகள். குழந்தைகளின் பேச்சு மொழியை வளர்த்திடுவதற்கான புறச்சூழலை விளையாட்டுப் பொருட்கள் ஆடை அலங்காரப் பெட்டிகள் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்ட மேஜை போன்றவை மூலம் செழுமைப்படுத்த முடியும்.வகுப்பறைப் பண்பாடு என்பது மாணவர்களிடம் பண்பாட்டு வேறுபாடுகளை மதித்து நடத்தல் சமத்துவம் தனது முறைவருவதற்காகக் காத்திருத்தல் போன்ற பண்புகளை மேம்படுத்திடும் வகையில் அமைந்திருக்க வேண்டும்.தகவல் பரிமாற்றத்திற்கான வாய்ப்புகள் என்பது மாணவர்கள் ஒன்று சேர்ந்து பாடுதல் வாசித்தல் செய்யுளை ஒப்பித்தல் போன்ற செயல்களில் ஈடுபட போதிய வாய்ப்புகளை உருவாக்கித் தருதலாகும்.

**சொல்வளத்தைப் பெருக்குதல்**

ஆசிரியா் முதலில் மாணவா்கள் அனைவருக்கும் தெரிந்த சொற்களைக் கூறுவாா்.பின்பு படிப்படியாக கடினமான அறிமுகம் இல்லாத புதிய சொற்களைக் கூறி அதற்கான பொருளையும் விளக்குவாா்.மாணவா்கள் ஒவ்வொருவரும் தினந்தோறும் ஒரு புது சொல்லை வகுப்பில் கூறி அதன் பொருளையும் தெரிவிக்கச் செய்வதன் மூலம் மாணவா்களின் சொல்வளம் பெருகும்.

**பேச்சு மொழியில் தம்மிடம் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அறியச் செய்தல்**

பிறந்தது முதல் குழந்தை தனது சுற்றுச்சூழலைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் குடும்ப உறுப்பினா்களோடு தொடா்பு கொள்ளவும் மெல்ல மெல்ல கற்றுக் கொள்கிறது. குழந்தைகள் கற்றுக் கொள்பவை அவா்களது பேச்சு வெளிப்படும் விதத்தில் பிரதிபலிக்கின்றன.ஒருவா் மொழியொன்றைக் கற்றுக் கொள்வதில் பல படிநிலைகள் உள்ளன.

ஆறு முதல் எட்டு மாதங்களில் குழந்தைகள் வெவ்வேறு ஒலிகளை எழுப்பும் 9 முதல் 18 மாதங்களில் குழந்தைகள் ஒற்றைச் சொல் பேச்சையே வெளிப்படுத்தும். 18 முதல் 24 மாதங்களில் இரட்டைச் சொற்கள் கொண்ட வாக்கியங்களைப் பேசும் எ-டு நீ வா, உள்ளே போ, எனக்குத் தா போன்றவை 24 முதல் 30 மாதங்களில் பல சொற்களைக் கொண்ட வாக்கியங்களைப் பேசும் ஆனால் இலக்கணம் சரியாக பொருந்தி வராது. 30 மாதம் முதல் அதன் பேச்சு தெளிவடைவதுடன் சாரளமாகவும் இருக்கும்.

முதல் மொழியைக் கற்றுக் கொளவது மழலைப் பருவத்தில் நடைபெறுகிறது.அப்போது குழந்தை உணா்ந்து சிந்திப்பதில்லை பிறா் செய்வதைப் பாா்த்து தானும் செய்ய முற்படுவதே அதிகம். ஆனால் இரண்டாவது மொழியைக் கற்றல் பின்பள்ளைப் பருவம் அல்லது முன் குமரப்பருவத்தில் நடைபெறும்போது (12 அல்லது 13 வயதில்) குழந்தை எதையும் உணா்ந்து சிந்தித்து செயல்படுவதால் அவா்கள் தமது செயல் எந்த அளவு சரியானது என்பதை நன்கு உணா்ந்தறிய முடியும்.எனவே இரண்டாவது மொழியைக் கற்பிக்கும் ஆசிரியா்கள் மாணவா்கள் பேச்சில் உள்ள உச்சரிப்புக் குறைபாடுகள் வாா்த்தை இணைப்புக் குறைபாடு சீரான வேகமின்றி பேசுதல் போன்றவற்றை சுட்டிக்காட்டி அவற்றை திருத்திக் கொள்ளச் செய்ய வேண்டும்.

**எழுத்து மொழி**

மொழி என்பது இரண்டு விதங்களில் வெளிப்படுத்துகிறது1.பேச்சு மொழி 2.எழுத்து மொழி எழுதுதல் என்பது ஒலி வடிவிலான குறியீடுகளிலிருந்து சித்திர வடிவிலான குறியீடுகளாக மாற்றிடும் செயல் என்று **ஒயிட்டுண்டு** வரையறுக்கிறாா். அதாவது **பொருளுடைய ஒலிக்குறியீடுகளை உரிய விதிகள் (உச்சரிப்பு விதிகள் இலக்கண விதிகள் வாக்கிய அமைப்பு**

**விதிகள் போன்றவை) மற்றும் மரபுகளைப் பின்பற்றி சித்திர உருவில் வரிவடிவமாக மாற்றியமைத்தலே எழுதுதல் ஆகும்.**

பேச்சில் வெளிப்படும் எண்ணங்கள் எழுத்து வடிவைப் பெற்றால்தான் அவை நிலைத்து நீடித்திருக்கும் ஒரு சமூகத்தின் பண்பாடு ஓங்கி உயர வேண்டுமெனில் அது எழுத்து வடிவிலான மொழியைப் பெற்றிருக்க வேண்டும்.மொழியின் வாயிலாகவே பண்பாடு பாதுகாக்கப்பட்டு ஒரு தலைமுறையினரிடம் இருந்து அடுத்த தலைமுறையினரிடம் சேர்ப்பிக்கப்படுகிறது.

**பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையேயான வேறுபாடுகள்**

| **பேச்சு மொழி** | **எழுத்து மொழி** |
|---|---|
| ஒலிக் குறியீடுகளாவானது | ஒலிக் குறியிடுகளுக்கான சித்திர வடிவிலான குறியீடுகளாலானது. |
| பேசுதலில் ஒலியை எழுப்பி கட்டுப்படுத்தும் மூச்சுக்குழாய் வாய் உதடு நாக்கு குரல்நாண் போன்றவை முக்கிய இடம் பெறுகின்றன. | எழுதுதலில் கை விரல்கள் மற்றும் முகம் போன்றவை முக்கிய இடம் பெறுகின்றன. |
| பேச்சுமொழியில் சொல்லின் பொருள் அது இடம் பெறும் சூழல் மற்றும் தொனியைப் பொறுத்து அமைகிறது. | எழுத்து மொழியில் சொல்லின் பொருள் உரைக் குறிப்புகளிலிருந்து நேரடியாக பெறப்படுகிறது. |
| பேச்சு மொழி தகவல் மற்றும் பேசுபவருக்கும் கேட்பவருக்கும் இடையிலான உறவினை அகவயத் தன்மையோடு வெளிப்படுத்துகிறது. | எழுத்துமொழி தகவல்களை புறவயத்தன்மையுடன் வெளிப்படுத்துகிறது. |
| பேச்சு என்பது மனிதனிடம் இயல்பாக அமைந்துள்ள ஆற்றலால் உருவாகிறது. | எழுத்து என்பது மனிதனின் அரிய கண்டுபடிப்பாகும். மனிதப் பண்பாட்டு வளர்ச்சியின் முக்கியக் கூறாகும். |
| பேச்சு மொழியில் சொற்களின் பொருள் ஒலிக் குறிகளோடு தொனியையும் சார்ந்தே அமைந்துள்ளது. | எழுத்து மொழியில் சொற்களில் தொனிக்கு இடமில்லை. |
| பேச்சு நீடித்து நிலைத்திருக்காது | ‘எழுத்து’ நீடித்து நிலைத்து இருக்கக் கூடியது எனவே எழுத்து மொழி மூலமே ஒரு சமூகத்தின் பண்பாடு அடுத்தடுத்த தலைமுறையினரிடம் சேர்ப்பிக்கப்படுகிறது. |
| பேச்சு மொழியில் அபிநயங்களுக்கு இடம் உண்டு. | எழுத்து மொழியில் அபிநயங்களுக்கு இடமில்லை. |

**வகுப்பறையில் எழுத்துமொழியை வளர்த்தல்**

பள்ளிக் கல்வியினில் சிறந்த அடைவினை எய்திடவும் இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொழிலகங்களில் பணி புரிந்திடவும் ஒருவருக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருத்தல் இன்றியமையாததாகும். எழுதுதல் என்பது பல்வேறு திறன்களை உள்ளடக்கியது ஆகும்.அவற்றில் முக்கியமானவை வருமாறு

-பேசும் மொழியின் பினபுலத்தையும் அதனைப் பேசுவதில் அனுபவமும் கொண்டிருத்தல். -ஒலிக்குறிப்புகளுக்கு உரிய சித்திர வடிவை அறிந்திருத்தல்.

-சொற்களைக் கொண்டு முறையாக வாக்கியங்களை அமைத்திடும் விதிமுறைகளை அறிந்து பயன்படுத்துதல்.

-ஒரு குறிப்பிட்ட சூழலில் பயன்படுத்த வேண்டிய சொற்களை அறிந்திருத்தல்.

-எழுத்துகளை தெளிவாகவும் ஒரே சீரான அளவிலும் இடைவெளி கொண்டு இருக்குமாறு எழுதுதல்

-சொல்ல எண்ணியதை எழுத்துவடிவில் வெளிப்படுத்தும் திறன் பெற்றிருத்தல்.

-பொருத்தமான பத்தி அமைத்து எழுதுதல்.

-குறிப்பிட்ட உரையை எழுத்து வடிவில் அமைத்திடும் செயல்முறையில் இடம பெறும் படிநிலைகளில் பயிற்சியளித்தல்

-மாணவர்களிடம் எழுத்து மொழியை வளர்ப்பதில் முக்கிய இடம் பெறுகிறது.

பயிற்சியளித்தலின் படிநிலைகளாவன:

- **எழுதுவதற்கான ஆயத்த நிலை**
- **முன்வரைவைத் தயாரித்தல்**
- **திருத்தியமைத்தல்**
- **சரியான முறையில் தொகுத்து அமைத்தல்**
- **இறுதிவரைவை வெளியிடல்**

**எழுத்துமொழிப் பயிற்சியை கல்வியின் பல்வேறு நிலைகளில் அளித்திடும் முறைகள்**

**தொடக்க நிலைப் பள்ளி வகுப்புகள்**

படக்காட்சித் தொகுப்பினைப் பார்த்து ஒவ்வொரு படமும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுதல் சொல்லுவதைக் கேட்டு எழுதுதல் கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்தல் போன்றவை.

**நடுநிலைப்பள்ளி வகுப்புகள்**

படத்தொகுப்பினைப் பார்த்து அவற்றின் மூலம் வெளிப்படும் கதையை எழுதுதல் கட்டுரை எழுதுதல் கடிதம் எழுதுதல் சுருக்கி வரைதல் மொழி பெயர்ப்பு பட்டியலிலுள்ள சொற்களை இணைத்து பல்வேறு வாக்கியங்களை உருவாக்குதல் போன்றவை.

**உயர்நிலைப்பள்ளி வகுப்புகள்**

விரித்து எழுதுதல், கட்டுரை வடித்தல், திறனாய்வுக் கட்டுரை தயாரித்தல், மொழி பெயர்ப்பு நேர்காணல் கண்டு அதனைத் தொகுத்தளித்தல் தொடர்பு உடைய வாக்கியங்களை பட்டியல் இடுதல், ஒருபக்கக் கதை எழுதுதல், கடிதம் வரைதல் போன்றவை.

**மொழியும் பண்பாடும்**

மொழி என்பது பேச்சு மற்றும் எழுத்து வாயிலான தகவல் பரிமாற்றத்திற்கான முறைமையாகும். இதன் பகுதிகள் ஒவ்வொன்றும் சிக்கலான உறவுகளை தமக்குள் கொண்டிருந்தாலும் அவை ஒழுங்குற அமையப் பெற்றுள்ளன. தகவல் பரிமாற்றம் மட்டுமே மொழியின் பணியல்ல. கனவு காண்பதற்கும் தனக்குள்ளேயே உறவாடிக் கொள்வதற்கும் கவிதைகள் புனைவதற்கும் கூட மொழி பயன்படுகிறது. மொழியின் துணையின்றி விவாதங்களை மேற்கொள்ள இயலாது. பண்பாட்டின் ஒரு கூறாக அமைந்திருக்கும் மொழி மனித வாழ்வில் குறிப்பிடத்தக்க பங்கு பெற்றுள்ளது.மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கும் மொழி உதவுகிறது. இதுவே மனிதர்கள் தொடர்பு கொள்வதற்கான முக்கிய கருவியாக மொழி விளங்குவதை புலப்படுத்துகிறது. அதோடு மட்டுமின்றி தனது கருத்துகளை வெளியிடவும் மக்களை இணைத்திடவும் சமூகநெறிகளை மனமுவந்து ஏற்றுக்கொள்ளவும் சமூகக் கட்டுப்பாட்டினை பேணிப் பாதுகாக்கவும் மொழி தேவைப்படுகிறது.

**பண்பாடு**

பண்பாடு என்பதைப் பாடறிந்து ஒழுகல் என தமிழ் இலக்கணம் வரையறுத்துள்ளது. பண்பாடு என்பது பழக்க வழக்கங்கள் நாகரீகம் குறிப்பிட்ட கால கட்டத்தில் வாழ்ந்த மக்களது சாதனைகள் படைப்புகள் ஆகியவற்றைக் குறிக்கிறது. ஒரு தலைமுறை மக்கள் தங்களது அடுத்த தலைமுறையினருக்கு வழங்கக்கூடிய அனைத்துமே பண்பாட்டில் உள்ளடங்கும். பண்பாடு என்பது மக்களின் சமூகப் பாரம்பரியத்தைக் குறிக்கிறது. பண்பாடு என்ற சிக்கலான முறையில் அறிவு நம்பிக்கைகள் கலைகள் ஒழுக்க நெறிகள் சட்டம் மரபுகள் உணவு தயாரிக்கும் முறை

தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியனயாவும் அடங்கும் என்கின்றனர் **ஸதர்லேண்டு மற்றும் உட்வோர்டு**

சுருங்கக்கூறின் பண்பாடு என்பது ஒரு மக்கள் பிரிவினரின் வாழ்க்கை முறை ஆகும்.அதாவது பண்பாடு என்பதில் நெறிமுறைகள் அல்லது நியதிகள் விழுமங்கள் நடத்தைப்பாங்கு நடத்தைப்பாணி போன்ற யாவும் உள்ளடங்கும்.

பண்பாடு என்பது தகவல் தொடர்பின் அடையாளம் என்றும் கூறலாம். அதை ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவினரது அறிவு மனப்பான்மைகள் விழுமங்கள் உட்கிடக்கைகள் ஆகிய அடையாளங்களால் புலப்படுத்தும் தன்மையுடையது எனலாம்.சமூகம் தனது அமைப்புகள் மூலம் பண்பாட்டுக் குறியீடுகளுக்கான பொருளைக் கற்று தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து நீடிக்கச் செய்கிறது.

**பண்பாட்டின் முதன்மைக் கூறுகள்**

வெவ்வேறு மக்கள் சமூகங்களின் பண்பாடுகள் வேறுபட்டு காணப்பட்ட போதிலும் அவை யாவுமே நான்கு முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளன. அவையாவன:

1. **பண்பாடு**

பொருள்சார் அல்லது பண்டங்கள்சார் பண்பாட்டுக் கூறுகள்

பொருள்சாரா பண்பாட்டுக் கூறுகள்

2. **தகவல் தொடர்பு சார்ந்த கூறுகள்**
3. **அறிவுசார் கூறுகள்**
4. **நடத்தைசார் கூறுகள்**

**2. தகவல் தொடர்பு சார்ந்த கூறுகள்**

பண்பாட்டின் தகவல் சார்ந்த கூறுகளில் மொழியும் குறியீடுகளும் அடங்கும்.ஒரு சமூகக் குழுவில் உள்ளோர் தமது குழுவின் மொழி மூலம் தமக்குள் இடைவினைகள புரிந்திடவும் உணர்வுகளையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளவும் முடிகிறது.மொழியே பண்பாடுகளின் உள்மையமாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட பண்பாட்டைச் சேர்ந்தோர் குறிப்பிட்ட குறியீடுகளுக்கு ஒரே மாதிரி பொருள் கொள்கின்றனர். வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தோர் வெவ்வேறு குறியீடுகளைப் பயன்படுத்துகின்றனர். அரசியல் சமயம் மொழி உணவு நடையுடை பாவனைகள் போன்ற பண்பாட்டு அடையாளங்கள் வெவ்வேறு சமூகத்தில் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

காலப்போக்கில் பண்பாட்டு அடையாளங்களில் மாற்றம் ஏற்படக்கூடும் எனினும் பண்பாட்டு வேறுபாடுகளைக் குறிக்கும் அடையாளங்கள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும்.

### 3. அறிவுசார் கூறுகள்

அறிவுசார் ஆக்கக்கூறுகளே பண்பாட்டின் சிறந்த கூறாகும். இதில் கருத்துகள் நம்பிக்கைகள் மதிப்புகள் நடத்தை விளக்கங்கள் ஆகியவை அடங்கும்.

கருத்துகள் மனதில் தோன்றும் உதிரியான பிரதியீடுகள் இவை தூண்டல்களோடு தொடர்புடையவை கருத்துகள் ஒருங்கிணைக்கப்பட்ட பெரிய தகவல் அமைப்பாக மாறி அறிவினைக் கட்டமைகக்கிறது. அறிவு என்பது தகவல்கள் தொகுக்கப்பட்டு சேமித்து வைக்கப்பட்டிருப்பது ஆகும். இதனை பாதுகாத்து ஒரு தலைமுறையினரிடம் இருந்து அடுத்த தலைமுறையினருக்கு அளித்திடமுடியும்.

நம்பிக்கை என்பது ஒரு கருத்துரை கூற்று உண்மைச்செய்தியின் விளக்கம் ஆகியவை ஆராய்தல் ஏதுமின்றி அப்படியே ஏற்கப்படுவதாகும்.சமயம் அரசு அறிவியல் ஆகியவற்றின் செல்வாக்கினால் நம்பிக்கைகள் ஏற்புத்தன்மை பெறுகின்றன ஆனால் அவை தனி மனிதர்கள் தமது நேரிடை அனுபவங்கள் மூலம் உண்மையென கண்டறியப் பட்டவை அல்ல.

விழுமங்கள் சமூக வாழ்க்கையின் வழிகாட்டிகள் பண்பாட்டு நோக்கில் விழுமங்கள் என்பவை விரும்பத்தக்கவை நற்பண்புகள் அழகுணர்வு ஆகியவற்றின் பிரதிபலிப்புகள் ஆகும்.பண்புடையோராயிருத்தல் அறிவுடையோராக மட்டும் இருப்பதிலும் மேம்பட்டது, நடத்தை விளக்கங்கள் என்பவை மக்கள் தமது நடத்தைகளுக்கும் பிறரது நடத்தைகளுக்கும் நியாயம் கற்பிக்க மொழியைப் பயன்படுத்தும் வழிமுறையாகும்.

### 4. நடத்தைசார் கூறுகள்

மனிதர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதைக் குறிப்பதே பண்பாட்டின் நடத்தைசார் கூறுகளாகும். இதில் நெறிமுறைகள் சட்டங்கள் சடங்குகள் சம்பிரதாயங்கள் போன்றவை அடங்கும்.

நியதிகள் என்பவை சமூகத்தால் எதிர்பார்க்கப்படும் நடத்தைத் தரங்கள் ஆகும். இவை பரிசளித்தல் பாராட்டுதல் தண்டனைகள் வழங்குதல் போன்றவை மூலம் நிலைநிறுத்தப்படுகின்றன.சமூக உறுப்பினர்கள் யாவரும் இந்நியதிகளின்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவர்.

சம்பிரதாயங்கள் என்பவை வழிவழியாக வந்த பழக்க வழக்கங்கள் ஆகும். இவற்றிற்கு அடிப்படை ஒழுக்கம் பற்றிய திடமான உணர்வுகளாகும்.

சட்டங்கள் என்பவை அரசால் முறைப்படி வகுக்கப்பட்டவை குடிமக்கள் அனைவருக்கும் பொதுவானவை.இவற்றிற்குக் கட்டுப்படுதல் குடிமக்களது கடமை ஆகும். மீறுபவர்கள் நீதிமன்றங்களால் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்.

சடங்குகள் என்பவை குறிப்பிட்ட நடைமுறைகளைக் கொண்டவை இவை சமூகத்தில் திரும்பத் திரும்பச் செய்யப்படுபவை.இச்சடங்குகள் தவறாது அனைவராலும் பின்பற்றப்பட வேண்டியவையாகும். சமயச்சடங்குகள் சிறிதும் பிறழாது பின்பற்றப்படுதல் உலகெங்கும் காணப்படுகின்றது.

**பொருள்சார் பண்டங்கள்சார் கூறுகள்**

மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள்கள் பொருள்சார் பண்டங்கள் எனப்படும். நாம் பயன்படுத்தும் பல்வகைப் பண்டங்களின் வகைகள் அவற்றின் நேர்த்தி எளிய அல்லது சிக்கலான அமைப்பு போன்றவையும் பண்பாட்டின் வெளிப்பாடுகளாகும். இக்கூறுகள் மேலைநாட்டு நாகரீகத்தில் அறிவியல் முன்னேற்றத்தாலும் செல்வச் செழிப்பாலும் மேலோங்கிக் காணப்படுகிறது.கலைகள் கட்டிடங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பல்வேறு பொருள்கள் போன்றவை பொருள்சார் கூறினில் உள்ளடங்கும்.

**பண்பாட்டைக் கற்பித்தல்**

பண்பாடு குறித்து மாணவர்களுக்குக் கற்பித்தல் என்பது பண்பாடு பற்றிய அறிவுத் தொகுப்பை மாணவர்களுக்கு வழங்கிடல் ஆகும். ஒரு நாடு அந்நாட்டின் மக்கள் அங்குள்ள சமூக அமைப்புகள் மக்களால் பின்பற்றப்படும் நடையுடை பாவனைகள் உணவுப் பழக்க வழக்கங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறு பொருட்கள் பழக்கத்தில் உள்ள பல்வேறு கலைகள் பேசப்படும் மொழிகள் இலக்கியம் போன்ற அனைத்தையும் பற்றிய தகவல்கள் மாணவர்களுக்கு அளித்தலே அந்நாட்டின் பண்பாடு பற்றிய கற்பித்தலாகும்.குடும்பங்களை பண்பாட்டின் விதைநிலங்களாக கொண்டால்கல்வி நிலையங்களை அவற்றைச் சீர்படுத்தும் தோட்டக் கலைஞருக்கு ஒப்பிடலாம்.

பண்பாட்டைக் கற்பித்தலில் பின்பற்றக் கூடிய அணுகுமுறைகளை பின்வரும் **லிட்டிகோட்**விளக்கப்படம் தெளிவுபடுத்துகிறது.

| 1 கலைமற்றும் நுட்பப் பொருட்கள் மற்றும் நிறுவனங்கள் |
| --- |

| உண்மைக் கருத்துகள் | செயல்முறைகள் |
| --- | --- |

| நடைமுறைகள் |
| --- |

1.மாறாத்தன்மை கொண்ட பண்பாட்டின் பொருளடக்கமும் மாறாத்தன்மை கொண்ட கற்றல் அணுகுமுறையும்

2.மாறாத்தன்மை கொண்ட பண்பாட்டின் பொருளடக்கமும் இயங்குதன்மை கொண்ட கற்றல் அணுகுமுறையும்

3.மாறாத்தன்மை கொண்ட கற்றல் அணுகுமுறையும் இயங்கு தன்மையுடைய பண்பாட்டின் பொருளடக்கமும்

4.இயங்கும்தன்மை கொண்ட பண்பாட்டுப் பொருளடக்கமும் கற்றலும்

மேற்கண்ட விளக்கப்படத்தில் பண்பாட்டிற்கான இரண்டு பரிமாணங்கள் ஊடச்சுகளாக உள்ளன.ஒன்று பண்பாட்டின் கருத்துகளின் தொகுப்பாக கருதுதல் அல்லது செயல்முறைகளாக கருதுதல் அதாவது பண்பாடு என்பதனை அது தொடர்பான கருத்துக்களின் தகவல் தொகுப்பாகக் கருதுதல் (இயங்கா நிலையானது) அல்லது பண்பாட்டினை அதன் செயல்முறைகள் கொண்டு அறிதல் (இயங்கும் நிலையானது).

இதுபோன்றே இரண்டாவது பரிமாணம் அல்லது ஊடச்சு பண்பாட்டினை கற்பிப்பதற்கான பாடப்பொருள் அல்லது அதில் இடம் பெறும் கைவினைப் பொருட்கள் நிறுவனங்கள் நடைமுறை பழக்கவழக்கங்கள் என்று கருதுவதன் மூலம் பண்பாட்டினை அறிதல் ஆகும்.அதாவது பண்பாடு என்பதை சமூகத்தால் உருவாக்கப்பட்டவற்றின் மூலம் அறிந்திடல் அல்லது சமூக உறுப்பினர்கள் இயற்றியவை படைத்தவை மூலம் அறிந்திடல் எனக் கருதுதல்.

பண்பாட்டினை இயங்காநிலை அணுகுமுறை மூலம் கற்பித்தல் என்பது கலை மற்றும் நுட்பப் பொருட்கள் சமூக நிறுவனங்கள் ஆகியவை தொடர்பான பல்வேறு கருத்துகளை மாணவர்களுக்கு தகவல்களாக வழங்குதல் ஆகும். இங்கு கற்பிக்கப்படும் பாடப்பொருளும் கற்பிக்கும் முறையும் இயங்கா நிலை அணுகுமுறைப்படி அமைந்தவை ஆகும். இது படத்தில்

இடது மேல் கால் பாகத்தினால் குறிப்பிடப்படுகிறது.கற்பித்தலில் இயங்காநிலை அணுகுமுறையையும் கற்பிக்கப்படும் பாடப்பொருள் இயங்குநிலை அணுகுமுறையையும் கொண்டிருத்தலை படத்தில் இடது கீழ்பாகம் குறிக்கின்றது.விளக்கப்படத்தில் கற்பிக்கப்படும் பாடப்பொருள் இயங்கா நிலை அணுகுமுறை கொண்டும் கற்பிக்கும் முறை இயங்கும் நிலை அணுகுமுறையைக் கொண்டிருத்தலும் வலது மேல் கால் பாகத்தால் குறிக்கப்படுகின்றது.அதாவது பண்பாடு தொடர்பான கலைகள் நுட்பப பொருட்கள் போன்றவற்றின் செயல்பாடுகளில் மாணவர்களை நேரிடையாக ஈடுபடச் செய்தல் மூலம் கற்பித்தலை இது குறிக்கிறது. பண்பாடு தொடர்பான பாடப்பொருள் மற்றும் கற்பிக்கும் முறையில் இயங்குநிலை அணுகுமுறையைப் பயன்படுத்துவது விளக்கப்படத்தில் வலது கீழ் பாகத்தால் குறிக்கப்படுகிறது. இதுவே பண்பாடு கற்பித்தலுக்கான மிகச் சிறந்த அணுகுமுறையாகும்.அதாவது பண்பாடு சார்ந்த நடைமுறைகளில் மாணவர்களை நேரிடையாக ஈடுபட்டு சுய அனுபவம் பெறச் செய்தல் மிகச் சிறந்த கற்பித்தல் அணுகுமுறையாகும்.

**பண்பாடுகளுக்கு இடையே உள்ள தொடர்புகளை அறிதல்**

பண்பாடுகள் நெருங்கி வருகின்றன. பன்னாட்டு வணிகம் சுற்றுலா குடிபெயர்தல் குடியேறல் ஊடகங்களின் தாக்கம் உலக அமைப்புகளின் பணிகள் ஆகியவை பண்பாட்டு நல்லுணர்வை வளர்க்க உதவியுள்ளன.

பண்பாடுகளுக்கிடையே புரிதலை மேம்படுத்த சில வழிவகைகளை கல்வி நிலையங்கள் மேற்கொள்ளலாம்.அவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளன.

-மொழி வாயிலாக வெளிப்படும் பண்பாட்டு ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் கூர்ந்து கவனித்தல்.

-பிறிதொரு மொழி மற்றும் பண்பாட்டை முன்பே அறிந்து கொண்ட மொழிகள் மற்றும் பண்பாடுகளுடன் ஒப்பிடல்.

-ஒருவர் அணுபவ வாயிலாக அறிந்து கொண்ட மொழி மற்றும் பண்பாட்டு வேறுபாடுகளை எவ்வாறு எடுத்துகக் கொள்கிறார் என சிந்தித்துப் பார்த்தல்.

-பன்முகத்தன்மை பற்றிய உணர்வு அதை எவ்வாறு ஆக்க முறையில் ஏற்பது என்பது பற்றி ஆராய்தல்.

பண்பாட்டு வேறுபாடுகளைப் பற்றி நன்கறிந்து கொண்டு தனது அனுபவ அறிவையும் அத்துடன் இணைத்து தான் புரிந்து கொண்டதைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதும் விளங்குமாறு உரைத்தலும் பண்பாட்டுத் தாக்கத்ததை உரிய ஆக்கபூர்வமான முறையில் எதிர்கொள்ளலும் விரும்பத்தக்க செயல்களாகும்.

**மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையேயான தொடர்பு**

பண்பாடு என்பது மனித உள்ளத்தின் விளைபொருளாகும். அது மொழியால் காக்கப்பட்டும் விளக்கப்பட்டும் பேணப்பட்டும் வருவதாகும்.மொழிக்கும் பண்பாட்டிற்குமிடையே பரஸ்பர ஒத்துழைப்பு நிலை உள்ளது.எனினும் இவை இரண்டும் தனித் தன்மை உடையவை. பல சூழல்களில் இன வட்டார தேசிய அகில உலக அடையாளத்தின் அடிப்படையாகவும் உள்ளன. மொழி என்பது பண்பாட்டையும் பண்பாட்டுப் பிணைப்புகளையும் நிலைநிறுத்திக் கொள்ள உதவுகிறது. ஒரே மொழி பேசுவோரிடையே வெவ்வேறு கருத்துகள் அவர்கள் பேச்சில் காணப்படும் தொனி மற்றும் முகபாவ மாற்றங்களால் வெவ்வேறாகப் பொருள் கொள்ளப்படும். இதை நாடகங்களிலும் திரைப்படங்களிலும் காணலாம். ஒரு மொழியின் சொற்களுக்கு அம்மொழியின் பின்புலத்தில் அமைந்துள்ள பண்பாட்டுச் சூழலின் அடிப்படையிலேயே பொருள் கொள்ளப்படுகிறது. எல்லாக் குழந்தைகளும் பிறப்பில் ஒரே மாதிரியாக இருப்பினும் அவர்களது பண்பாட்டுச் சூழலே அவர்களைப் பின்னர் தனி ஆளுமைகளாக உருவாக்குகிறது. இக்கருத்தைச் சீன மேதை கன்பயூஷியஸ் அவர்களும் விவாதித்துள்ளார். புதியதோர் மொழியைக் கற்பது என்பது புதியதோர் பண்பாட்டை அறிவது என பல கல்வியாளர்கள் கருதுகின்றனர்.

மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மொழியின் தனித்தன்மை முதல்மொழியோடு உள்ள ஒற்றுமை- வேற்றுமைகளை சுட்டிக் காட்டலாமே தவிர எந்த ஒரு மொழியும் மற்றதை விட மேம்பட்டது என்கிற கருத்தை விதைக்கக் கூடாது.

**கிரெச்** என்பார் மொழி –பண்பாட்டு இடைவினையை தொகுத்துக் கூறியுள்ளார்.அக்கருத்துக்களாவன:

மொழி என்பது அடிப்படையில் தகவல் தொடர்பிற்கான கருவியாகும்.ஒரு சமூகப் பிரிவினரின் பண்பாட்டுக் கூறாகவும் உள்ளது.

மொழியிலுள்ள சொற்களுக்கு அம்மொழி இயங்கும் பண்பாட்டு அடிப்படையிலேயே பொருள் கொள்ளப்படுகிறது.சொற்களின் உச்சரிப்பு பயன்பாடு பொருள் ஆகியவை பண்பாட்டு அடிப்படையிலேயே அமைகின்றன.

மொழி என்பது தனி நபரது ஆளுமை மற்றும் அவரது பண்பாட்டு மரபையும் பிரதிபலிக்கிறது.

மொழி பண்பாட்டை பேணிப் பாதுகாத்திடவும், வளர்த்திடவும், இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தி வழங்குவதுடன் சமூகத்தின் தொடர்ச்சிக்கும் சமூகக் குழுக்களை திறம்பட செயற்படச் செய்யவும் கட்டுப்படுத்திடவும் பயன்படுகிறது.

**முடிவுரை**

மொழி என்பது பண்பாட்டின் முக்கியமான ஆக்கக்கூறுகளில் ஒன்று.மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்தியது மொழியே.விலங்குகளிலிருந்து மனிதன் வேறுபடும் முக்கிய அம்சம் மொழியே ஆகும்.பண்பாடு என்பது மனித மனத்தின் படைப்பாகும்.அதனை நன்கு வரையறை செய்திடவும் பேணிப் பாதுகாத்திடவும் ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்தடுத்த தலைமுறையினரிடம் சேர்ப்பித்திடவும் மொழி அவசியமாகிறது. பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் வாழ்வியல் முறையைக்க குறிக்கிறது. வாழ்வியல் முறையின் முக்கிய அங்கம் மொழி. மொழி வழியேதான் சமூக இடைவினைகள் நடைபெறுகின்றன. மொழியும் பண்பாடும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்துள்ளன. ஒரு மொழியைக் கற்பது என்பது அம்மொழி பேசுவோரது பண்பாட்டுச் சூழலை அறிவது என்பதேயாகும்.

இவ்வுலகினில் மொழி என்பதன் பொருள் மற்றும் வரையறைகள் மொழி என்பதன் கருத்தாக்கம் மொழியின் சிறப்பியல்புகள் மொழியின் வகைபாடு மொழியின் முக்கிய பணிகள் வீட்டுமொழியும் பள்ளி மொழியும் ஆவது தாய்மொழியும் இரண்டாவது மொழியும் முதல் மொழி அல்லது தாய்மொழியின் முக்கியத்துவம் இரண்டாவது மொழியைக் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் உத்திகள் கற்பவரிக் மொழிப் பின்புலத்தை புரிந்து கொள்ளுதல் இரண்டாவது மொழியைக் கற்பதில் உள்ள சிக்கல்கள் மொழியைக் கற்பித்தலில் அடங்கியுள்ள கோட்பாடுகள் பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையேயான வேறுபாடுகள் வகுப்பறையில் வாய்மொழி மற்றும் எழுத்து மொழியை வளர்த்திடும்உத்திகள் பண்பாட்டின் பொரள் விளக்கம் பண்பாட்டின் ஆக்கக்கூறுகள் பண்பாட்டை கற்பிக்கும் முறைமைகள் பண்பாட்டிற்கும் மொழிக்கும் இடையேயுள்ள தொடர்புகள் ஆகியன பற்றி விளக்கப்பட்டுள்ளது.

**வினாக்கள்**

1. ‘மொழி என்றால் என்ன? அதன் முக்கியப் பணிகளை விளக்குக.

2. பேச்சுமொழி என்றால் என்ன? அது எழுத்து மொழியிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

3. வகுப்பறையில் பேச்சுமொழியையும், எழுத்து மொழியையும் வளர்த்திடும் வழிமுறைகளை விளக்குக.

4. பண்பாட்டினை கற்பிக்கும் அணுகுமுறைகளை விவரிக்க.

## அலகு-2: வகுப்பறையில் மொழியின் பன்முகத்தன்மை

## (Language Diversity in Classrooms)

**பாடப்பொருள் நோக்கங்கள் (COURSE OBJECTIVES)**

இப்பாடப் பொருளினைக் கற்ற பின்பு ஆசிரிய-மாணவர்கள் கீழ்க்காணும் கற்றல் இலக்குகளை அடைவர்.

- முதல் மொழியினை முயன்று அடைதல் மற்றும் இரண்டாம் மொழியினை முயன்று அடைதலை பற்றி அறிந்து கொள்ளல்
- மொழிப்புலமை மற்றும் பாடப்புலமைக்கு இடையேயான தொடர்பினை புரிந்துகொள்ளல்
- மொழியினை முயன்று அடைதல் மற்றும் வளர்ச்சி பற்றிய அறிவினைப் பெறல்

### 2.0.முன்னுரை

மொழி என்பது ஒரு தேசிய, அலுவலக மொழியினை கற்பிக்கப் பயன்படும் பாடமாக பயன்படுத்தப்படுகிறது. மேலும் இது இலக்கியத்துடன் தொடர்புடையது. உதாரணமாக பிரான்ஸ் நாட்டில் பிரெஞ்சும், கிரிஸ் நாட்டில் கிரேக்கமும், தமிழ் நாட்டில் தமிழும் கற்பிக்கப்படுகிறது. மொழி ஒரு பாடமாக சமீபகாலத்தில் பல்வேறு அம்சத்துடன் வளர்ந்து வருகிறது. புதிய தொழில் நுட்பங்கள், புதிய கோரிக்கைகளுடன் பாரம்பரியமாகப் பின்பற்றப்படும் கருத்தினை மாற்றி அமைப்பது அவசியம். ஒன்றுக்கும் மேற்பட்ட தேசிய மொழிகள் கொண்ட நாடுகளில், மொழியின் கருத்தை ஒரு பொருளாகக் கருத முடியாது.

### 2.1. முதல்மொழி, இரண்டாம் மொழியை முயன்று அடைதல்

### (First Language and Second Language Acquisition)

#### 2.1.1. மொழியை முயன்று அடைதல்:- பொருள்: (Language Acquisition – Meaning)

மொழியின் பொதுவான தொடக்கம் என்பது மொழியைப் பற்றி பேசும்பொழுது, அவற்றின் பல்வேறு செயல்பாடுகளில், கருத்துகளை பரிமாறிக் கொள்ளல், மனப்பான்மையை வெளிப்படுத்தல், புரிந்துகொள்ளலை மேம்படுத்துதல், சமூகத்தொடர்புகளை கட்டமைத்தல் போன்றவை உள்ளடங்கும்.

மொழி என்பது இயற்கையாக முயன்று பெறுதல், மொழியின் வழி பண்பாட்டுக் கருத்துகளை வெளிப்படுத்துதல் என்பதனை மறுக்க முடியாது என்பது கருத்தாளர்களின் வாதமாக உள்ளது. இயற்கை என்றால் என்ன? இதில் பல்வேறான கருத்து வேறுபாடுகள்

உள்ளன. 'தொடர்பு' என்பது சில நேரங்களில் வேறுபடுகிறது என்று பேச்சாளர்கள் எண்ணுகின்றனர். மற்றவருடன் தொடர்பு கொள்ளும் பொழுது, எந்த கருத்தாக இருந்தாலும், மிகவும் அற்பமானவற்றை நேரடியாக தொடர வேண்டும் என்ற அவசியமில்லை. ஏனெனில் மக்களின் பார்வை உலக கண்ணோட்டத்திலிருந்து வேறுபட்டது. மொழி பயன்பாட்டளார்களின் பார்வையில், மொழி என்பது - பண்புகளின் குறைபாடுகளில் தெளிவின்மை, கவனிப்பவரின் மழுங்கிய நிலையும் ஒரு பகுதி என்பது தெளிவாகிறது. ஆகையால் சமூகச் சூழல்களில் மறைமுக பேச்சு வார்த்தைகள் மூலம் பெறப்பட்ட பொருள் முக்கியமான கற்பித்தல் முறைமைகளைக் கொண்டுள்ளது. இவை இயற்கையில் மொழியின் அடிப்படை, அவை பயன்பாட்டில் மாறுபடுதல் (பிறழுதல்) , இது நிச்சயமற்ற தெளிவின்மையை பரிந்துரைக்கிறதே - யொழிய புதுமையை பார்க்கவில்லை. இந்த இலக்கியப் பார்வையில் எங்கே தெளிவின்மை பெரும்பாலும் ஏற்படுகிறது என்றால், மொழி கலைத்திட்டத்தின் மத்தியிலிருந்து வித்தியாசப்படுகிறது. ஏனெனில் மொழிப்பாடத்திட்டமானது வெளிப்படையாக நுணுக்கங்களை மற்றும் மொழியின் உபதொகுப்புகளை வெளிப்படுத்துகிறது. இதன் பொருள் கேட்டல் இயல்பு மற்றும் முக்கியத்துவத்தினை நடைமுறைப்படுத்துதல் ஆகும். கேட்டல் என்பது மிக சாதாரண விசயம் அல்ல. சூழமை உணர்வு, சொற்கள் அல்லாத நடத்தை, எண்ணம் ஆகியவற்றை மேலோட்டமாக குறிவிலக்கத்துடன் அறிவது, தவறான புரிதலுக்கு சாத்தியமாகிறது. எல்லா மொழிகளையும் புரிந்துகொள்வதற்கும், ஒரு வெளிநாட்டு மொழியை புரிந்துகொள்வதற்கும் இந்த வகையான பல்கலாச்சார உணர்திறன் மற்றும் திறமை வரம்புமீறாது தேவைப்படுகிறது. வெளிநாட்டு மொழியினை முயன்று அடைவது, மொழி ஒரு பள்ளிப்பாடம் என்பதில் ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பு பற்றிய முழுமையான வாதமாக இருக்கிறது.

மொழியைப் பற்றி புதிய (முற்போக்கான) கற்பனைகளுடன் அதன் பயனடிப்படையில் அதன் பொருளை நோக்குவோமானால், கலாச்சாரத்தோடான ஒப்பந்தங்கள் அல்லது 'வாழ்க்கையின் வடிவங்கள்' மேலும் பெயரிலிருந்து பொருளுடன் இணைந்து உலக நிகழ்வுகளுடன் செல்வாக்கும் பெற்றுள்ளது. வாழ்க்கையின் வடிவம் என்று மொழியின் பொருளை நோக்குவோமானால், அமைப்பின் அடையாளம் என்பதிலிருந்து மொத்தமாக வேறுபடுகிறது. வாழும் மனிதர்களின் நடத்தையின் முக்கியத்துவம், மொழியியல் சாரா நடத்தையுடன் இணைத்து வலியுறுத்தப்படுகிறது. இது இலக்கண அமைப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. இதன் மூலம் ஆசிரியர்கள் வகுப்பறையில் மொழியினை தொழில்சார் சொல்லியலாகவும், மரபுகளை கற்பதற்கான மேலாதிக்கமில்லா ஆதரவாகவும் பயன்படுத்தலாம்.

### 2.1.2.மொழியும் கற்றலும் (Language and Learning)

மொழியின் பணியானது தகவல் தொடர்பிற்குமட்டுமின்றி எண்ணங்களின் மேம்பாட்டோடும் தொடர்புடையதாக உள்ளது. மொழிக் கொள்கையாளர்கள் மொழிக்கும், சிந்தனைக்கும் நுட்பமான

தொடர்புள்ளது என்று கூறுகின்றனர். மேலும் மொழியே எண்ணங்களை தீர்மானிக்கிறது என்று வலியுறுத்துகின்றனர். மொழியும் எண்ணமும் ஒன்றையொன்று சார்ந்துள்ளது என்பதைவிட ஒத்தத்தன்மையுடையது அல்லது ஒன்று மற்றொன்றை தீர்மானிப்பதாக உள்ளது. வகுப்பறையில் மொழியை பயன்படுத்தி பாடக்கருத்துகளை வெளிப்படுத்துவது மற்றும் மேம்படுத்துவதன் மூலம் மொழிக்கும் கற்றலுக்குமிடையேயான தொடர்பினை உணரலாம். மொழியினை கற்றலுக்கான முதன்மை வழிமுறையாக கொள்வோமானால் கற்போர் கற்றலில் துடிப்புடன் ஈடுபடுகின்றனர். மேலும் மொழியானது பாடக்கருத்துக்களை ஆராய்வதற்கும், மேம்படுத்துவதற்கும், நெறிப்படுத்துவதற்கும் பயன்படுகிறது.

மொழியானது சுயமேம்பாட்டில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் நமது உணர்வுகளையும், பொறுப்புகளையும் வரையறை செய்கிறது. மொழியை ஒரு பள்ளிப் பாடமாக வைப்பதற்கான முதன்மையான நோக்கம் கற்போரது சுய வளர்ச்சியை மேம்பபடுத்துவதாகும். இதன் மூலம் மொழியை ஆக்கப்பூர்வமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் பயன்படுத்த முடிகிறது. உதாரணமாக கதை எழுதுதல், பாடல் இயற்றல் மேலும் மொழியினை பள்ளிப்பாடமாக பயன்படுத்துவதால் மாணவர்கள் தங்களுடைய பாடக்கருத்தினை சுயமாக அறிந்துகொள்ளவும் பயன்படுகிறது.

### 2.2. மொழியினை முயன்று அடைதல் (Language Acquisition)

பண்டைய காலங்களில் மொழிக் கற்றலானது மொழி அறிந்தவர்களிடம் இடைவினையாற்றுவதன் மூலம் நடைபெற்றது. இவ்வாறு மொழியினை நாம் அறிவதன் மூலம் மொழியியல் சார்ந்த நுட்பமான அறிவை பெறுவதில் தவறுகள் ஏற்படுகிறது. மனிதர்களின் புலன்காட்சி மற்றும் புரிந்துகொள்ளல் மொழியினை அறிதல் மூலமாக நடைபெறுகிறது. மேலும் தான் புரிந்து கொண்டவற்றை பிறருக்கு உணர்த்த மொழி அவசியமாகிறது. மனிதர்கள் பயன்படுத்தும் சொல்லகராதியை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் கொண்டுவர இயலாது. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப பல்வேறு புதிய புதிய சொற்களும், சொற்றொடர்களும் உருவாக்கப்பட்டு வருகிறது.

### 2.2.1.மொழியினை முயன்று அடைதலும், மேம்பாடும் (Language Acquisition and Development)

பன்மொழிக்கொள்கைகள் மாணவர்கள் தமது அறிவுசார் வளர்ச்சி செயல்பாடுகளில் எவ்விதம் மொழியினை கற்கின்றனர் என்று விளக்குவதோடு மொழியினை சிறப்புற பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. வேறுவகையில் கூறுவோமானால், குழந்தையானது தான் பயன்படுத்தும் மொழியினையுடைய சொற்தொகுப்பு மற்றும் விதிமுறைகளை கற்றுக்கொள்கிறது. உளவியல் கண்ணோட்டத்தின்படி மொழியை முயன்று அடைதல் என்பது சமூக மற்றும் பண்பாட்டுக் கூறுகளைப் பொறுத்தே மொழியினை பற்றிய

தத்துவார்த்த கருத்துக்களுக்கும் தொடர்புடையது. மொழியினை குறுகிய நோக்கில் கற்பிக்காமல், பாடத்துடன் இணைத்து மொழித்திறன்களோடு விரிவாக கற்பிப்பதே மொழிக்கற்பித்தலின் மைய நோக்கமாகும். பண்டைய முறையில் மொழியினை பள்ளிப்பாடமாக கற்பித்தலில் மொழியின் முழுமையான அமைப்பானது கற்பிப்பதில் கவனம் செலுத்தாமல் வெறும் இலக்கணப் பயிற்சிகளை அளிப்பதனால் மொழிக்கற்பித்தலானது முழுமைப்பெறவில்லை. இவ்வாறு இல்லாமல் மொழியினைக் கற்பிக்கும் கலைத்திட்ட வடிவமைப்பானது மொழியின் அனைத்துக் கூறுகளையும் முழுமையாக கற்பிக்கக் கூடிய வகையில் அமைக்கப்பட வேண்டும்.

அன்றாட வாழ்வில் பேச்சில் பயன்படுத்தப்படும் சொற்களும் உச்சரிப்பு முறையும் தூய்மையுடன் இருப்பது அரிது. எழுதப்படுவது போலவே பேசப்பட்டால் அது செயற்கையாக இருக்கும். வகுப்பறையில் எளிய, இனிய, பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துதலும் சரிவர உச்சரித்தலும் வலியுறுத்தப்பட வேண்டும்.

மொழியை ஒரு பள்ளிப் பாடமாக கற்பித்தலில் இரு வேறு கண்ணோட்டங்கள் உள்ளன. அவையாவன:

(அ) சொற்களை இலக்கண சுத்தமாக சரியான முறையில் பயன்படுத்துதல். இது மொழிக்கு என வகுக்கப்பட்டுள்ள திட்டவட்ட விதிமுறைகளை பின்பற்றிடும் முறையாகும். இது மொழியைத் தூய்மையாக பயன்படுத்துதலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

(ஆ) இது மொழி எவ்வாறு பேசப்படுகிறது என்பதை வர்ணிப்பதில் கவனம் செலுத்துவதால், வர்ணனை முறை என்று அழைக்கப்படுகிறது. இவ்வணுகுமுறை, வெவ்வேறு காலகட்டங்களில் மொழியின் பயன்பாடுகள், மொழியின் வளர்ச்சி, மொழிச் சீர்திருத்தம் போன்றவற்றை விவரித்துக் கூறுகிறது. மொழியை பயன்படுத்தும் முறைகளில் எது சரி, எது தவறு போன்ற நியதி எதையும் கூறுவதில்லை.

### 2.2.2. மொழிக்குறித்த கோட்பாடுகளும், கற்பித்தல் கலையும் (Language Theory & Pedagogy)

கற்பித்தல் கோட்பாடுகளையும், வகுப்பறை செயல்பாடுகளையும் காரண – காரிய முறையில் விளக்க இயலாது. மொழியைக் கற்பிக்கும்பொழுது விழுமங்களும், கலைத்திட்டம் அடையாளம் காட்டும் முன்னுரிமைகளும் சிறப்பிடம் பெறுகின்றன.

மொழியை பள்ளியில் ஒரு பாடமாகக் கற்பித்தலில் இரு அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன – (அ) முற்போக்கு அணுகுமுறை (ஆ) மரபுரீதியிலான அணுகுமுறை.

**(அ) முற்போக்கு அணுகுமுறை: (Progressive Approach)** இதில் உணர்வு பூர்வமான கற்பித்தலும், கற்பித்தலின் பொழுது பாடப்பொருளுக்கு விளக்கமளிப்பதில் தனித்துவத்தை

வெளிப்படுத்துவதும் சிறப்பிடம் பெறுகின்றன. ஆனால் இம்முறை மரபு மீறிய சுயவெளிப்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதாக விமர்சிக்கப்படுகிறது.

**(ஆ) மரபு ரீதியிலான அணுகுமுறை: (Traditional Approach)** நீண்ட நெடுங்காலமாக பின்பற்றப்படும் அணுகுமுறையில் மொழியின் மரபுகள், விமசர்னங்கள், பொதுக்கூறுகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தாலும், தனித்துவத்திற்கும், படைப்பாற்றலுக்கும் போதிய முக்கியத்துவம் தரப்படுவதில்லை.

மொழியை ஒரு பள்ளிப் பாடமாக கற்பிக்கும் அணுகுமுறையில் சமூக மொழியியலின் செல்வாக்கு அதிக அளவில் காணப்படுவதால், இவ்வணுகுமுறை மொழியை நடைமுறையில் பயன்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் அளித்தலோடு, கற்போர் தனது பாணியில் மறுமொழி அளித்திடவும் வாய்ப்பளிக்கிறது. இதன் காரணமாக இவ்வணுகுமுறை, மொழிப்பாடத்தில் உள்ளடங்கும் பாடப்பொருளை சமூக அறிவியல் பாடம் போன்று அமைத்து, மொழியின் நயத்தையும் அழகையும், இனிமையையும் புறங்கணிக்கிறது என்னும் குற்றச்சாட்டுக்கு இலக்காகிறது.

எனவே மொழியை பள்ளிகளில் ஒரு பாடமாகக் கற்பித்தலில் மேற்கண்ட இரு அணுகுமுறைகளுக்கும் இடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்தி, எந்தெந்த கூறுகளுக்கு அழுத்தம் தர வேண்டும் என்பது குறித்து விளக்கும் ''மொழிக் கற்பித்தலுக்கான திட்ட வரைவு'' ஒன்றை முன்கூட்டியே தயாரித்து அதற்கேற்ப கலைத்திட்டத்தை உருவாக்க வேண்டும்.

### 2.3. பாடத்திறன்கள் (Subject Skills)

மொழியை ஒரு பாடமாகக் கற்பித்தலில்,**''உள்வாங்கிக் கொள்ளும் திறன்கள்''** (Receptive Skills) (கேட்டல் மற்றும் படித்தல்) **''வெளிப்படுத்தும் திறன்கள்''**(Expressive or Productive Skills) (பேசுதல் மற்றும் எழுதுதல்) ஆகியவற்றிற்கு இடையே அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தில் ஒரு சமநிலையை ஏற்படுத்துதல் அவசியமாகிறது. இவ்விருவகை மொழித் திறன்களும் முக்கியமானவையே, அவை ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை (inter connected) ஆகும். உதாரணமாக, ஒரு மாணவர் பாடப்பகுதி ஒன்றைப் படித்தறியும்போது, அது குறித்து சக மாணவர்களிடம் பேசவும், அவர்களது கருத்துகளை கேட்டறிந்திடவும், சுருக்கமாக குறிப்புகள் எழுதிடவும் முற்படுவதை நாம் காணலாம். இவ்வாறு செயல்படும்போது, அம்மாணவர் தான் படித்தறியும் பாடப் பகுதியை நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. எனவே வெவ்வேறு கற்றல் சூழலுக்கு ஏற்பவும், கலைத்திட்டத்தில் மொழிக் கற்பித்தலுக்கான கண்ணோட்டத்தைப் பொறுத்தும் பாடத்திறன்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் வேறுபடுகிறது.

சுருங்கக் கூறின், கல்வி அமைப்பில், தொழிற் பிரிவில் (Vocational stream) பயிலும் மாணவர்கள் மற்றும் கலைப்பாடப் பிரிவில் (Academic stream) பயிலும் மாணவர்கள் பெற்றிட வேண்டிய மொழிப்பாடத் திறன்கள் மற்றும் அவற்றிற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் ஆகியவை வேறுபடுகின்றன. உதாரணமாக தொழிற்பிரிவில் “உள்வாங்கிக் கொள்ளும் திறன்களுக்கும் குறிப்பாக பேச்சு திறன்களுக்கும், கலைப்பாடப் பிரிவில் பயில்வோருக்கு வெளிப்படுத்தும் திறன்களுக்கும் குறிப்பாக எழுதுதல்” திறன்களுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன.

### 2.2.4. மொழியும் இலக்கியமும் (Language and Literature)

மொழிசார்ந்த கலைத்திட்டத்தில் இரண்டு வகையான அணுகுமுறைகள் உள்ளன.

- **கல்வி விளக்க அணுகுமுறை** மொழியின் அமைப்பினைப் பற்றி விளக்குகிறது.
- **தகவல் தொடர்பு அணுகுமுறை** மொழியின் பயன்பாட்டினை விளக்குகிறது.

இவ்விரு அணுகுமுறைகளும், வெவ்வேறு அளவுகளில் கலைத்திட்டத்தில் பயன்படுத்தப்-படுகிறது. மொழியியல் திறன்களை மேம்படுத்துவதற்கு இலக்கண அறிவும், சொற்களஞ்சியமும் அடிப்படை தேவையாக உள்ளது. பல்வகையான மொழி அறிவினை பெறுதல், மொழிக் கற்போரது மொழியியல் திறன்களை வலுப்படுத்துகிறது.

### 2.5. மொழிப்பாடத்தின் கற்பித்தல் அணுகுமுறை வகைகளும் பணிகளும்

### (Teaching Approaches in language as Subject: Genres and Tasks)

மொழியை ஒரு பாடமாகக் கற்பித்தலில் உள்ள சவாலான பணியே ஒருபுறம் உருவாக்கப்பட வேண்டிய மொழிசார் செயல்திறன்கள் ( Linguistic competencies), விழுமங்கள், மனப்பான்மைகள் ஆகியவற்றிற்கு இடையேயும், மறுபுறம் கலைத்திட்ட உள்ளடக்கத்தில் இடம் பெற வேண்டியவற்றிற்கிடையேயும் சமநிலையை ஏற்படுத்திடுவதில், கற்றல் - கற்பித்தல் செயல் என்பது மொழியாற்றலை மாணவர்களிடம் வளர்த்திடுதல் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டி இருத்தலாகும்.

மாணவர்களின் மொழியறிவைப் பயன்படுத்தி மொழிசார் செயல்திறன்களை மேம்படுத்துதல்,‘படித்தல்’ திறனை வலுப்படுத்துவதன் மூலம் மொழி வாயிலாக பண்பாட்டு அறிவினை மாணவர்கள் பெற்றிடுதலை ஊக்குவித்தல், பண்பாட்டுச் செயல்பாடுகளில் பங்கு கொள்ளச் செய்தல் போன்றவற்றை தமது இலக்குகளாகக் கொண்டு மொழியாசிரியர்கள் செயல்படுவது அவசியமாகும். இதற்காக ஆசிரியர்கள் பகுத்தறியும் அணுகுமுறை (Analytic

approach) மற்றும் முழுமையான அணுகுமுறையை (Holitic approach) பயன்படுத்துதல், பாடப் பகுதிகளைப் பயன்படுத்திக் கற்பிக்கும் அணுகுமுறை (Text oriented approach) மற்றும் மாணவர் செயல்களை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை (Process Oriented approach) போன்ற வகுப்பறைக் கற்பித்தல் அணுகுமுறைகளையும், வளர்வறி சோதனை முறை (Formatic approach) மற்றும் தொகுநிலை சோதனை முறை (Summative approach) மூலம் மாணவர்களது கற்றல் அடைவை அவ்வப்போது மதிப்பிடலையும் பொருத்தமாகக் கையாள வேண்டியுள்ளது.

இது போன்றே மொழிக் கற்பித்தலுக்கான கலைத் திட்டத்தில் மொழியில் இடம் பெற வேண்டிய பாடப்பொருளின் பல்வேறு வடிவங்கள் (கவிதை, செய்யுள், உரைநடை, நாடகம் போன்றவை) கற்பித்தல் மூலம் உருவாக்கப்பட வேண்டிய திறன்களின் பல்வேறு வடிவங்கள் (எ-டு) மாணவர்களுக்கு “எழுதுதல்’ திறனில் பயிற்சியளித்தலின் பல்வேறு நோக்கங்கள் (அறிக்கை தயாரித்தல், கடிதம் எழுதுதல், கவிதை புனைதல், கட்டுரை வரைதல் போன்றவை) ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மொழியாசிரியர்கள் செயல்பட வேண்டியுள்ளது.

### 2.2.6. மொழிப்பாடத்தின் செயற்களங்கள் (The Domains of language as a subject)

மொழியை ஒரு பாடமாகக் (Subject) கருதும்போது, அதன் நான்கு முக்கிய செயற்களங்களாக (i) வாசித்தல்,(ii)எழுதுதல்,(iii) பேசுதலும் கேட்டலும் (Speaking and listening) (iv) மொழி பற்றிய அறிவு (Knowledge about language) ஆகியவை வர்ணிக்கப்படுகின்றன. பொதுவாக மொழிக் கற்பித்தலில் பாட நூலைப் பயன்படுத்திடும்போது (Using a text) இந்நான்கு கூறுகளும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. உதாரணமாக, பாட நூலை வாசித்து அதன் அடிப்படையில் விவாதத்தை வகுப்பறையில் மேற்கொள்ளும்போது, அதுவே எழுதும் பணிக்கான தூண்டலாக அமைகிறது. மொழியை கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக (subject) அமைத்திடும்போது, ஒவ்வொரு செயற்களக் கூறுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு செயற்களக் கூறுக்கும் முக்கியத்துவம் அளிக்க முற்படும்போது பல்வேறு பிரச்சனைகள் எழுகின்றன. உதாரணமாக,‘எழுதுதல்’ என்னும் செயல்திறன், வெவ்வேறு சூழல்களில், வெவ்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்திடும் போது, வாசித்தல் திறன் இருப்பதாலேயே அது தானே ஏற்பட்டு விடுவதில்லை. முறைப்படி,‘எழுதுதல்’ திறனில் பயிற்சியளித்தல் மூலமே அதனை மேம்படுத்திட முடியும். தொடக்கக் கல்விக்கான வகுப்புகளிலிருந்து பள்ளிக் கல்வியின் இறுதி வகுப்புகள் முடிய எழுதுதல் திறனை மேம்படுத்திட முறையான பயற்சியளித்தல் அவசியமாகிறது. ஆரம்ப காலங்களில் குறிப்பாக புகுநிலை பள்ளி நிலையில் (Pre-school stage) எழுதப்படிக்க மாணவர்களுக்கு பயிற்சியளித்து எதிர்கால கற்றலுக்கான அடித்தளத்தை ஏற்படுத்திட வேண்டும். வகுப்புநிலை உயர உயர பல்வேறு செயற்களத் திறன்களும் விரிவடைந்து மேம்பாடு அடையும் வகையில் மொழிப் பாடத்திற்கான கலைத்திட்டத்தை உருவாக்கிடல் வேண்டும்.

'வாசித்தல்' என்பது பள்ளிக் கல்வியோடு நின்று விடுவதில்லை, வாழ்நாள் முழுவதும் நீடிக்கக் கூடியதாகும். எனவே பல்வேறு வகை நூல்களை (புதினம், சிறுகதை, நெடுங்கதை, கவிதை, திறனாய்வுக் கட்டுரை போன்றவை) படிப்பதற்கான வாய்ப்பை கலைத்திட்டம் அளிக்க வேண்டும்.

பண்டடைய மொழிக் கற்பித்தலில் பேசுதல், கேட்டல், கலந்துரையாடல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. ஆனால் தற்போது வாய்மொழி பயன்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒரு மொழியைப் பேசவும், பிறர் பேசுவதை புரிந்து கொள்ளவும் முடியும் என்பதாலேயே, ஒரு மாணவன் மொழியில் தேர்ச்சி பெற்று, பேச்சின் பல்வேறு வடிவங்களான உரையாடுதல், வாதிடுதல், சொற்போர் புரிதல், சொற்பொழிவு நிகழ்த்துதல் போன்றவற்றில் பங்கு பெறும் திறன் பெற்றுவிட்டதாக கருதமுடியாது. தவிர வெவ்வேறு மொழியை தாய்மொழியாகக் கொண்டோர் உள்ள வகுப்பறையில் மொழிக் கற்பித்தல் மூலம் மாணவர்களிடம் மொழித்திறன்களை உருவாக்குவதில், எந்தெந்த செயற்களக் கூறுகளுக்கு எந்த அளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய பிரச்சனையாகும். அதாவது ஒரு மொழியை பாடமொழியாகக் கற்பிக்கும்போது அதனை முதல் மொழியாகக் (தாய்மொழி போன்று) கற்பித்தலுக்கும், இரண்டாவது மொழியாக (தாய்மொழி அல்லாத பிற மொழியாக) கற்பித்தலுக்கும் இடையே பெருத்த வேறுபாடு உள்ளது.

x) இரண்டாவது மொழிக் கற்றலில் குழந்தையின் முதல் மொழியின் குறுக்கீடு (Interference) காணப்படும்.

xi) குழந்தையின் தாய்மொழியும், அது பிறந்து வளர்ந்த பகுதியில் பெரும்பாலோரால் பேசப்படும் மொழியும் வேறாக இருப்பின், அவ்விரு மொழிகளையுமே எளிதாகக் கற்றுக் குழந்தை 'இருமொழியினன்' ஆகிறது. இருந்தபோதிலும் பொதுவாக தாய்மொழியில்தான் குழந்தையின் புலமை அதிகரித்துக் காணப்படும், ஆனால் இரண்டாவது மொழியில் அவர்களது மொழித்திறன், அதனை குமரப்பருவத்தில் கற்போரிடம் காணப்படுதலைவிட மிக உயர்வாகவே இருக்கும்.

## 2.3. முதல் மொழி மற்றும் இரண்டாம் மொழியினை முயன்று அடைதலில் உள்ள ஒற்றுமை – வேற்றுமைகள் (Differences and Similarities between First and Second Language Acquisition)

முதல் மற்றும் இரண்டாவது மொழிக் கற்றலுக்கு இடையேயான வேறுபாடுகளில், முதன்மையாக பெரும்பாலோரால் கருதப்படுவது பெறப்படும் தேர்ச்சியளவு (Level of mastery) மற்றும் பயன்படுத்தப்படாத நிலையில் மறந்து போகும் விகிதம் (Rate of forgetting when not in use)ஆகும். [ப்ளே மற்றும் வ்ரோமான் (Bley and Vtoman, 1989)].

மேற்கண்ட இருவரது ஆய்வுகளைத் தொடர்ந்து, எல்லிஸ் (Ellis,1994) என்பார் முதல்மொழிக் கற்றலும் (L1) இரண்டாவது மொழிக் கற்றலுக்கும் (L2) இடையே பின்வரும் ஒன்பது வேறுபாடுகளைக் குறிப்பிட்டுள்ளார்.

1. **ஒட்டுமொத்த கற்றல் தேர்ச்சி அளவு (Overall Success):** இரண்டாம் மொழிக் கற்போர் முதல் மொழிக் கற்போரைப் போன்று முழுமையான மொழித் தேர்ச்சி பெறுவதில்லை.

2. **பொதுவாக தோல்வி பெறுவதற்கான வாய்ப்பு (Chances of general failure):** இரண்டாம் மொழிக் கற்றலில், முதல் மொழிக் கற்றலைப் போலன்றி, மொழித் திறன் தேர்ச்சி ஏற்படாமல் போவதற்கும் வாய்ப்பு உள்ளது.

3. **மாறுபாடு (Variation):** இரண்டாம் மொழிக் கற்றலில், தேர்ச்சி அளவு தனிநபர் வேறுபாட்டின் பாதிப்புக்கு உள்ளாகிறது.

4. **இலக்குகள் (Goals):** மொழிக் கற்றலில் அடைய வேண்டிய இலக்காக குறிப்பிடப்படும் செயல்திறன் (Target competence) அளவை விட, இரண்டாம் மொழிக் கற்போர் குறைந்த அடைவினையே பெறுகின்றனர்.

5. **சிதைந்து போதல் (Fossilisation):** தொடர்ந்து பயன் படுத்தாமல் இருந்தால் கற்றுக் கொண்ட இரண்டாவது மொழி வெகுசீக்கிரம் மறந்து போகும் அபாயம் உள்ளது.

6. **உள்ளுணர்வுகள் (Intution):** இரண்டாம் மொழிக் கற்போர் இலக்கண ரீதியாக தெளிவான முடிவுகள் எடுப்பதில் திணறுவர்.

7.**கற்பித்தல் (Instruction):** முதல்மொழிக் கற்றலுக்கு கற்பித்தல் எதுவும் தேவைப்படுவதில்லை. ஆனால் இரண்டாம் மொழிக் கற்றலுக்கு கற்பித்தல் அவசியமாகிறது.

8.**திருத்துவதன் தேவை (Need for correction )** : இரண்டாம் மொழிக் கற்றலில், திருத்தம் அளிப்பது கற்போருக்கு உதவிகரமாக இருப்பதாகக் கருதப்படுகிறது.

9.**உணர்வுபூர்வமான ஈடுபாடு ( Affective factor in learning ):** இரண்டாம் மொழிக் கற்றலில், கற்போருக்கு முதல்மொழிக் கற்றலில் இருப்பது போன்ற உணர்வு பூர்வமான ஈடுபாடு இருப்பதில்லை.

இவ்வாய்வின் முடிவாக முதல்மொழி மற்றும் இரண்டாம் மொழியினை முயன்று அடைதலில் ஒற்றுமை-வேற்றுமைகளாக கீழ்க்கண்ட உண்மைகளை எல்லீஸ் குறிப்பிடுகிறார்.

1. இரண்டாம் மொழிக் கற்றலில் அதிக மொழித்திறன்களைப் பெறுவது மொழிக் கற்றலுக்காக அதிக நேரத்தை செலவிடுவதினை பொறுத்து அமைவதில்லை.

2. முதல் மொழி கற்றலானது நனவிலி நிலையில் தானே நிகழ்கிறது. இரண்டாம் மொழிக் கற்றலானது முயன்று கற்கப்படுகிறது.

3. முதல் மொழியினை யாரும் நமக்குத் தனியாக கற்பிப்பதில்லை. அதனை நாம் பள்ளி செல்லும் முன்பே கற்கிறோம். இரண்டாம் மொழியினை பள்ளிக்குச் சென்று ஒருவரால் கற்பிக்கப்பட்டு கற்றுக்கொள்கிறோம்.

4. இரண்டாம் மொழியினை பதின்பருவத்தில் (12-13 வயது) கற்பதால் அந்த மொழித்திறன்களை பெறுவது கடினமாக உள்ளது. ஏனெனில் அப்பருவத்தில் மனித மூளையானது மொழிக்கற்றலைவிட விளையாட்டு, இசை போன்ற பிற செயல்பாடுகளில் கவனம் செலுத்துகிறது.

5. முதல் மொழிக் கற்றலானது பிறப்பிலேயேத் தூண்டப்பட்டு இயல்பூக்கத்தின் அடிப்படையில் தானே நிகழ்கிறது. ஆனால் இரண்டாம் மொழிக் கற்றலானது அதிக நினைவு நிலையில் நிகழ்வதால் ஒருவரின் ஆளுமையையும் ஊக்கத்தினையும் சார்ந்து அமைந்துள்ளது.

6. முதல் மொழிக் கற்றலுக்கு நமது சூழலிலிருந்து அதிகப்படியான மொழி உள்ளீடுகளை கொடுக்கத் தேவையில்லை. இரண்டாம் மொழிக்கற்றலுக்கு அதிகப்படியான மொழிசார் உள்ளீடுகள் தேவையாகிறது.

7. முதல் மொழி கற்றலுக்கு நுண்ணறிவோ அல்லது சிறப்புத் திறனோ தேவையில்லை. யாராக இருப்பினும் அவரது தாய்மொழியினை முழுமையாகவும் சிறப்பாகவும் பேசுவர். ஆனால் இரண்டாம் மொழிக் கற்றலுக்கு சிறப்புத்திறனும் கூடுதல் முயற்சியும் அவசியமாகிறது.

8. முதல் மொழிக் கற்றல் அறிவுசார் வளர்ச்சியோடு இணைந்து நடைபெறுகிறது. இரண்டாம் மொழி கற்றலுக்கு அறிவுசார் வளர்ச்சி அவசியமாகிறது.

9. முதல் மொழி கற்றபின் வெகுகாலம் அதனை பயன்படுத்தாமல் இருந்தாலும் மறந்து போவதில்லை. இரண்டாம் மொழி கற்றபின், அதனை வெகுகாலம் பயன்படுத்தாமல் இருந்தால் மறந்துபோகும் வாய்ப்பு அதிகம்.

10.குழந்தை ஓரெழுத்து சொல், ஈரெழுத்து சொல் என்று படிப்படியாக எளியவற்றிலிருந்து, கடினமானவற்றைக் கற்றுக் கொள்ளும். இரண்டாம் மொழிக் கற்றலின் எழுத்துக்களைக் கற்றல், ஓரெழுத்து சொல், ஈரெழுத்து சொல், சொற் தொடர், வாக்கியம் இலக்கண அமைப்பு என்று கற்றுக் கொடுக்கப்படும்.

11. குழந்தைகள் முதல்மொழியை எழுதுவதற்கு முன் பேசக் கற்றுக் கொள்ளும். இரண்டாம் மொழிக் கற்றலில் எழுதக் கற்றுக் கொண்ட பின்பே பேசுதல் ஓரளவு சாத்தியமாகும்.

12. குழந்தை பருவத்திலேயே இரு மொழிகளை கற்பிக்கும் பொழுது அதில் இரண்டாம் மொழியானது முதல் (தாய்) மொழிக்கற்றலில் மேலோங்கியிருக்கிறது. ஆயினும் மற்றொரு மொழியும், மொழித்திறனும் வளர்ச்சி பெற்றதாக உள்ளது.

### 2.4. வகுப்பறையில் முதல் மற்றும் இரண்டாம் மொழியைப் பயன்படுத்தல்

### ( Using of First and Second Language in the Clasroom)

வகுப்பறையில் இரண்டாவது மொழியைக் கற்கும் போது, முதல் மொழியின் பயன்பாடு குறித்து கூறப்படும் கருத்துகளாவன:

**ஸ்டீவென் க்ரேஷன்** (Steven Krashen) என்பார் முன்மொழிந்த "மொழிக்கற்றலில் இயற்கையான அணுகுமுறை"( Natural approach to language acquisition ) என்பது கூறுவதாவது: "மாணவர்கள் முதல் மொழியைக் கற்கும் விதத்திலேயே இரண்டாம் மொழியையும் கற்கின்றனர், இரண்டாம் மொழியை நேரிடையாக உணர்ந்தறிவதற்கான பேரளவு வாய்ப்பு ( Massive exposure to the second language) முதல் மொழியை மிகக் குறைந்த அளவு பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இரண்டாம் மொழி மிக நன்றாக கற்கப்படுகிறது." அவ்வப்போது முதல் மொழியை ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்திடுவதன் மூலம் இரண்டாம் மொழியை மாணவர்கள் நன்கு பொருள் உணர்ந்து சிறப்பாகக் கற்க முடியும் என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

#### 2.4.1.**ஆசிரியரது முதல் மொழிப் பயன்பாடு (Teachers uses in First Language)**

கீழ்க்காணும் சூழல்களில் ஆசிரியர் முதல் மொழியை ஆரம்பநிலை வகுப்புகளிலும் இடைநிலை வகுப்புகளிலும் பயன்படுத்துகிறார்.

- மாணாக்கருக்கு அவர்களுக்குத் தரப்பட்டுள்ள பணிகள் குறித்து குறிப்புரை வழங்கும்போதும்,
- புதிய சொற்களின் பொருள் குறித்து விளக்கும் போதும்,
- சிக்கலான கருத்துகள், உவமைகள் போன்றவற்றை விளக்கும் போதும்,
- சிக்கலான இலக்கண விதிகளை விளக்கும் போதும்

ஆசிரியர் முதல் மொழியைப் பயன்படுத்தக் கூடும்.

### 2.4.2. மாணவர்களின் முதல் மொழிப்பயன்பாடு (Students uses in First Language)

மாணவர்கள் இரண்டு பேர் இணைகளாக இயங்கி, மொழிசார் பணிகளுக்கு தீர்வு காண முற்படும்போது தமக்குள் முதல் மொழியிலேயே பேசிக் கொள்வர். முதல் மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள், வைகாட்ஸ்கி (Vygotsky) கூறுவது போன்று 'பிறர் உதவியுடன் உச்சபட்ச அடைவை எய்திட முயற்சிக்கும் களத்தினில் (Zone of Proximal Development) இயங்கிட முடியும். இரண்டாம் மொழியைக் கற்கும்போது மாணவர்கள் முதல் மொழியை அவ்வப்போது பயன்படுத்துவதன் மூலம் கற்பிக்கப்படும் பாடக் கருத்துகளை உயர்சிந்தனை கொண்டு பரிசீலிக்க முடிகிறது (Able to cognitively process at a higher level). மாணவர்கள் தமக்குள் உரையாடும்போதும், பாட சம்பந்தமாக கலந்துரையாடும் போதும் குரல்மொழியைப் பயன்படுத்துவர். உதாரணமாக கற்கும் இரண்டாவது மொழி தொடர்பாக நிகழும் மாணவர்களது கலந்துரையாடலில் ஒரு மாணவர் பொருத்தமற்ற வார்த்தையைப் பயன்படுத்திடும்போது மற்றவரிடம் உதவி கேட்கும்பொழுது, மன்னிப்பு கேட்கும் பொழுதும் 'please', 'sorry' என்று கூறி சரியான வார்த்தையை (இரண்டாம் மொழியில்) கூறிடுவார். இது போன்றே மாணவர் ஒருவர் "I like the ice-cream" என்று கூறும்போது அதனைத் திருத்தி "I like ice-cream" என்று தான் கூற வேண்டும் என்று சொல்லும்போதும், முதல் மொழி பயன்படுத்தப்படுகிறது. மாணவர்கள் ஒரு கருத்தினைக் கூற திணரும்போது, தமது முதல்மொழியை உடனே பயன் படுத்திடுவது இயல்பான ஒன்றே, ஆனால் வகுப்பில் இரண்டாவது மொழிக் கற்றலில், பயிற்சி செய்யும் போது, இரண்டாவது மொழிச் சொற்களை மட்டுமே பயன்படுத்திடல் வேண்டும்.

- முதல் மொழியின் சொற்களஞ்சியமானது இரண்டாவது மொழியைக் கற்காத சூழலிலும் அதிலுள்ள கருத்துக்களை உயர்ந்த அளவில் புரிந்து கொள்வதற்கு உதவியாக அமைகிறது.

### 2.4.3.மாணவர்கள் பேசும் சூழலில் முதல் மொழியைப் பயன்படுத்துவதற்கான அவசியம்

- மாணவர்கள் தமக்குள் பாடக்கருத்தை தெளிவுபடுத்திக் கொள்ளும் வகையில் கேள்வி கேட்டல் (Students ask each other clarifying questions)
- கற்பிக்கப்படும் பாடப்பொருள் புரியாத நிலையில் மாணவர்கள் அது குறித்து மனவருத்தத்தை வெளிப்படுத்திடல் (Express frustrations concerning their lack of understanding).
- கற்கும் இராண்டாவது மொழியின் சொற்களுக்கும், பாடக் கருத்துகளுக்கும் முதல் மொழி மூலம் விளக்கம் பெறுதல்.

- முதல் மொழியில் தமக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும் சொற்களுக்கு இணையான இரண்டாவது மொழிச் சொற்களைக் கண்டறிதல்.
- சிக்கலான கருத்துக்களை புரிந்து கொள்ளும் பொழுது மொழியை பயன்படுத்துல்.
- எழுத்துப்பணியை மதிப்பீடு செய்யும் பொழுது அதில் எழும் பொருள் குறித்த சந்தேகங்களை சம மாணவர்களிடம் விவாதித்து அறிதல்.

சுருங்கக் கூறின், ஏதாவது ஒரு கருத்தை ஆசிரியர் விளக்கியபோதும், புரிந்து கொள்ள இயலவில்லை எனில், அருகிலுள்ள மாணவரிடம் கேட்டறிதல் இயல்பேயாகும். சில வினாக்களில் விடைகளை சரிபார்த்துக் கொள்ளவும், சிறு விவாதங்களில் ஈடுபடும்போதும், ஆசிரியர் விளக்கம் கூறாது விட்டபோதும் வேறொரு மாணவருடன் முதல் மொழியிலேயே பேசுதல் இயல்பு ஆகும்.

### 2.4..4.வகுப்பறையில் இரண்டாவது மொழியைப் பயன்படுத்துதல் (Using of Second Language in the class)

இரண்டாவது மொழி என்பது தாய்மொழி அல்லாத வேறொரு மொழி/ பயிற்று மொழியாக இருக்கக்கூடும். தமிழ்நாட்டில் தமிழ் முதல் மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாம் மொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் மொழிக் கற்றலில், பாடக்கருத்துகளைப் புரிந்து கொண்டு அம்மொழியில் குறிப்பிட்ட அடைவைப் (Achievement) பெறுதல் மட்டுமே நோக்கமாக உள்ளது. இரண்டாம் மொழிக் கற்றலில், ஏதேனும் சில சொற்கள் அல்லது வாக்கியங்கள் விளங்கவில்லை என்று மாணவர்கள் கருதினால், அவற்றை ஆசிரியரைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். பலர், உடன் பயிலும் மாணாக்கரிடம், வகுப்பில் தான் கேட்கத் தவறிய தகவல்கள், சொற்கள், உவமைகள், நகைச்சுவைத் துணுக்குகள், போன்றவற்றை இராண்டாவது மொழியிலேயே தட்டுத்தடுமாறியேனும் கேட்டு அறிந்து கொள்வார்கள்.

## 2:5 மொழியானது பள்ளிப்பாடமாக இருப்பதற்கும் தகவல் தொட்பு சாதனமாக இருப்பதற்கும் இடையேயான வேறுபாடு (Difference Between Language as a school Subject and Means of Communication)

### 2:5:01 தகவல் தொடர்பு (Communication)

### 2:5:01:1 ‘தகவல் தொடர்பு’ என்பதன் பொருள் (Meaning of Communication)

இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் தமக்குள் செய்திப் பரிமாற்றம் செய்து கொள்ளுதலே ‘தகவல் தொடர்பு’ என்று அறியப்படுகிறது. தகவல் தொடர்பு என்பது பேச்சு மொழி, எழுத்து மொழி, குறியீடுகள் (Signs), சைகைகள் (gestures), முகபாவங்கள் (Facial expressions), விகடம் (Mimicry) பிரபல மனிதர்கள் போல பேசுதல், மிருகங்கள் போல ஒலி

எழுப்புதல் போன்றவை, காட்சி வடிவிலான அல்லது நடிப்பு வடிவிலான கலைகள் (Visual or dramatic arts) போன்றவை மூலம் நிகழக்கூடும். இன்று வழக்கு மொழியோடு கூட சங்கேத மொழியும் (Code language) தகவல் தொடர்பில் இடம் பெறுகிறது.

### 2:5:01:2 தகவல் தொடர்பு முறைகள் (Methods of Communication)

**எழுத்து வடிவிலான தகவல் பரிமாற்றம் (Written Communication)**

தொன்றுதொட்டு பயன்படுத்தப்பட்டு வரும் தாளில் எழுதப்பட்ட/பதிவு செய்யப்பட்ட கடிதங்கள், அறிக்கைகள், ஆவணங்கள் போன்றவையோடு மின்னணு சாதனங்கள் வாயிலாக அனுப்பப்படும் ஆவணங்கள், மின்னஞ்சல்கள் (e-mails), குறுஞ்செய்திகள் (SMS) போன்றவையும் எழுத்து மொழியைப் பயன்படுத்தி தகவல் தொடர்பு கொள்ளுவதில் உள்ளடங்கும்.

**வாய்மொழித் தகவல் தொடர்பு (Oral Communication)**

நேருக்கு நேர் உரையாடுதல், தொலைபேசி, காணொளி காட்சி (Video Conferencing) இணையதளத்தைப் பயன்படுத்துதல் மூலம் உரையாடுதல் போன்றவை இதில் உள்ளடங்கும்.

**மொழிசாரா தகவல் தொடர்பு (Non-verbal Communication)**

முகபாவங்கள், உடல்மொழி, சைகைகள், குரல் ஒலி போன்றவை இவ்வகைத் தகவல் தொடர்பில் உள்ளடங்கும்.

பேச்சு மற்றும் எழுத்து வடிவிலான தகவல் தொடர்பு, 'மொழிசார் தகவல் தொடர்பு' (Linguistic Communication) எனவும், சொற்களின்றி உடல்மொழி மூலம் நடைபெறுதல் தகவல் தொடர்பு 'மொழிசாரா தகவல் தொடர்பு' (Non-linguistic Communication) என்றும் அழைக்கப்படுகின்றன.

### 2:5:01:3 மொழிக்கும் தகவல் தொடர்புக்கும் இடையே உள்ள வேறுபாடு (Difference Between Language and Communication)

மொழியும், தகவல் தொடர்பும் நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்பட்டாலும் அவற்றிக்கு இடையே வேறுபாடுகள் உள்ளன.

தகவல் தொடர்பு என்பது பேசுதல், எழுதுதல் அல்லது பிற ஊடகங்களைப் பயன்படுத்தி செய்திப் பரிமாற்றம் ஏற்படுத்துதலைக் குறிக்கிறது.

| வ. எண் | மொழி | தகவல் தொடர்பு |
|---|---|---|
| 1 | மொழி என்பது ஒலிக்குறியீடுகள் அவற்றிற்கான பொருள் ஆகியவை கொண்ட அமைப்பாகும். சொற்களின் இணைப்பு, வாக்கிய அமைப்பு ஆகியவை இலக்கண விதிகள் படி அமைகின்றன. | தகவல் தொடர்பு என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் இடையே பேச்சு, எழுத்து, சைகைகள், நடிப்பு போன்றவை மூலம் செய்தி பரிமாற்றம் நிகழ்வது ஆகும். |
| 2 | ஒருவர் தனியாகக் கூட மொழியைப் பயன்படுத்திடலாம். | தகவல் தொடர்பில் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோரின் இடை வினைகள் இடம் பெறுகின்றன. |
| 3 | தகவல் தொடர்பில், மொழி ஒரு வழி முறையாகப் பயன்படுகிறது. | தகவல் தொடர்பு என்பது பரந்து விரிந்த களம் ஆகும். |
| 4 | மொழி ஒலிக்குறிகளுக்கும், குறியீடு-களுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. | தகவல் தொடர்பு என்பது பரந்து விரிந்த களம் ஆகும். |
| 5 | உயிருள்ள மொழி தேக்கமடைவது இல்லை, அது மாற்றமடைந்து கொண்டு வரும். | தகவல் தொடர்பின் அடிப்படைக் கூறுகள் மாறுவதில்லை. |

### 2:5.2. முதல் மொழியில் உயர் தேர்ச்சித்திறம் பெற்றிருத்தலும், பிற பாடங்களில் தேர்ச்சி பெற்றிடுதலும்

இந்தியச்சூழலில் பள்ளிக்கல்வி அளவில் முதல்மொழி மாநில மொழியாகவும், இரண்டாவது மொழி ஆங்கிலம் அல்லது பிறிதொரு இந்திய மொழி அல்லது உலக மொழியாகவும் உள்ளன. ஒரு சில இடங்களில் மட்டும் மாநில மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு அவர்களது சொந்த மொழியை (வீட்டு மொழியை) முதல் மொழியாக பயிலும் வசதி உள்ளது,

### 2.5.3. முதல் மொழியில் உயர் தேர்ச்சித்தியம் பெறுதல்

தாய்மொழிப் பேச்சு என்பது பிறந்த குழந்தைகள் வளர வளர, மிக இயல்பாக அதனிடம் உருவாகிறது. குழந்தைகளிடம் தாய்மொழிப் பேச்சு வளர்ச்சி எவ்வாறு ஏற்படுகிறது என்பது குறித்த சில உளவியலறிஞர்களது கருத்துகளைக் காண்போம்.

**ஜீன் பியாஜே** (Jean Piaget, 1896-1980): தொடக்கநிலையில் குழந்தையின் அறிவுவளர்ச்சி மொழித் தொடர்பின்றி நிகழ்வதாகும். குறியீடுகளைப் பயன்படுத்தும் முறைகளில் மொழியும் ஒன்றாகும். மொழியின்றியும் சிந்தனையில் பிற குறியீடுகளைப் பயன்படுத்தலாம்.

**ஆஸ்குட்** (Osgood), **செவியோக்** (Seviyok) போன்றோர் மொழிசார் மனவியல் (Psycho-linguistics) என்கிற கலைச் சொல்லை பிரபலப்படுத்தினார்கள்.

மொழிசார் மனவியல் என்பது மொழித்திறன் கைவரப் பெறல், அதை வகைப்படுத்தல், பயன்படுத்தல், பேச்சு, படித்தல், இருமொழி ஆளுகை, மற்றும் மொழிக்கும் சிந்தனைக்கும் இடையே உள்ள தொடர்பு ஆகியவற்றைக் குறிப்பதாகும். இது அனைத்து மொழிகளுக்கும் பொதுவானவற்றை (இலக்கணத்தை) ஆராய்வதன் மூலம் குழந்தையின் உள்ளார்ந்த கற்றல் நுட்பங்களைக் கண்டறியும் முயற்சியாகும். இந்த அறிவியல்பிரிவு அண்மைக் காலமாக தாய்மொழி மற்றும் பிறமொழிகளைக் கற்பிப்பதில் செல்வாக்குடையதாக இருக்கிறது.

உலக மொழிகளுக்குப் பொதுவான இலக்கணம் (Universal Grammar) என்பது பேச்சு ஒலிகளைப் பகுத்தாய்வு செய்து பொதுக்கூறுகளைக் கண்டறிதலே என மொழியியல் அறிஞர் சோம்ஸ்கி விவரித்துள்ளார்.

**சோம்ஸ்கி** (Neam Chomsky) போன்றோர் கருத்துப்படி, உலகின் இயல்பான மொழிகள் யாவற்றுக்கும் பொதுவாகச் சில பண்புகள் உள்ளன எனப்படுகிறது. பல்வேறு மொழிகளில் காணப்படும் சொல், வாக்கிய அமைப்புகள், மனித மூளையின் தன்மையினால் உருவாக்கப்பட்டவையாதலின், இவற்றிற்கு இடையே ஒற்றுமை காணப்படுகிறது. எனவே மொழித்திறன் மனித குழந்தைகளுக்கு இயல்பான ஒன்று. மொழியினைப் பயன்படுத்துவதற்கான விதிகள் குழந்தைகளுக்கு இயல்பாகவே புலப்படுகின்றன. நுண்ணறிவு, பண்பாடு வேற்றுமை போன்றவை இதனை பாதிப்பனவாகத் தெரியவில்லை. ஒவ்வொரு மொழிக்கும் அடிப்படையான ஆழ்நிலை அமைப்பு (Deep Structure) உண்டென்றும், பல்வேறு மொழிகளின் மேற்பரப்பு அமைப்பில் ஒற்றுமையுள்ளது என்றும் சோம்ஸ்கி குறிப்பிடுகிறார். இவரது கருத்துகளுக்கு பெருமளவு ஆதரவு காணப்படுகிறது.

சோம்ஸ்கியினின்றும் மாறுபட்டு **ஸ்கின்னர்** போன்றோர் மொழித்திறன் வளர்ச்சியில் முயன்று தவறிக் கற்றல் நடுவிடம் பெறுகிறதென்றும், சரியான மொழித் துலங்கல்கள் பரிசுகள், பெற்றோர்களது பாராட்டு போன்றவற்றினால் வலுப்பெறுகின்றன என்றும் கருதுகின்றனர்.

அறிவு வளர்ச்சியோடு மொழி வளர்ச்சியும் தொடர்புடையது. இரண்டு முதல் ஏழு வயதிற்குள் தனது சூழ்நிலை சார்ந்த பொருள்களின் பெயர்களைக் கூறவும், எளிய

தேவைகளைத் தாய்மொழியில் (வீட்டு மொழியில்) கூறவும் குழந்தை கற்கும். குடும்பத்தினரது கல்வி மற்றும் பண்பாடு நிலைகள் குழந்தையின் சொல்லாட்சியைப் பாதிக்கும்.

குழந்தைகளின் வளர்ச்சியில் ஏற்படும் சில நிலைகளை இனி காண்போம்.

**i) பேச்சுக்கு முந்தைய நிலை (Pre-Speech Stage):** இந்நிலையில் குழந்தை குடும்பத்தாரது பேச்சு ஒலிகளைக் கவனிக்கிறது. உச்சரிப்பு, ஒலிக்கும் முறை, பாவனைகள் போன்றவை அதை ஈர்க்கின்றன.

**ii) பொருளற்ற ஒலிகளை எழுப்பும் நிலை (Babling Stage):** இந்நிலையில் குழந்தை மழலைச் சொல், தட்டுத்தடுமாறி சில சொற்களைக் கூற முயற்சித்தல் போன்றவை மூலம் அனைவரையும் மகிழ்விக்கும்.

**iii) ஒற்றைச் சொல் பேச்சு நிலை (Holophrasic Stage):** ஒரு சொல்லால் கருத்தைத் தெரிவித்தல். மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் போன்றவற்றை ஒரே சொல்லால் ஒரு தொகுப்பு முழுவதையும் கூறல் (பூச்சி, மியாவ்-மியாவ், தோ தோ..)

**iv) சொற்களைச் சேர்த்துச் சொல்லுதல் (Words-Combining Stage):** இது குழந்தைக்கு 18 மாதம் முதல் இரண்டு வயதிற்குள் கிட்டும் திறனாகும். சொற்றொடர்கள் இலக்கண முறைப்படியோ, முழுமை பெற்றோ இருக்காது.

**v) மொழியறிவைப் பெறல்:** மூன்று முதல் ஆறு வயதிற்குள், தான் சொல்ல விரும்புவதை திக்குத் திணறி முழு வாக்கியங்களாகக் கூற குழந்தையால் முடியும்.

எனவே மழலையர் கல்வி தொடங்க மூன்று வயதாவது நிரம்பியிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

தாய்மொழியை நன்கு பேசக் கற்றுக் கொண்டு வரும் குழந்தைகள் தொடக்கப்பள்ளி வகுப்புகளில் எழுதக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கின்றனர். முதலில் எழுத்துகளை உச்சரிப்போடு எழுதிப் பழகுவர். பின்பு ஓரெழுத்து சொற்கள், ஈரெழுத்து சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியம் என படிப்படியாக முன்னேறிச் செல்வர். எழுதுதல் திறனோடு வாசித்தல் திறனும் மேம்படுகிறது. நடுநிலைப் பள்ளி வகுப்புக்கு செல்லும்போதே தாய்மொழியில் பேச, எழுத, படிக்க குழந்தைகள் கற்றுக் கொண்டு விடுகின்றனர்.

### 2.6.'புலமை' என்பதன் வரையறை (Defiition of Mastery)

மொழிப் புலமை என்பது கற்றலில் பயனுள்ள மாற்றத்தில் நம்பத்தகுந்த, போற்றத்தக்க செயலாக்கமாகவுள்ளது. மாணவர்கள், பாடப்பொருள் சவாலான குறிப்புகளை புரிந்துகொள்ளல்,

திறன்கள், அறிவை பயன்படுத்துவதில் சகஜநிலை என்று எப்பொழுது அடைகிறார்களோ அப்பொழுது புலமை பெற்றவர்களாகின்றனர்.

புலமையின் சாராம்சம் என்னவென்றால் பயனுள்ள கற்றல் மாற்றத்தில் படைப்பாற்றலில் மெருகூட்டுவதாகும். புலமை என்பது வெறும் தொழில் நுட்ப அறிவு மட்டுமல்ல. புலமை நம்பத்தக்கவற்றை சோதித்து பயனுள்ள மற்றும் காட்சிகளாக பாடத்தில் செயல்படுத்த வேண்டும்.

### 2.6.1. பாடங்களிலும் முதல் மொழியிலும் புலமை (Mastery in First Language and Subject)

#### பன்மொழித்தன்மையின் இயல்புகள் ( Nature of Multilingualism)

இந்தியாவில் பண்டைய காலந்தொட்டு, வரலாற்றுக் காலம் வரை இனக்குழுக்கள் மற்றும் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளல் பொருட்டு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடம் பெயர்வதால் பன்மொழி இருந்துள்ளது. மேலும் பொருளாதார கட்டாயத்திற்காகவும், சமூக மறு சீரமைப்பிற்காகவும் சிறுவளர்ச்சி மேற்கொள்ளப்பட்டு, வரலாற்று காலந்தொட்டு நான்கு மொழிக் குடும்பங்களுக்குள் நீண்டகாலமாக பாதுகாத்து வருகிறது. குறிப்பிட்ட மொழியியல் துறையானது நல்ல மேம்பாட்டு நிலையினை எய்தியுள்ளது.

இந்திய பாரம்பரியத்தில் பல மொழிகள் இனம், மொழி, கலாச்சாரம் ஆகியவற்றுடன் இணைவு பெற்றுள்ளது. மேற்கத்திய பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியை கருத்தில் கொண்டு ஒத்திசைவான மொழித்தேவையில் இது வேறுபடுகிறது. ஒரு நாட்டில் மொழியியல் பன்முகத்தன்மை இருப்பினும் அதில் ஒரு குறிப்பிட்ட ஒரு மொழியானது அதிக ஆதிக்க போக்குள்ளதாக உள்ளது. குறிப்பாக இம்மொழியிலேயே கல்வி, சட்டம், நிர்வாகம், மக்கள் தகவல்தொடர்பு செயல்படுகிறது.

#### தகவல் தொடர்பில் பன்மொழித்தன்மை (Multilingual Communication)

உலகமயமாக்கல் நடைமுறைக்கு வந்த காரணத்தினால் மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகிறது. குறிப்பாக நாடுகளுக்கிடையே மற்றும் கண்டங்களுக்கிடையேயான பல்வேறு காரணங்களுக்காக தகவல் தொடர்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் தனது சொந்த நாட்டில் குடியேற்றம் ஆனவர்கள், இருநாட்டிற்கான ஒப்பந்தங்கள் உறவுகள், நாடு விட்டு நாடு இடம்பெயர்தல் தொழில்நுட்ப தகவல் தொடர்பு போன்றவை பன்மொழி இடைவினைகளை அதிக அளவில் உருவாக்குகிறது. மக்கள் பிறநாட்டு மக்களுடன் உறவை மேம்படுத்திக் கொள்வதிலும், பன்மொழித் தன்மையில் புலமை பெறுவதிலும் ஏற்படும் சிக்கல்களை, தமது பாரம்பரிய மொழிக்கற்றல் முறையினை கொண்டு பன்மொழி புலமை பெறுகின்றனர். பன்மொழித்தன்மையின் முதன்மை நோக்கமானது நாடுகளாலும்,

சமூகச்சூழலாலும் பல்வகையில் பிரிந்து கிடக்கும் மக்களை ஓர் இனத்தன்மையாக உருவாக்குவதே ஆகும்.

**முடிவுரை**

இந்த அலகில் முதல்மொழி மற்றும் இரண்டாம் மொழியை எவ்வாறு முயன்று அடைதல் என்பதையும், வகுப்பறையில் முதல்மொழி மற்றும் இரண்டாம் மொழியை பயன்படுத்துதல், மொழி ஒரு பள்ளிப்பாடமாக மற்றும் தகவல் தொடர்பு சாதனமாக இருப்பதற்கிடையே உள்ள வேறுபாடு, மொழிப்புலமை மற்றும் பாடப்புலமை இடையிலான உறவு, முதல் மொழி மற்றும் பாடத்தில் புலமை, இரண்டாம் மொழி மற்றும் பாடத்தில் புலமை, வகுப்பறையில் பன்மொழி பேசுதல் மற்றும் புரிதல் முதலியவற்றைப் பற்றி அறிந்தோம்.

**வினாக்கள்**

1. மொழி என்பது ஒரு பாடம் என்பதற்கான களங்களை வரையறு.

2. மொழியை முயன்று அடைதல் என்றால் என்ன?

3. முதல் மற்றும் இரண்டாம் மொழியினை முயன்று அடைவதற்கான வேறுபாட்டினை வரிசைப்படுத்துக.

4. முதல் மொழி மற்றும் இரண்டாம் மொழியை முயன்று பெறுதல் குறித்த உண்மைகளை விவரிக்க.

5. மொழிப்புலமை மற்றும் பாடப்புலமை இடையேயுள்ள தொடர்பினை விவரிக்க.

6. பன்மொழித்தன்மையின் இயல்பினையும் அதன் அம்சங்களையும் விவரிக்க.

## அலகு -3 வகுப்பறை கற்பித்தலில் தாய்மொழியின் பங்கு

## (Position of Mother Tongue in Classroom Instruction)

**பாடப்பொருள் நோக்கங்கள் (COURSE OBJECTIVES)**

இப்பாடப் பொருளினைக் கற்ற பின்பு ஆசிரிய-மாணவர்கள் கீழ்க்காணும் கற்றல் இலக்குகளை அடைவர்.

- வகுப்பறை கற்பித்தலில் தாய்மொழியின் பங்கை புரிந்து கொள்ளல்
- வகுப்பறையில் வாய்மொழி பயன்படுத்தலை வளர்த்தல்
- கற்றலுக்கான உபகரணங்களை அறிந்துகொள்ளல்
- கேள்வியின் வகைகள் ஆசிரியரின் நிர்வாகம் இவ்றறை அறிந்து கொள்ளல்

**3.முன்னுரை**

கீழ்நிலை தொடக்கப்பள்ளிகளில் தாய்மொழி மூலம் கற்பிப்பதை ஊக்குவிப்பதற்கு ஒரு முக்கிய காரணம் இந்திய கலாச்சாரத்தை பாதுகாப்பதலின் அவசியம் ஆகும். தாய்மொழி ஊக்குவிக்கப்பட்ட போதிலும் சுதந்திரம் அடைந்த பின் அதற்கு நல்ல வரவேற்பு அளிக்கவில்லை. சில இடங்களில் பள்ளிகள் தாய்மொழி பயன்படுத்தப்படவேண்டிய பகுதிகளில் ஆங்கிலம் மூலம் தான் கற்பிக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். ஸ்வீடன் மொழியில் Kartbarn har manga hamn என்ற அருமையான பழமொழி உள்ளது. ஒரு ‘அன்பான குழந்தைக்கு பல பெயர்கள் உண்டு’ என்ற இதன் மொழி பெயர்ப்பு நாம் தாய்மொழி என்று அழைப்பதற்கு மிகவும் பொருந்தும்.

**3.1.வகுப்பறைக் கற்பித்தலில் தாய்மொழியின் இடம்**

**தாய்மொழியை பாதுகாத்தல்**

பல மொழிப் பிரிவினர் தம் சமூக இளைஞர்கள் தம் மொழி பண்பாட்டை காப்பதன் அவசியத்தைப் பற்றி வெளிப்படையாக பேசி வருகின்றனர். சில வெளி நாட்டு அரசுகள் கல்வியில் குழந்தைகளின் முதல் மொழி தாய்மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கொள்கைகளை வகுத்துள்ளனர். UNESCO 2008 தயாரித்துள்ள மாதிரிகளின் தொகுப்பில் தாய்மொழி மூலம் கல்வி கற்றலின் மீது வளர்ந்து வரும் ஆர்வம் தாய்மொழியில் கற்றலுக்காக தயாரிக்கப்பட்ட பலவகையான மாதிரிகள் உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

### 3.2.வகுப்பறையில் தொடா்பு கொள்ளும் முறை

பள்ளியிலோ அல்லது வெளியிலோ கற்றல் கற்பித்தலில் கருத்துப் பரிமாற்றம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பல வழிகளில் கற்பித்தல் என்பது கருத்து பரிமாற்றம் செய்தலே ஆகும். எல்லா ஆசிரியா்களும் கருத்துகளை சிறப்பாக பகிர்ந்து கொள்பவா்கள் ஆவா். கருத்து பரிமாற்றம் என்பது பொருள் உள்ள செய்திகளை அனுப்பபுதல் பெறுதல் என வரையறை செய்யலாம். பிரோகா் (1949) கருத்துப்படி தொடா்பு கொள்ளுதல் என்பது பொருள் உள்ள செய்திகயை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எடுத்துச் செல்லுதல் ஆகும்.

### தொடா்பு கொள்ளும் முறை

முதலாவதாக நோக்கும் போது செய்திகளை ஒருவரிடமிருந்து மற்றவா் மனதுக்கு கொண்டு செல்லுதல் எளிமையாக தோன்றுகின்றது என்றாலும் இது மிகவும் சிக்கலான ஒரு முறை ஆகும். முதலில் அனுப்பபுவா் செய்தியை தாய் மொழியில் மாற்றம் செய்கிறாா். செய்தியை பெறுபவருக்கு எடுத்துச் செல்ல ஏதுவாக குறியீடுகளை (பாா்க்கக்கூடிய, கேட்டகக்கூடிய உணரக்கூடிய, ருசித்துப் பாா்க்கக் கூடிய, முகா்ந்து உணரக்கூடிய) வகையில் தோ்வு செய்கிறாா். செய்தியை பெறுபவா் வாா்த்தைகளின் பொருளை அறிந்து அச்செய்தியை தெரிந்து கொள்கிறாா். இருப்பினும் செய்தியிலுள்ள வாா்த்தைகளுக்கு எந்த அடிப்படை பொருளும் இல்லை. அனுப்புபவரும் பெறுபவரும் அதற்கு கொடுக்கும் பொருளே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

எனவே கருத்து பரிமாற்றம் என்பது கீழ்கண்ட ஆறு அம்சங்கள் கொண்ட ஒரு சிக்கலான நிகழ்வு ஆகும்.

1. **தொடங்கும் இடம் அல்லது அனுப்புபவா்**

2. **செய்தியை தொடங்குபவா் தான் அனுப்புனா்**

   செய்தி பரிமாற்றம் தொடங்குபவா் அல்லது அனுப்புவரிடம் ஆரம்பிக்கிறது இவருக்கு என்று பெயா்.

3. **செய்தி அல்லது குறி**:

   செய்தி என்பது அனுப்புனரிடமிருந்து பெறுபவருக்கு அனுப்பப்படும் வாா்த்தைகளின் பொருள். இதில் மற்ற நபா் வெளிப்படுத்தும் எண்ணங்களும் உணா்ச்சிகளும் அடங்கும். இவை வாா்த்தைகள் மூலமே செய்கைகள் மூலமே அனுப்பப்படலாம்.

4. **ஊடகம்:**

   செய்தியை அனுப்ப பெற உதவுவதால் ஊடகம் எனப்படும்.

5. **பெறுநர்:**

அனுப்பபுவரிடமிருந்து வந்த செய்தியை புரிந்து கொள்பவர் தான் பெறுநர் பெறுநரை நோக்கியே செய்தி அனுப்பபடுகிறது.

6. **ஒலி அல்லது குறுக்கீடு**:

இரு நபர்கள் தொடர்பு கொள்ளும்போது தவறாக புரிந்து கொள்ளல் நிகழலாம். செய்தியை சரியாக வெளிப்படுத்த அல்லது புரிந்து கொள்ள இடையூராக உள்ள தூண்டுதலே ஒலி அல்லது குறுக்கீடு எனப்படுகிறது. இது போன்ற ஒலிகள் சூழ்நிலை அம்சங்கள் (தெருவின் போக்குவரத்து உறத்த பாட்டு) உடல் சம்பந்தமான காரணிகள் (கேட்டல் பார்வை குறைகள்) இவற்றால் ஏற்படலாம். ஒலி பொருளுடையதாகவும் இருக்கலாம்.

**தொடர்பு கொள்ளும் வகைகள்**

பலவகையான தொடர்பு கொள்ளும் முறைகள் உள்ளன. அவற்றில் மிக முக்கியமான சில வகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**1.ஒருவர் தனக்குள்ளும் மற்றவருடனும் தொடர்பு கொள்ளல்**

அகராதியின்படி intro என்பதன் பொருள் தனக்குள் என்பதாகும். ஒருவர் தனக்குள்ளோ அல்லது ஒரு குழுவினுள்ளோ தொடர்பு கொள்ளும்போது இத்தகைய பரிமாற்றம் நிகழ்கிறது.

ஒரு நபர் தன் கருத்துக்களை பிறருக்கு தெரிவிக்கும் முன் தன் கருத்துக்களை தானே புரிந்து கொண்டு எந்த கருத்துக்களை தான் அறிமுகம் செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும்.

**2.வார்த்தைகள் மூலமும் வார்த்தைகளின்றியும் தொடர்பு கொள்ளுதல்**

மொழியை அடிப்படையாக பயன்படுத்தி தொடர்பு கொள்ளுதல் ஒவ்வொரு சமுதாயமும் தொடர்பு கொள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிவடிவங்களை உண்டாக்கியுள்ளது. வார்த்தையின்றி தொடர்புகொள்ளல் பலர் சந்தித்தவுடன் அன்புடன் கை குலுக்குதல் போன்ற பல உணர்வுகளை வெளிப்படுத்த உதவுகிறது. அது உணர்வுகளை காட்டவும் ஒருவர் பேச தன் வாய்ப்பை பயன்படுத்த அல்லது நிராகரிக்கவும் உதவுகிறது. வார்த்தையற்ற குறிகள் ஒருவர் பொய் பேசுவதை காட்டிக் கொடுக்கும். உதாரணமாக ஏமாற்றும்போது குரல் நிலை உயர்ந்து இருக்கும்.

**3.3.வகுப்பறையில் சிறப்பாக தொடர்பு கொள்ளலுக்கு ஏற்படும் இடையூறுகள்**

அனுப்புனரிடமிருந்து பெறுநருக்கு அனுப்பப்படும் செய்தியுடன் குறுக்கிடுவதை தொடர்புக்கு இடையூறு என்கிறோம். இந்த இடையூறு தொடர்பு கொள்ளுதலை தடுக்கிறது. இவை தவிர்க்க இயலாதவை. இவற்றை முற்றிலும் தவிர்க்க முடியாத போதிலும் அனுப்புனரும் பெறுநரும் இதை குறைக்க முயலலாம்.

செய்தியை அனுப்புபவர் அல்லது பெறுபவருக்குள் இடையூறு ஏற்படலாம். உதாரணமாக ஒரு நபருக்கு விவாதிக்கப்படும் தலைப்பிற்கு எதிரான எண்ணங்கள் இருக்கும் போது அது சொல்லப்படும் எந்த கருத்தையும் பாதிக்கும்.

பலர் கருத்து பரிமாற்றம் செய்யும் சூழலில் அமைப்பு இடையூறுகள் தோன்றும் உதாரணமாக தொடர் நிகழ்வு பரிமாற்றம்.

**வகுப்பறை தொடர்பு முறையை சிறந்ததாக ஆக்கும் வழிமுறைகள்**

1.சூழ்நிலையை கருத்தில் கொள்ளல் அங்கு நிலவும் சூழ்நிலை செய்தியை பெறுபவர் இவற்றை தொடர்பு கொள்ளல் சார்ந்துள்ளது.

2.வேண்டுகோள்கள் மற்றவர் பரிந்துரைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல் இயன்றவரை வகுப்பறை தொடர்பு கொள்ளல் கட்டளையாக இல்லாமல் வேண்டுகோளாகவோ பரிந்துரைக்கவோ அமைக்கப்பட வேண்டும். ஆசிரியரின் வேண்டுகோளை எந்த மாணவரும் ஏற்காமல் இருக்க மாட்டார்கள். மேலும் பரிந்துரைகள் செய்தியை பெறுபவரின் பொறுப்பை அதிகரிக்க உதவுகிறது. இந்த நடைமுறை மிக்க உணர்ச்சியடையக்கூடிய மாணவர்களுக்கு மிக உகந்ததாகும்.

3.காரணங்களை கொடுத்தல்: ஒரு கருத்தை விற்பனை செய்தல் போல் தெரியப்படுத்துதல் சிறந்தது. ஒரு வேண்டுகோள் அல்லது பரிந்துரையின் பின்னுள்ள காரணங்களை புரிந்து கொண்டால் அவளோ அல்லது அவனோ விரும்பிய முறையில் செயலாற்றுவர்.

4.பயமுறுத்துதலை தவிர்த்தல்: சிறந்த முறையில் தொடர்பு கொள்ள பெறுபவரை பயமுறுத்துவதை தவிர்க்க குழப்பி எதிர்ப்பை உண்டாக்கும்.

5.மிகவும் தாழ்ந்து வேண்டுதல் தவிர்க்க முயலுதல் இவற்றை தவிர்க்க வேண்டும். மிகவும் தாழ்ந்து சென்றுவேண்டுதல் தகவல் தருபவர் மீதுள்ள மதிப்பை குறைத்துவிடும் என்பதால் இதை தவிர்க்க வேண்டும்.

**3.4.வகுப்பறை கற்பித்தலின் தன்மை வகுப்பில் வாய்மொழி பயன்படுத்துதல்**

**வகுப்பறையில் பேசும் முறை:** வகுப்பறையில் பேசுவது ஒரு தனித்தன்மை வாய்ந்த தொடா்பு முறையாகும். வகுப்பறை உரையாடலின் சிறப்பு அம்சங்கள் சமமற்ற மேலாண்மை தொடா்பு பேசுதலில் மற்றவருக்கு வாய்ப்பளித்தல் கலந்துரையாடல் மாதிரிகள் போன்றவை.

வகுப்பறை உரையாடல் வடிவத்திலும் நோக்கத்திலும் மற்ற சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படும் மொழியிலிருந்து மாறுபட்டது. ஏனெனில் அது வகுப்பறையில் ஆசிரியா் மாணவரின் குறிப்பிட்ட சமூக அந்தஸ்து மற்றும் அங்கு பொதுவாக நடைபெறும். செயல்கள் இவற்றைப் பொருத்தது. அனேக வகுப்பறை தோ்வு முறையின் அம்சங்களை வகைப்படுத்தி பாா்க்கையில் பொதுவாக ஆசிரியா் மூன்றில் இரண்டு பங்குக்கு மேலான நேரம் பேசுகிறாா் என்பதும் ஒரு சில மாணவா்களே அனேக பதில்களை தருகின்றனா் என்பதும் மாணவா்களைவிட மாணவிகள் அதிகம் பேசுகிறாா்கள் என்பதும் பக்கவாட்டிலும் பின் பகுதியிலும் அமா்ந்துள்ள மாணவா்களைவிட வகுப்பறையின் முன் பகுதியிலும் மத்தியிலும் உள்ள மாணவா்கள் அதிகம் பங்கேற்கின்றனா் என்பதும் தெரியவருகிறது. ப்ரேசா ஆல்பெஸ்ட் (1991) என்பவா் வகுப்பறை உரையாடலில் மூன்று வகைகளை கண்டறிந்துள்ளாா்.

**1.மௌனம்**: (ஆசிரியரே மிகுந்த நேரம் பேசுகிறாா் அவ்வப்போது சில நேரங்களை கேட்கிறாா்)

**2.கட்டுப்பாடு** (மேலே குறிப்பிட்டபடி)

3.**செயல்படுதல்** (மாணவா்கள் ஒருவருடன் ஒருவா் பேசுவதற்கு ஆசிரியா் துணை நிற்கிறாா். கற்றல் பற்றிய பயனள்ள கருத்துகளின் அடிப்படையில் கற்பித்தலை மாற்ற எடுக்கப்படும் சமீபகால முயற்சிகள் ஆசிரியா்கள் குறைவான கேள்விகள் கேட்கவும் மாணவா்கள் தம் நம்பிக்கைகளை வெளிப்படுத்தி அதற்கு சாதகமான காரணங்கள் உதாரணங்கள் இவற்றை கொடுக்க கற்றுக் கொள்ள வாய்ப்புகள் அளிக்கவும் பரிந்துரை செய்கின்றன. வகுப்பறை உரையாடலில் ஒரு முக்கிய அம்சம் ஆசிரியரே மிகுந்த நேரம் பேசுவதுதான்.

**3.5.வகுப்பறை உரையாடலின் வகைகள்**

நெயில் மெ்ா்ஸொ் (1996) என்பவா் வகுப்பறையில் பயன்படுத்தப்படும் மூன்று வகையான பேசும் முறையில் சிந்திக்கும் முறை தருக்க முறை ஆராயும் முறை இவற்றை கண்டறிந்துள்ளாா்.

**1.சிந்திக்கும் முறை**

கண்டறியும் பேச்சு: பங்குபெறுவோர் ஒருவர் மற்றவரின் கருத்துகளை துருவி ஆராய்கின்றனர். எல்லோரும் சமமாக பங்கேற்று கேள்விகள் கேட்டு சிந்தித்து அறிவை உருவாக்குகின்றனர்.

**2.தருக்க முறை**

மறுப்பு தெரிவிக்கும் பேச்சு இதில் கற்பவர்கள் எந்த உடன்பாடோ புரிந்து கொள்ளுதலோ இன்றி மறுப்பு தெரிவிப்பதால் எந்தவித அறிவு வளர்ச்சியும் ஏற்படுவதில்லை.

**3.ஆராயும் முறை**

பயன்பாடின்றி சார்ந்த பேச்சு: இதில் பங்கு பெறுவோர் தமக்குள் பொதுவாக உள்ள கருத்துகளை துருவி ஆராயமல் ஏற்றுக் கொள்கின்றனர்.

**3.6.வகுப்பறையில் வாய்மொழி பேச்சு**

கற்றல் திறன்களை வளர்க்க வாய்மொழி பேச்சு மிகவும் உதவுகிறது. வாய்மொழி பேச்சை புரிந்து கொள்ளுதல் வார்த்தைகள் பற்றிய அறிவு படித்து புரிந்து கொள்ளுதல் இவற்றுக்கிடையே ஒரு வலுவான தொடர்பு உள்ளது. ஒரு குழந்தையை வாய்மொழி பெசும் திறன் அளவு அவன் அவள் எழுத்து மூலம் உருவாக்குவதில் காண்பிக்கப்படுகிறது. எல்லா வகுப்பறை பேச்சும் குழந்தையின் கல்வித் திறனை வளர்க்கும் என்பது அல்ல. சிலவகை பேச்சுக்கள் மற்றவற்றைவிட அதிக பயனள்ளதாக இருக்கும். இத்துறையில் ஆர்வமுள்ள ஆராய்ச்சியாளர்கள் சிலவகை வாய்மொழி பேச்சு முறைகள் மற்றவற்றை விட கல்வியில் பயனுள்ளது என கருத்து தெரிவித்துள்ளனர். அதாவது சில வகை பேச்சு முறைகள் எழுத்து வடிவ மொழியுடன் அதிக தொடர்புள்ள அம்சங்களை கொண்டுள்ளது. இந்த சம்பவங்கள் யாவை? எழுத்து வடிவ படைப்புகளை கவனித்தால் அவற்றின் மூன்று முக்கிய அம்சங்களை கண்டறியலாம்.

எழுத்து வடிவ மொழி எப்போதும் சூழ்நிலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. எழுத்து சூழ்நிலையில் இல்லாத பொருள்களை பற்றியுள்ளது. எழுத்து வடிவ மொழி படிப்பவருக்கு தெளிவாக புரியாதவற்றைப் பற்றி கேள்விகளை கேட்க வாய்ப்பு கொடுப்பதில்லை. எழுத்து வடிவ மொழி ஒரு குறிப்பிட்ட வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அம்சங்களிலிருந்து தெரியவருகிறது யாதெனில் எழுத்து வடிவ மொழி ஒரு குறிப்பிட்ட வடிவில பயன்படுத்தப்படுகிறது என்பதாகும். எழுத்துவடிவ மொழியின் மொத்த அமைப்பும் முக்கியமானது அதைப்பற்றிய தேவையான விவரங்களை அளித்தலும் முக்கியம்

ஆகும். எழுத்து வடிவ மொழி சிக்கலான வாக்கிய அமைப்புகளை பயன்படுத்துகிறது என்பதும் உண்மை. ஆயின் இது எவ்வகையில் வாய்மொழி பேச்சுடன் தொடர்பு கொண்டுள்ளது என்று சிந்தித்தால் சிலவகை பேச்சு முறைகள் மற்றவற்றைவிட அதிக அமைப்பு கொண்டாகவும் எழுத்து வடிவ மொழியின் அம்சங்களை கொண்டதாகவும் இருப்பதை அறியலாம். குழந்தைகள் தம் அனுபவங்களைப் பற்றி நீண்ட நேரம் பேசும்போது அதற்கு ஒரு ஒட்டுமொத்த அமைப்பு தேவைப்படுகிறது. செய்தியை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அது அமைக்கப்படவேண்டும் அவர்கள் பேசும் தலைப்பு வகுப்பறையில் எல்ரோரும் காணக்கூடியதாக இருக்கும் போது பேசுவதைவிட வகுப்பறையில் இல்லாதவற்றைப் பற்றி பேசும்போது குறிப்பிட்ட மொழி அதிக சிக்கலான வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்த வேண்டியுள்ளது. வகுப்பறையில் இல்லாதவற்றைப் பற்றி நீண்ட நேரம் பேச வாய்ப்பளிக்கும் செயல்பாடுகள் கற்றலுக்கு சிறந்த அடிப்படையாக அமையும் ஆராய்ச்சியாளர்கள் வாய்மொழி எழுத்து வடிவ செய்திகள் வெவ்வேறு மொழியில் வெவ்வேறு விதமாக அமைக்கப்படுகின்றன என கூறுகின்றனர்.

**வாய்மொழி பேச்சின் முக்கியத்துவம்**

பேச்சு மூலம் மொழியை பயனபடுத்துவது ஒரு மொழி கற்பதில் மிகவும் முக்கியமானது. அது பேச்சுத்திறனுடன் தொடர்புள்ளது. வாய்மொழி என்பது தகுந்த முறையில் சரியான உச்சரிப்பு அழுத்தம் இவற்றுடன் பேசுவதாகும். வாய்மொழி பேசும் திறனை வளர்த்தல் நம் அறிவை வளர்க்க உதவும் சாதனமாகும். வகுப்பறையின் எல்லா செயல்பாடுகளும் பேச்சுத்திறன் கேட்டல் திறன் இவற்றை அடிப்படையாக கொண்டுள்ளன. பேச்சுத்திறன் இருந்தால் வகுப்பில் நன்கு படிக்க அது உதவும். பேசும் திறன் நன்றாக விரிவாக படிக்கும் திறனை வளர்க்க வழி வகுக்கிறது. நன்றாக மொழியைபேசும் திறனை அடையும் போது வார்த்தைகளை பொருளுணர்ந்து பயன்படுத்த கற்றுக் கொள்கிறோம். இது கேட்டல் பேசுதல் படித்தல் எழுதுதல் ஆகிய நான்கு திறன்களில் உயர்ந்த இடத்தை வகிக்கும் மேலும் எழுதும் திறனை வளர்க்கவும் உதவுகிறது.

**3.7.கலந்துரையாடல் ஒரு கற்றலுக்கு உதவும் சாதனம்**

வகுப்பறையில் கலந்துரையாடல் பாடங்கள் புரிந்து கொள்ளுதலை வளர்க்க மிக முக்கியமானது. ஆசிரியர்கள் கலந்துரையாடலை மாணவர்களை ஈடுபடுத்தவும் தம் கருத்துக்களை மதிப்பீடு செய்யவும் அவ்றறை சரியானது எனக் காட்டவும் மற்ற பல இடங்களிலிருந்து வந்த செய்திகளுடன் ஒப்பிடவும் அவர்கள் கற்றவற்றைப் பற்றிய சொந்த எண்ணங்கள் உணர்வுகளை தெரிவிக்கவும் பயன்படுத்தகின்றனர். குறிப்பாக தொடக்க நிலை மாணவர்கள் தம் சுற்றுப்பபுறத்திலுள்ள தொட்டுப் பார்க்கக்கூடிய பொருள்கள் நிகழ்வுகள் இவற்றின் மூலம் புதிய வார்த்தைகளை கற்றுக் கொள்கின்றனர். உயர்நிலைப் பள்ளி

மாணவர்கள் குறிப்பாக ஆசிரியர் சகமாணவர்களுடன் உரையாடுவதன் மூலம் கற்கின்றனர். உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு புதிய வார்த்தைகளை தொடர்பு கொள்ள உதவும் சாதனமாகவும் கற்றலின் குறிக்கோளாகவும் உள்ளது.

பேசுவதை (கருத்து பரிமாற்றம் செய்வதை) தூண்டுவதுடன் வகுப்பறை கலந்துரையாடல்கள் முன்னுரை கொடுத்தல் புதிய வார்த்தைகளை பயன்படுத்துதல் விரிவாக ஆய்வு செய்தல் போன்றவற்றிற்கு வாய்ப்பு அளிக்கிறது.

வகுப்பறை கலந்துரையாடலின்போது ஆசிரியர் பயன்படுத்தும் வழிகாட்டு மொழியில் கவனம் செலுத்ததுதல் (முக்கியமான அம்சங்களை கூர்ந்து கவனித்தல்) பெயரிடுதல் (கருத்துகள் யுக்திகள் நிகழ்வுகள் இவற்றிற்கு)மற்றும் விரிவுபடுத்துதல் (சொல்லப்பட்ட கருத்துகள் கேள்விகள் இவற்றை அவர்களிடமிருந்து மேலும் சிக்கலான அறிவு சார்ந்த வாய்மொழி பதில்களை வரவழைக்க உதவும்) ஆகியவை அடங்கும்.

வகுப்பறை கலந்துரையாடலை நிர்வாகம் செய்யும்போது ஆசிரியர்கள் கீழ்க்கண்ட வழிகாட்டும் முறைகளை மொழிகளில் பயன்படுத்துகின்றனர். தொடர்புபடுத்துதல் (மற்றவர் கருத்துடன் இணைந்து உரையாடலை தொடரச் செய்தல்) வழிகாட்டுதல் (மாணவர்களின் கவனத்தை ஈர்த்து தொடர்புகளை ஏற்படுத்த வழிகாட்டுதல்)

**3.8.வகுப்பறையில் கேள்வி கேட்டலின் தன்மைகள்**

ஒரு கேள்வி என்பது கேள்வி அமைப்புடனும் பொருளுடனும் அமைந்த ஒரு வாக்கியமாகும். வகுப்பறை சூழலில் ஆசிரியரின் கேள்விகள் கற்க வேண்டிய பாடப்பொருள் காட்டும் தூண்டுகோளாகவும் அவர்கள் எதைச் செய்ய வேண்டும் எப்படி செய்ய வேண்டும் என்பதை காட்டும் வழிகாட்டிகளாகவும் பயன்படுகின்றன. இப்பகுதி வகுப்பறையில் ஆசிரியர் கேள்வி கேட்கும் நடைமுறைக்கும் கற்றல் நினைவில் வைத்தல் மாணவர் பங்கேற்பின் அளவு போன்ற வேறுபட்ட வெளிப்பாடுகளுக்கு இடையே உள்ள தொடர்பு இவற்றின் மீது கவனம் செலுத்துகிறது. இதன் பொருள் கேள்வி ஆய்விலிருந்து சில சிறிய பகுதிகள் இந்த ஆய்விலிருந்து விளக்கப்பட்டுள்ளது என்பதாகும். உதாரணமாக இங்கு பாடத்திலோ அல்லது தேர்வுகளிலோ கேட்கப்படும் கேள்விகள் பற்றி கருத்து தெரிவிக்கப்படவில்லை. கற்றல் திறன்களை போதிக்கும் முறைகள் கேள்விகள் கேட்கும் முறைகள் (யுத்திகள்) ஆகியவற்றைப் பற்றி மேலெழுந்த வாரியாக கருதுகிறது. வகுப்பறையில் ஆசிரியர்கள் கேட்கும் கேள்விகளின் நோக்கம் என்ன? இதைப் பொருத்து இலக்கியத்தில் பலவகையான நோக்கங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

- ஆர்வத்தை வளர்த்து மாணவர்களை பாடங்களில் ஆர்வத்துடன் ஈடுபட தூண்டுதல்.

- மாணவர் பங்கேற்றலை மதிப்பிடாமல் வீட்டுப்பாடம் வகுப்பறையில் கொடுக்கப்பட்ட வேலைகளை முடித்தல் இவற்றை சோதித்தல்.
- கவனத்துடன் சிந்திக்கும் திறனையும் கேள்வி கேட்கும் மனப்பான்மையையும் வளர்த்தல்.
- முன்னால் நடந்த பாடத்தை மறுபார்வை செய்தல் சுருக்கமாக எழுதுதல்
- புதிய தொடர்புகளை வெளிக்காட்டி உற்று நோக்கும் திறனை வளர்த்தல்
- மாணவர்கள் தாமாகவே அறிவைத் தேட தூண்டுதல்.
- மேற்கண்ட நோக்கங்களுடன் ஆசிரியர் வகுப்பறையில் கேள்விகளை கேட்கிறார். இந்த பலவகை வினாக்கள் ஒவ்வொன்றும் மாணவரிடமிருந்து பதிலை வரவழைக்கிறது. சில வெலைகளில் இந்த பதிலுக்கு ஆசிரியர் அளிக்கும் ஒப்புதல் மறுத்தல் இவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இது போன்ற நிகழ்வுகளில் மாணவர்கள் சிலபடிகளை (முழு நினைவுடனோ அல்லது முழு கவனமின்றியோ கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க பின் தொடர்கின்றனர்)

**இப்படிகள் பின்வருமாறு**

- கேள்வியை கவனித்தல்
- கேள்வியின் பொருளை ஆய்வு செய்தல் (படித்து உணர்தல்)
- மறைமுகமான பதிலை வரவழைத்தல் (தன் மனதினுள் பதிலை தயார் செய்தல்)
- வெளிப்படையான பதிலை வரவழைத்தல்
- பதிலை மாற்றியமைத்தல் (ஆசிரியர் தூண்டுதல் அடிப்படையில் மற்றவரின் கருத்துகளுக்கு மதிப்பளித்தல்)

### 3.9.கேள்வியின் வகைகளும் ஆசிரியரின் கட்டுப்பாடும்

**கேள்வி வகைகள்**

**முக்கியமான கேள்விகள் நான்கு வகைப்படும்**

- மேலாண்மை தன்மை வகுப்பு நடைமுறையை தொடரச் செய்யும் கேள்விகள்
- வலியுறுத்தும் தன்மை ஒரு குறிப்பிட்ட கருத்தையோ அல்லது கூற்றையோ வலியுறுத்துதல்.
- மூடிய – மாணவர் நினைவில் வைத்திருப்பதை சோதிக்கவோ அல்லது ஒரு குறிப்பிட்ட கருத்தின் மீது சிந்தனையை செலுத்தல்.

- திறந்த – மாணவர்களிடையே கலந்துரையாடல் கருத்து பரிமாற்றம் இவற்றை வளர்க்க உதவும் கேள்விகள்.
- கீழே கேள்வி வகைகள் அடங்கிய பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. இதை கேள்வி கேட்டலை ஆராயவும் மாணவர்களை சிந்திக்க தூண்டும் பலவகையான கேள்விகளை உருவாக்கவும் பயன்படுத்தலாம்.

**1.ஆழ்ந்து செல்லும் கேள்விகள்**

முதல் மாணவர்களின் முதல் பதிலைத்தாண்டிய சொல்ல வைக்கும் அடுக்கடுக்கான கேள்விகள் மாணவர்கள் கொடுக்கும் பதிலின் அடிப்படையில் ஆசிரியரின் மற்ற கேள்விகள் அமையும்.

**வகைகள்**

**அ. தெளிவுபடுத்துதல்**

உ-ம் நீங்கள் கூறுவதன் சரியான பொருள் என்ன?

நீங்கள் தயவு செய்து உம் கூற்றை வேறு வகையில் கூறமுடியுமா?

அந்த கருத்தை மேலும் விளக்கிக் கூற முடியுமா?

அந்த சொல்லுக்கு தங்கள் பொருள் யாது?

**ஆ. துருவி ஆராயும் தன்மையை அதிகரித்தல்**

உ-ம் தாங்கள் என்ன யூகம் செய்கிறீர்கள்?

தாங்கள் அவ்வாறு நினைக்க காரணங்கள் என்ன?அதற்கு அவ்வளவு தான் பொருள் உள்ளதா? நாம் இங்கு எத்தனை வினாக்களுக்கு பதிலளிக்க முயல்கிறோம்?

இந்த நோக்கத்திற்கு எதிரானவர் எவ்வாறு நடந்து கொள்ளலாம்?

**இ. திரும்ப கவனித்தல்**

உ-ம் இது உண்மையெனில் விளைவுகள் என்ன?

ஜானுடைய பதில் எவ்வகையில் தொடர்பு உள்ளது?

இதை உடன் தொடர்பு படுத்தமுடியுமா?

அந்த பதிலை நாம் அலசிப்பார்ப்போமா?

**4.தூண்டுதல்**

உ.ம் ஆசிரியர்: ஜான் 94 இன் வர்க்க மூலம் என்ன?

ஜான்: அது 9க்கும் 10க்கும் இடையில் உள்ளது.

**5.வேறு மாணவருக்கு திருப்புதல்**

உ.ம் ஆசிரியர் ஹெம்மிங்வேயின் முதியவரும் கடலும் என்ற புத்தகத்தின் உட்பொருள் என்ன?

அது ஒரு முதியவர் மீன் பிடித்தலில் ஒரு முதியவரின் தைரியத்தைப் பற்றியது.

ஆசிரியர்: மேரி இதை நீ ஏற்றுக்கொள்கிறாயா?

அல்லது மேரி அது அவ்வளவு எளிதானது என நினைக்கிறாயா?

அல்லது மேரி சாமின் பதிலை மேலும் விளக்கிக்கூறமுடியுமா?

**II உண்மையானவற்றைப் பற்றிய கேள்விகள்**

மாணவர்கள் முன்னால் கற்ற குறிப்பிட்ட செய்தியை நினைவு கூற வைக்கும் கேள்விகள் இவற்றில் அதிகமாக யார் என்ன? எப்போது எங்கு போன்றவை பயன்படும் வகைகள்.

1. **எளிய தகவல் துண்டுகள்**

இரண்டாம் உலகப் போரில் சுதந்திர பிரான்ஸ் நாட்டு ராணுவத்தின் தலைவராக இருந்தவர் யார்? மார்க்ரெட் மைக்கேலின் என்ற நாவலின் (கதையின்) முக்கிய கதாபாத்திரம். ஷேக்ஸ்பியர் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்? ஓட என்பதற்கு ஸ்பேனிஷ் விளைச் சொல் எது?

2. **தர்க்க ரீதியான உண்மைகள் (தொடர் நிகழ்வுகள்)**

ஒஷ்ரு பில் சட்டமாக ஆகும் முன் எந்த படிகளை கடந்து செல்கிறது? யார்க் டவுனில் அமெரிக்கா பிரான்ஸ் நாட்டு படைகள் எவ்வாறு காரன்வெல் மற்றும் பிரிட்டிஷ்காரர்களை அடக்க முடிந்தது? மணலில் காலடிச் சுவடுகளைப் பார்த்தபோது ராபன்சன் க்ரூசோ எவ்வாறு நடந்து கொண்டார்? ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை வியாபாரத்திற்கு உற்பத்தி செய்யும் முறை யாது?

**III மாறுபட்ட கேள்விகள்**

சரியான தவறான விடையில்லாத ஆயின் வாய்ப்புகளை ஆராய தூண்டும் கேள்விகள் தகுந்த பதிலளிக்க பொருள் நிறைந்த மற்றும் கருத்துக் கொண்ட சிந்தனைகள் தேவைப்படும்.

உ.ம்

அமெரிக்க காங்கிரஸ் சிகரெட்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனையை தடை செய்யும் சட்டத்தை நிறைவேற்றினால் என்ன நேரிடும்?

உடல் ஊனமுள்ளவனாக இல்லாமல் ஜான் உயரம் வலிமைமிக்க பையனாக இருந்திருந்தால் கதை எப்படி மாறியிருக்கும்?

**உயர்நிலை கேள்விகள்**

இந்த கேள்விகளுக்கு பதில்களை மாணவர்கள் தீர்மானிக்க வேண்டும் தவிர அவற்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டாம். உண்மையின் அடிப்படையிலான பொதுக்கருத்துகள் பொருளுள்ள வடிவங்களில் தேவைப்படும் வகைகள்.

**மதிப்பீடு செய்தல்**:

கருத்துகளையும் பொருள்களையும் முன்னால் தீர்மானிக்கப்பட்ட நிலைகளுடன் ஒப்பிடுவதன் அடிப்படையில் மதிப்பீடு செய்தல் தேர்வு செய்தல்

உ.ம்

இந்த இரு புத்தகங்களில் எது விக்டோரியாவின் காலத்தை புரிந்து கொள்ள உதவுகிறது? ஏன்?

சமமான வாய்ப்புகள் இருக்கும் நிலையில் ஜெனரல் ராபர்ட் லீ யலீஸெஸ் கிராண்ட் இருவரில் யாருக்கு மிகச் சிறந்த தளபதியாக தீர்மானிப்பாய்?

**2. யூகித்தல்** இதற்கு தொகுப்பு முறை அல்லது விதிவரு முறை தேவைப்படுகிறது.

**தொகுப்புமுறை**

தனிப்பட்ட உண்மைகளை சேகரித்து அவற்றிலிருந்து ஒரு பொது கருத்தை கண்டறிதல்.

**விதிவருமுறை**

ஒரு பொது கோட்பாட்டின் மதிப்பை ஒரு குறிப்பிட்ட பிரச்சனையின் மூலம் சோதித்தல் 2ம் இந்த உலக தலைவர்களுக்கிடையே உள்ள பொதுவான குணங்களை சோதித்தறிந்தோம். இதன் அடிப்படையில் பொதுவாக தலைமைவகிக்க எந்த குணங்கள் தேவை? ஏன்?

வாயுவின் வெப்பநிலை மாறாமல் இருக்கும்போது அதை 4000 அடி உயரே எடுத்துச் சென்றால் அதன் அழுத்தம் என்னவாகும்? ஏன்?

**3. ஒப்பிடுதல்:**

இதில் மாணவர்கள் கருத்துகள் பொருள்கள் ஒன்றாக உள்ளதா மாறுபட்டு உள்ளதா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

மங்செல் கிலாம் என்ற இரு கடல்வாழ் பிராணிகள் ஒன்று போன்ற பண்புள்ளதா அல்லது வேறு பண்புள்ளதா?

லிங்கனுடைய கெட்டிஸ்பர்க் பேச்சுக்கும் பெரிகிள்ளின் இறுதிச் சடங்கு பேச்சுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?

19ம் நூற்றாண்டின் உயர்நீதிமன்றத்தின் செயலுக்கும் , Social Dar Winism என்ற கருத்துக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?

பயன்படுத்தல் ஒரு கருத்து அல்லது கொள்கையை தான் கற்றுக் கொண்ட சூழ்நிலையிலிருந்து மாறுபட்ட சூழலில் மாணவர்களை பயன்படுத்த செய்தல்

**கருத்து**

பொதுவான பண்புகள் உள்ள பொருள்கள் நிகழ்வுகளை வகைப்படுத்தல்

**கொள்கை**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இரு கொள்கைகளுக்கிடையேயுள்ள தொடர்பு.

**(உ.ம்)**கிரெஹாமின் விதி ஜெர்மனியன் வெய்மர் குடியரசில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டது?

**(உ.ம்)** நாய்கள் கெட்டவை என்ற கருத்துடன் நீவிர் வளர்ந்துள்ளீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சிறுவராக இருக்கும்போது தொடர்பு கொண்ட பல நாய்களில் ஒன்று கூட உம்மை கடிக்கவில்லை எனில் நீங்கள் இப்போது நாய்களிடம் எப்படி நடந்து கொள்வீர்கள்? உங்கள் நடத்தை நாயின் வகை அளவு இவற்றைப் பொருத்து மாறுமா? இந்த உதாரணத்தைப் பயன்படுத்தி நம் மனதில் முன்னதாக உள்ள தவறான கருத்துகள் பற்றி விளக்கவும்.

V வளர்ச்சிகளை தூண்டும் கேள்விகள் இவை மாணவர்களின் உணர்ச்சிகள், அவர் மதிக்கும் பண்புகள், நோக்கு இவற்றை தூண்டக்கூடியவை.

(உ.ம்) இதைப்பற்றி நீர் எப்படி உணருகிறீர்? அது உமக்கு முக்கியமானதா? ………….ஐ செய்ய விரும்புவீரா?

சூழ்நிலைக் கேள்விகள்

இவை கற்றல் நடைபெறும் சூழ்நிலையுடன் தொடர்புள்ளவை

(உ.ம்) ஏதேனும் வினாக்கள் உள்ளனவா? மேலும் ஏதாவது கருத்துக்கள் உள்ளனவா? கொடுக்கப்பட்டிருக்கும் ஒப்படைவு தெளிவாக உள்ளதா? அதை திரும்ப கூற முடியுமா? தொடர்ந்து கவனிக்க தயாராக உள்ளோமா?

**3.10.முடிவுரை**

இப்பகுதி வகுப்பறையில் தாய் மொழியின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துகிறது. மாணவர்களுக்கு தொடர்பு கொள்ளும் திறன் எந்த அளவுக்கு முக்கியமானது என்பதை காட்டுகிறது. மேலும் இப்பகுதி விரிவுரை செய்யும் திறன் பேசும் திறன் கேள்வியின் விளக்கம் இவற்றைப் பற்றி விரிவாக மாணவர்களுக்கு புரியும் வகையில் விளக்குகிறது.

**சிந்திப்பதற்கும் கலந்துரையாடவும் தகுந்த கேள்விகள்**

1.தாய்மொழியின் பங்கு இன்றைய வகுப்பறை போதனையில் தாய் மொழியின் முக்கியத்துவத்தைப் பற்றி கலந்துரையாடுக.

2.கேள்விகளின் வகைகள் ஆசிரியர் கட்டுப்பாடு இவற்றைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

3.வகுப்பறையில் தொடர்பு கொள்ளும் முறைப்பற்றி விவரிக்க.

4.சரியான பேச்சு முறைகளை கற்றுக் கொள்வதற்கு இந்திய மாணவர்கள் எதிர்கொண்ட பொதுவான பிரச்சனைகள் யாவை?

# அலகு-4 கலைத்திட்டம்முழுவதும் விரவியுள்ள மொழி

# (Language Across Curriculum)

**பாடப்பொருள் நோக்கங்கள் (COURSE OBJECTIVES)**

இப்பாடப் பொருளினைக் கற்ற பின்பு ஆசிரிய-மாணவர்கள் கீழ்க்காணும் கற்றல் இலக்குகளை அடைவர்.

- பல்வேறு பாடங்களில் மொழியின் பயனன்பாட்டை விவாதித்தல்.
- கலைத்திட்டத்தில்விரவியுள்ளமொழிவழியே கற்பித்தல் ஊடகத்தின் (Medium of Instruction) தாக்கத்தை கண்டறிதல்.
- படித்து புரிந்துகொள்ளுதலின் (Reading Comprehensions) முக்கியத்துவத்தையும் அவற்றின் படிநிலைகளை(comprehension strategies) அறிதல்.
- பற்றாக்குறை கொள்கை (Deficit Theory), மற்றும் தொடர்ச்சியற்ற கொள்கை (Discontinuity Theory) போற்றவற்றையும், அதன் பயன்பாட்டையும் அறிதல்.
- வகுப்பறை இடைவினை பயன்கள் மற்றும் வகுப்பறை இடைவினையை ஊக்குவிக்கும் படிநிலைகளை அறிதல்.

**4.1. அறிமுகம்:**

மொழி என்பது நம்முடைய சிந்தனைகள் மற்றும் உணர்வுகளை பரிமாற்ற உதவும் கருவியாகும்.ஆனால் தற்கால கல்விச் சூழ்நிலையில் மொழியானதுஉளவியல், பண்பாடு, சமூகவியல், நூல் கட்டமைப்பு போன்ற பல்வேறு பரிமாணங்களை ஆழமாக புரிந்துகொள்வதற்கே மிகவும் முக்கியத்துவம் தருகிறது. இவற்றை புரிந்து கொள்வதற்கு மொழியினுடைய அறிவு அவசியமாகிறது. எனவே மொழியானது எவ்வாறு கலைத்திட்டத்தில்விரவியுள்ளது என்பதையும் அதன் பயன்பாட்டையும் அறிவது பற்றி இந்த அலகு ஆராய்கிறது.

**4.2. பாடப்பொருள் (content)**

1.ஒரு குறிப்பிட்ட பணிக்கான மற்றும் பாடப்பிரிவுகளுக்கான கல்வி

1. சமுக அறிவியல்.
2. அறிவியல் மற்றும்
3. கணிதம்.

2.கற்பித்தல் ஊடகத்தை பற்றிய சிக்கலான மீள்பார்வை.

3.படித்து புரித்துகொள்ளுதலில் பின்தங்குதல் தொடர்பான காரணிகள்.

4.படித்து புரித்துகொள்ளுதல் திறனை வளர்தல்.

5.மொழி தொடர்பான கொள்கை

1. பற்றாக்குறை கொள்கை.
2. தொடர்ச்சியற்ற கொள்கை

6. மொழியினுடைய கல்வி பயன்கள்.

7. வகுப்பறை இடைவினையின் தன்மையை புரித்து கொள்ளுதல்.

### 4.3. மொழிஎன்பது ஒரு குறிப்பிட்ட பயன்பாட்டிற்கான கருவி

மொழியானது மொழியியலில் இரண்டு முக்கியப் பயன்பாட்டோடு தொடர்புடையது

1. கல்வியிலும், பயிற்சி அளிப்பதிலும் அதன் தேவையை பொருத்து தனது கவனத்தை செலுத்துகிறது.
2. பல்வேறு பாடப்பிரிவுகளில் மொழி தாக்கம் எவ்வாறு உள்ளது, என்பதை ஆய்வு செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது.

### 4.4. கல்வி மற்றும் பயிற்சி (Education and training)

மொழிக்கான குறிப்பிட்ட நோக்கம் என்பது பெரும்பாலும்இரண்டாம் மொழியான அயல்நாட்டு மொழிகளில் கற்றல்-கற்பித்தலை மேற்கொள்வதே ஆகும்.அது கற்பவரின் முக்கியத் தேவைகளைப் பற்றி எடுத்துரைக்கிறது. கற்பவருக்கு, கற்றல் முடித்த பிறகோ அல்லது அவர் ஒரு பணியை தேடும் பொழுதோ,மொழியானது ஒரு சிறந்த கருவியாக அவருடைய வாழ்கையில் காணப்படுகிறது.ஒரு விவாதிக்கதக்க கலைத்திட்டம் என்பது ஆசிரியர் மற்றும் மாணவர்கள்,அவர்களளுடைய விருப்பம் ,தேவைகள், அனுகூலங்கள், வழிகாட்டுதல்கள் போன்றவைகள் ஒரு பாடப்பிரிவில் விவாதிக்கதக்கக்கூடிய பாடபொருளாக அமைந்திருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் **கல்வி மற்றும் பயிற்சி** சிறப்பானதாக அமையும்.

### 4.5. மொழியியலில் ஆராய்ச்சி (Research in Language)

குறிப்பிட்ட நோக்கத்திற்கான மொழி என்பதை பயன்பாட்டு மொழியியல் என பயன்படுத்தலாம்.பயன்பாட்டு மொழியியல் என்பது பல்வேறு பாடப்பிரிவுகள், பல்வேறு மொழியியல் வகைகள், அவற்றின் எதிர்காலம் மற்றும் தொழில் நுட்பம் போன்றவற்றை ஒரு உறுப்பினராக கொண்டு பல்வேறு மொழிகளின் உதவியுடன் ஒரு மொழியை ஆராய்வது ஆகும்.

மொழியியல் ஆராய்ச்சி என்பது பிரச்சனைக்கு உண்டான பரப்பளவுகளான கல்வியியல், மொழிஉருமாற்றம்செய்தல், அகராதிகளை வடிவமைத்தல் போன்றவற்றில் ஆராய்ச்சி மேற்கொள்வது. பயன்பாட்டு மொழியியல் என்பது ஒரு மொழியியலில் உடைய பல்துறைப்பகுதி,அது மொழிதொடர்பான நடைமுறை, வாழ்க்கையில் உள்ள பிரச்சனைகளை ஆராய்ந்து அவற்றிற்கு உண்டான தீர்வுகளை வழங்குவதேபயன்பாட்டு மொழியியல் எனப்படும்.மேலும் கல்வியியல், உளவியல், தொடர்பியல் ஆராய்ச்சி, மானுடவியல் மற்றும் சமூகவியல் போன்ற கல்வி தொடர்பான பிரச்சனைகளை பயன்பாட்டு மொழியியல் ஆராய்கிறது.

### 4.6. கணிதத்தில் மொழியின் பயன்பாடு

பிரச்சனைகளை புரிந்துகொள்ளுதல், கதைவடிவில் உள்ள கருத்துக்களை புரிந்துகொள்ளுதல், மாணவர்களுக்கு சிறு கதைகளாக உள்ள வாக்கியக் கணக்குகள் பற்றி சிந்தனையை வளர செய்தல், போன்ற செயல்பாடுகளுக்கு ஊக்குவித்தல் என்பது அவசியமாகிறது.இந்த ஊக்குவித்தலினால் அம்மாணவர்கள் தான் படித்ததை உபயேகிக்கவும் அதை மற்ற பாடப்பொருளுடன் தொடர்புபடுத்தவும் முடியும்.மாணவர்கள் கேள்வி கேட்கின்றபொழுது அப்பாடப்பிரிவில் ஈடுபாடு மற்றும் ஆர்வம் அதிகரிக்கிறது.மேலும் ஆங்கில மொழியை கற்கும் மாணவர்களுக்கு ஆங்கில மொழியிலுள்ள வாக்கியக் கணக்குகளை விவாதிப்பதற்கு மிகவும் எளிமையாக இருக்கிறது. இவ்வகையான சிந்தனைகள் மாணவர்கள் தங்கள் புதிய அனுபவங்களை தங்களுடைய பழைய அனுபவங்களோடு தொடர்புபடுத்தி பார்த்து அதற்குப் பிறகு மாணவர்கள் எவ்வாறு தங்கள் தேர்ந்தெடுத்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பதை பற்றிப் புரிந்துகொள்வர்.

(Hyde, 2006)இவறின் கூற்றுப்படி மாணவர்களுக்கு கணித ஆசிரியர் பல்வேறு வகையான செயல் முறைகள்(கணக்கிடுவது, படங்கள், வரைபடங்கள், எழுத்துமொழி, குறியீடு, அட்டவணைகள் சமன்பாடுகள், செயல்பாடுகள், நடைமுறை உலகத்தோடு அமைந்த சூழ்நிலைகள்)(manipulative, pictures, graphs, written language, symbols, tables, equations, action movement, oral language, or mental images of real world situations)வழங்குவதன் மூலம் கணிதத்தில் மாணவர்களின மொழி திறன் அதிகறிக்கும். இவை தாய்மொழியில் கற்கும் மாணவர்களுக்கும் முக்கியமாக ஆங்கில மொழிகளை கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இருக்கும்.

மாணவர்களுக்கு தாங்களே சுயமாக வாக்கிய கணக்குகளில் எழுதுவதற்கு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் அவர்களுடைய எண்ணற்ற எழுத்து திறன்களுக்கு ஓர் ஆசிரியர் உதவமுடியும். இவ்வாறு மாணவர்களை வாக்கிய கணக்குகளை எழுத ஈடுபடுத்தும்பொழுது அவர்கள் கணிதத்தை புரிந்துகொண்ட விதத்தை செயல்முறையாகவும்

வாக்கிய அமைப்பாகவும் கலைச்சொற்களாகவும் இலக்கணம் மற்றும் ஒரு குறிப்பிட்ட குறியீடுகளாகவும் புரிந்துகொள்ள இயலும்.

வாக்கியக் கணக்குகளை எழுதுவதால் சரியான சுருக்கமான மற்றும் முழுமையான கருத்துக்கள் அதிகளவில் கிடைக்கும்.வாக்கியக் கணக்குகளை எழுதுகின்ற பொழுது அவர்களை அவற்றைப் படிக்கச் சொல்லி அவை முழுமையான பொருளைத் தருகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் அவசியம். மாணவர்களின் பின்னூட்டங்களைப் பொருத்து அவர்களுடைய பிரச்சினையை மீள்பார்வை செய்யலாம்.

கணிதம் என்பது கண்டறியப்பட்ட ஒரு மொழி ஒரு சில வார்த்தைகள் ஆங்கில மற்றும் கணிதத்திலும் பயன்படுத்துவதால்(ex: square, similar, range) நமக்கு சில குழப்பங்கள் ஏற்படலாம் மேலும் சில குறிப்பிட்ட வார்த்தைகள் சேர்ந்து நமக்கு குழப்பத்தை ஏற்படுத்தலாம்.நூறு மற்றும் நூற்றுமாணம் குறுக்கீடு மற்றும் நிறுத்தம்.எ.கா. Equation, Expresion,

ஒரு சில அனுகுமுறையில் மாணவர்கள் உதவியுடன் செயல்முறைகளை செய்து அவ்விடத்தில் மேற்கூறிய வார்த்தைகள் மற்றும் முழுமைபெறாத வாக்கியங்கள் பற்றி ஆய்வு செய்து அவற்றிலுள்ள வேறுபாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து படங்கள் வலைதளங்கள் மற்றும் பிற பொருள்கள் ஆகியவற்றின் உதவியுடன் அவ்வேறுபாடுகளுக்கு பிரச்சனையை தீர்த்தல் அவசியம்.

### 4.7. வரைப்பட ஒருங்கிணைப்பாளரின் பயன்கள் (Use of Graphic Organizers)

**Graphic Organizers**என்பது கற்பித்தல் துணைக்கருவிகள் இது பார்க்கக்கூடிய வகையில் கருத்துக்களை ஒருங்கிணைப்பதால் கருத்துக்களை புரிந்துகொள்வதற்கும் நினைவில் வைத்துக்கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் எளிதாக அமைகிறது.இந்த ஒருங்கிணைப்பால் மாணவர்களுடைய படிக்கும் ஆற்றல், எழுதுதல் உரையாடுதல் போன்றவற்றில் வளர்ச்சிக் காணப்படும். கணிதத்தில் கருத்து வரைபட வலைதளம், வரைபடங்கள் மென்வரைபடங்கள் போன்றவைகள் கணிதம் கற்பிப்பதற்கு மிகவும் பயனுடையதாக இருக்கிறது.

**Graphic Organizers** மாணவர்களை கணிதத்தில் முக்கி கருத்துக்களை உருவாக்க வழிவகை செய்கிறது.கல்வி மற்றும் பயிற்சியில் உள்ளது போன்று இங்கும் மாணவர்கள் தங்கள் பழைய அனுபவங்களை புதிய அனுபவங்களோடு தொடர்புபடுத்தவும் மேலும் **Graphic Organizers,** எழுதுதல் மற்றும் வாய்வழிச் செய்திகள் படிக்கக்கூடிய ஆற்றல் போன்றவற்றில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் படித்தவற்றை மனதில் நிறுத்துதல், நினைவுத்திறனை அதிகரித்தல், முன்னனுபவத்தோடு சிந்தித்தல், முன்னனுபவத்தோடு படித்தல், செயல்பாடுகளை செயல்படுத்துதல் போன்றவற்றை இந்த ஒருங்கிணைப்பாளர் உதவியோடு சிறப்பாக மேற்கொள்ள முடியும்.

பல்வேறுவகையான பிரதிநிதித்துவ வரைபடங்கள் மாணவா்களின் மொழி மற்றும் கலைச்சொற்கள் வளா்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக உள்ளது.இந்த வரைபடங்களில் மாணவா்கள் எழுவதின் மூலம் பொதுமைக் கருத்துக்களை புரிந்துகொள்ளுதல வரைபடத்தின் மூலம் விளக்குதல் கலைச்சொற்கள் குறியீடுகள் போன்றவற்றை இணைக்க ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

### 4.8. நவீனத்துவ சிந்தனைக்கு மாணவா்களை பழக்கப்படுத்துதல் (Modeling of Think Alouds)

ஆசிரியா்கள் சிந்தித்தலின் பல்வேறு படிகளில் உபயோகித்து பிரச்சணைக்குரிய கருத்துக்களை மாணவா்களை படிக்கச் செய்து அதன் மூலம் அப்பிரச்சனைக்கு உண்டான ஆசிரியரின் அனுபவங்களை மாணவா்களுக்கு வழங்கவேண்டும்.பல்வேறு சூழ்நிலைகளில் ஆசிரியா் தயாரித்த மாதிரிகளை மாணவா்களுக்கு காண்பித்து தன் சகநண்பா்களுடன் அம்மாதிரியை பயிற்சி செய்வதற்கு ஆசிரியா் அனுமதிக்க வேண்டும்.அவ்வாறு செய்வதன் மூலம் மாணவா்கள் பிரச்சனைகளை தீா்ப்பதில் ஒத்துழைப்பதோடு மட்டுமல்லாமல் தங்கள் திறன்களை வெளிக்கொண்டுவருவதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது.

### 4.9. தின மற்றும் மாத பத்திரிகைகளைப் படித்தல் (Learning daily and monthlyJournals).

பத்திரிகைகளில் உள்ள பதிவுகளை படிக்கின்றபோது அப்பதிவுகள் பயனாளிகளான மாணவா்களுக்கு மிகுந்த உதவிகரமாக இருக்கும். புதிய வகையான கணித மாதிரிகளை பயன்படுத்துவதும் மற்றும் புதிய செயல்முறைகளில் அவா்களுக்கு பயிற்சி அளிப்பதும் அவா்களுடைய ஆராய்ச்சி திறனை வளா்ப்பதற்கு இந்த தின மற்றும் மாத பத்திரிகைகளை வாசிப்பது என்பது மிகுந்த உறுதுணையாக இருக்கும்.எந்த ஒரு புதிய கருவியை வெளியிடும்பொழுது அந்த கருவியை பயன்படுத்துவது பற்றிய முழுமையான அறிவு ஆசிரியா் தெரிந்திருக்க வேண்டும்.மாணவா்களுக்கு பத்திரிகை செய்திகளை ஒருங்கிணைத்து எழுதுவதில் ஏதேனும் சிரமங்கள் இருப்பின் ஆசிரியா் அவா்களிடம் உரையாடுவதற்கு நேரத்தை செலவிடவேண்டும் சில நேரங்களில் மாணவா்களுக்கு எது தேவைப்படுகிறதோ அவற்றை பத்திரிகை பதிவுகளிலிருந்து போதுமான உதாரணத்துடன் மாணவா்களுக்கு வழங்குவது ஒரு ஆசிரியருடைய கடமையாகும்.

### 4.10. நேரடியான படித்தல் மற்றும் சிந்தனை செயல்பாடு

இந்த செயல்பாடானது மாணவா்களை படிக்கும் செயல்பாட்டில் ஈடுபடுத்துவது இது கணித பாடங்களை படிக்கின்றபொழுது படித்தல் மற்றும் சிந்தனைக்கு பயனுள்ளதாக அமைகிறது.நேரடியாக படித்து சிந்திக்கின்றபொழுது ஒரு பாடத்திலுள்ள தலைப்புகள் வாா்த்தைகள் வரைபடங்கள் படங்கள் மாணவா்களுடைய உடனடியான பாா்வை அவறறின் மீது

படுகிறது.இதன்மூலம் மாணவர்கள் நாம் எந்த முக்கியமான கருத்துக்கள் பற்றி சிந்திக்கிறோம் என்பதை பற்றி ஊகீப்பர்.மேலும் மாணவர்கள் ஊகீப்பது எந்தளவிற்கு சரியாக உள்ளது என்பதை தீர்மானிப்பர்.இந்த இரு படிநிலைகள் படிப்பதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் எந்தளவிற்கு ஈடுபாடு உடையராக உள்ளார்கள் என்பதையும் வெளிப்படுத்த முடியும்.

### 4.11. கணிதம் - என்பது ஒரு மொழி (Mathematics - A Language)

கணிதம் என்பது ஒரு மொழி,மொழியில் உள்ள காரணிகளான எழுத்துக்கள், எழுதுதல், படித்தல் இலக்கணம் உரைநடை போன்றவற்றை கணிதத்திலும் காணலாம். நாம் உரையாடல்களை கடந்து வருகின்றபொழுது இந்த உரையாடல்களை சிறு குழந்தைகள் பயன்படுத்துகின்றபொழுது இந்த உரையாடல்களை தங்களுக்குள் பரிமாற்றம் செய்துகொள்வர்.இவ்வாறு செய்து கொள்வதன் மூலம் கற்பவர் ஒரு புதிய தொடர்புகளை உருவாக்க வேண்டி இருக்கிறது.மேலும் தங்களுடைய சிந்தனைகளையும் சரிசெய்து கெள்ளவேண்டிய இருக்கிறது.இவ்வகை திறன்களை பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அடித்தளமாக அமைகிறது.இக்கணித்தில் மொழித்திறனானதுகணித அடிப்படை செயல்பாடுகள் செய்து கணித அடிப்படைக் கருத்துக்களை நடைமுறை சூழ்நிலைகளில் பயன்படுத்துவது சரியான மதிப்பீடுகளை உருவாக்குவது.வரைபடங்கள் மற்றும் மொழியிலுள்ள கணித கருத்துக்கள் மிகப்பெரிய அளவிலான விவரங்களை கையாளுதல்பணத்தைக் கையாளுவது பொருள்களை இருப்பு வைப்பது ஆகியவற்றை புரிந்து கொள்வதே கணித மொழித் திறன் ஆகும்.

கூடுதலாக கணிதம் வாக்கிய கணக்குகளுக்கு முக்கியத்துவம் அளித்து, அவற்றிற்கு மதிப்பீடு அமைத்து, தகுந்த உதாரணத்துடன் விளக்கம் அளிப்பதே கணித்தின் அடிப்படையில் அமைந்த மொழித்திறன் ஆகும்.

### 4.12. வரலாறு மற்றும் மொழி (Language and History)

வரலாறு என்பது மொழிகளை அதிகப்படியாகக் கொண்ட ஒரு பாடப்பிரிவு. வரலாற்றை உருவாக்குவதற்கு மொழியானது மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. வரலாற்றில உள்ள அத்தனை நிகழ்வுகளும் மொழியின் அடிப்படையிலேயே பதியப்பட்டுள்ளது.கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள், உணர்வுகள், சூழ்நிலைகள் போன்றவற்றை புரிந்துகொள்வதற்கு மொழியின்றி நம்மால் இயலாது. கடந்தகால மொழியில் உள்ள அர்த்தங்கள் விளக்கங்கள் வெளிபாடுகள் போன்றவற்றை தற்கால மாணவர்களால் புரிந்துகொள்ள முடியாது.எனவே மொழியானது தற்கால புரிதலுக்கு தகுந்தாற்போல் மாற்றவேண்டியது அவசியமாகிறது.மொழியானது பல்வேறு வகையான நினைவுகள், பொறுப்புகள், விளக்கங்கள், தர்க்கரீதியான விவாதங்கள் உரையாடல்கள் போன்றவற்றை கையாண்டு அவைகள் வருங்கால

சங்கதியினருக்கு ஒரு உதாரணமாக விளங்குகிறது.வரலாற்றில் மொழியின் வெளிப்பாடு என்பது எழுதப்பட்டுள்ள விவாதத்திற்கு உண்டான கட்டுரைகளை விளக்கமாக கற்பிப்பது மேலும் கொடுக்கப்படுகின்ற விளக்கங்கள் வரலாற்று நிகழ்வுகளை முழுமையாகவும் சரியான உதாரணத்துடன் சுருக்கமானதாகவுடம் வரைபடத்துடனும் இருத்தல் வேண்டும்.

மொழியியலில்மாணவர்கள் இரகசியக்குறியீடுகள் கலைச்சொற்கள் சரியான வார்த்தை மூலங்கள் முன்சேர்க்கை மற்றும் பின்சேர்க்கை பெயரிடுதல் பொதுவான வெளிபாடு போன்றவைகளை சரியான வார்த்தை மூலங்கள் கொண்டு அறிய மாணவர்கள் முற்படவேண்டும். வரலாற்றில் வரலாற்று சூழ்நிலைக் குறிப்புகளை படித்து தெரிந்திருத்தல் என்பது ஒரு மாணவனின் மிக முக்கிய கடமையாகும். மேலும் பொதுவான இலக்கண அமைப்புகளுக்கான மெதுவான சொல்லாடல் மற்றும் வினைச்சொல்லிருந்து பெயர்ச்சொல்லிற்கு மாற்றம் செய்தல் போன்றவற்றை மாணவர்கள் தெரிந்திருக்கவேண்டும்.

### 4.13. அறிவியல் மற்றும் மொழி முன்னேற்றம்(Science and Language development)

அறிவியல் கற்றலில் மொழியானது இரண்டு முக்கியப் பங்குகளை வகிக்கிறது.

1.பாடரீதியான மற்றும் தர்க்கரீதியான கூற்றுகளுக்கு அறிவின் அடிப்படையில் அமைந்த கேள்விகளுக்கு விளக்கம் அளித்தல்.

2.நடுநிலையான சிந்தனை என்பது புரிந்து கொள்ளுதல் மற்றும் முடிவுகளை எடுத்தல்போன்ற செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

அறிவியலில் மொழி வளர்ச்சி என்பது இயற்கையான உலகம் அவற்றில் நெருக்கமான தொடர்பை பற்றிக் கற்றல் போன்றவற்றை உள்ளடக்கியது. அறிவியலானது கல்வியறிவின் முன்னேற்றத்திற்கான சரியான சூழ்நிலையை வழங்குவது. மேலும் மொழி கலைத்திறன் என்பது பொதுகருத்து தொடர்பான வளர்ச்சிப் படிநிலைக்கு உதவுவது மற்றும் அறிவியலில் பல பயிற்சி செய்வது போன்றவற்றை விளக்குவது.

உதாரணமாக நாம் படித்ததை புரிந்துகொள்ள சரியான பொருள் புரியும்படி வார்த்தைகளை கொண்டு எழுதுவது உரையாடல்களில் மாணவர்கள் தங்களுடைய உற்று நோக்கங்களை பதிவுசெய்யும்பொழுதும் அறிவியல் பாடப்பொருளை உருவாக்கும்பொழுதும் அவர்களுடைய கருத்துக்களை பரிமாற்றும்பொழுதும் மொழித்திறனில் உள்ள பல்வேறு உத்திகளை கையாளுவது அவசியம்.ஒவ்வொரு ஆராய்ச்சியையும் வெளிப்படுத்துவது உரையாடுதல் அவற்றைபற்றி எழுதுதல் படித்தல் போன்றவற்றின் மூலமே மாணவர்கள் தங்களுடைய மொழித்திறனில் முன்னேற்றம் அடையமுடியும்.

### 4.14. அறிவியல் மற்றும் வாசித்தல் களம் (Science and Reading domain)

முன்பருவக் கல்வி நிலையங்களில் கூட திறன் அடிப்படையிலான புத்தகம் மற்ற படிக்கும் மூலங்கள் நேரடியான விவாதத்திற்கான தலைப்பு போன்றவற்றை வழங்குவதன் மூலம் மாணவர்களின் அறிவியல் கற்றல் பரப்பை விரிவு செய்ய இயலும்.சரியாக புரிந்துகொண்டு முன்பருவ கல்வி மாணவர்களுக்கு உதவி செய்ய ஒரு ஆசிரியர் அறிவியல் பாடப்பொருளில் திறன்பெற்றவராக இருத்தல் அவசியம்.மாதிரியைக் கொண்டு கற்பிப்பது வகுப்புகளுக்கு இடையே கேள்விகளை கேட்பது கொடுக்கப்பட்ட பாடப்பொருளின் அவற்றின் மையக் கருத்து மாற வண்ணம் சுருக்கி எழுதுவது போன்றவற்றின் மூலம் மாணவர்களிடையே அறிவியல் ஆர்வத்தை வளர்க்க முடியும்.

### 4.15. கற்பித்தல் ஊடகம் (Medium of instruction)

இதன் பொருள் ஒரு கல்வி நிறுவனத்தில் அனைத்து பாடப்பிரிவுகளிலும் எந்தமொழயின் மூலம் கற்பித்தலை மேற்கொள்கிறோம் என்பதாகும்.நமது நாட்டை பொறுத்தவரை பெரும்பாலான கற்பித்தல் ஊடகம் அப்பகுதியின் வட்டார மொழியாகவோ அல்லது தாய்மொழியாகவோ அல்லது ஆங்கிலமாகவோ உள்ளது.ஒருசில கல்லூரிகளில் தேசிய மொழியான இந்தி கற்பித்தல் மொழியாக உள்ளது.வட்டார மொழிகள் தாய்மொழியாக இருக்கின்றபொழுது கற்றபவர்களுக்கும் கற்பிப்போர்க்கும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு எளிமையாக உள்ளது.இருந்தபோதிலும் ஆங்கிலமொழியில் கற்பித்தல் பல நன்மைகள் இருந்தாலும் கற்பவருக்கு தங்கள் எணணங்கள் வெளிப்படுத்துவதில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

### 4.16. தாய்மொழி என்பது ஒரு கற்பித்தல்ஊடகம் (Mother Tongue as the Medium of Instruction)

இந்தியா பல மொழிகளைக் கொண்ட ஒரு நாடு இந்தியாவின் பல்வேறு மொழிகள் பல்வேறு மாநிலங்களில் பேசப்படுகின்றன.22 மொழிகள் தேசிய மொழிகளாக நம்முடைய சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.இந்தி அலுவலக மொழியாகவும் மற்றும் 30% மக்களுக்கு இந்தி முதன்மை மொழியாக உள்ளது.844 மொழிகள் பல்வேறு மாநில மக்களால் பேசப்படுகிறது.

அரசியல் ரீதியாக வர்க்க ரீதியாக ஆங்கிலம் என்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுவது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.அனைத்து மாநில கல்லூரிகளும் தங்களுக்குள் பல்வேறுகற்பித்தல் மொழியை பயன்படுத்துகின்றனர்.தாய்மொழியை கற்பித்தல் கருவியாக நாம் மேற்கொள்ளும்பொழுது உலகளாவிய சிந்தனைகள் பொருளாதாரதம கலாச்சாரம் நுண்ணறிவு போன்றவற்றிலிருந்து விலகி நிற்க வேண்டிய சூழ்நிலையில் நாம் இருப்போம். எனவே பல்வேறு

உலகளாவிய நூல்களைப் மொழிமாற்றம் செய்து அதை அந்தந்த வட்டார மொழிகளில் பதித்து வழங்குவதன் மூலம் மேற்குறிய பிரச்சனைகளுக்கு தீர்வு ஏற்படும். அரசும், பல்வேறு பல்கலைக் கழகங்களும், தொண்டு நிறுவனங்களும் இவ்வகையான நூல்களை மொழிமாற்றம் செய்வதன் மூலம் நாம் உலக அரங்கில் எளிமையாக தங்களுடைய படைப்புகளை முன் வைக்க இயலும்.

## 4.17. ஆங்கில மொழி என்பது ஒரு கற்பித்தல் ஊடகம் (English Language as the Medium of Instruction)

இந்தியாவில் மட்டுமல்லாது பல்வேறுநாடுகளில் கற்பித்தல் மொழியாக உள்ளது ஆங்கிலமே.நாம் சுதந்திரம் பெற்று கூட பல தேசிய தலைவர்கள் கல்வியாளர்கள் போன்றவர்களின் பார்வையானது ஆங்கிலம் என்பது நவீன உலகத்துடன் போட்டி போடவும் உலகளாவிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் மிகுந்த முக்கியத்துவம் தருவதாகவே கருதுகிறன்றனர்.

மௌலானா அப்துல்கலாம் (1974) ஆங்கிலம் என்பது உலகளாவிய மொழி, இணைப்பு மொழி சமூக இயக்கத்தற்கான முக்கியத்துவம் வாய்ந்த மொழி, தனி மனித வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தற்கு மிக முக்கிய மொழி, உயர்க்கல்வி முன்னேற்றம் நூலக மொழி போன்றவற்றை வளர்ப்பதில் ஆங்கிலம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.இது பரந்த மிக அதிக அளவில் இலக்கியங்களை கொண்டுள்ளது. ஊலகளாவிய வேலை வாய்ப்புகளை பெறுவதற்கும் பல புதிய நுட்பமான நூல்களை அறிந்து கொள்வதற்கும் ஆங்கிலம் அவசியமாகிறது.இதன் காரணமாகவே பல்வேறு கல்வி நிறுவனங்கள் ஆங்கிலமொழியை கற்பித்தல் மொழியாக அமைத்துள்ளனர்.

**லாடு மெக்கலே (1835)**விடுதலை அடையும்வரை ஆங்கிலம்தான் உயர்கல்வி நிலையங்களில் கற்பிக்கப்பட்டது.விடுதலைக்கு பிறகு ஆங்கிலம் அலுவலக மொழியாக இந்திய பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.கூடுதலாக இந்தியை அலுவலக மொழியாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஆங்கிலத்திறனை வளர்ப்பதை விட ஆங்கில பள்ளிகளுக்கு தங்கள் குழந்தைகளை அனுப்புவது சமூக அங்கிகாரமாகவே பார்க்கப்படுகிறது.மக்களின் மிகுந்த கவனத்தை பெறுவதற்கு காரணம் இலக்கியம் மற்றும் அறிவு இந்த மொழியில் அதிகம் இருப்பதே.பெரும்பாலான வளைகுடா நாடுகளில் ஆங்கில மொழியே கற்பித்தல் மொழியாக உள்ளது.

## 4.18. கற்பித்தல் ஊடகம் முக்கியத்துவம் (Significance of Medium of Instruction)

**1.**இந்தியாவை போன்று பல்வேறு மொழிகளைப் பின்பற்றும் நாடுகளுக்கு கற்பித்தல்ஊடகம் மிகுந்த பிரச்சனைக்குறியதாகவே உள்ளது. எனவே ஒவ்வொரு

மாநிலமும் தங்களது வட்டார மொழியே கற்பித்தல் ஊடகமாகஇருத்தல் நலம் என கருதப்படுகிறது.

2.சில தேசிய வாதிகள் இந்தி மொழியே கற்பித்தல் மொழியாக இருக்க வேண்டும் என்று விவாதம் செய்கின்றனர்.

3.ஆங்கில வழிக் கற்றலே உலகளாவிய தொழில்நுட்ப வளர்ச்சியில் மிகப்பெரிய அளவில் விரைவான வளர்ச்சியை அடைய முடியும் என்ற நம்பிக்கையை கொண்டுள்ளது.

### 4.19. படித்து புரித்துகொள்ளுதல் (Reading comprehension)

கவனித்தல் என்ற உணர்வாற்றலை விட படித்தல் என்பது குறைந்தளவே முக்கியத்துவம் பெறுகிறது.எனினும் மொழி வாய்மொழி, எழுத்துமொழி என்னும் பல்வேறு அளவையுடன் பயன்படுத்தப்பட்டு இறுதியில் பல சிக்கலான வடிவத்தை பெறுகிறது. எனவே **படித்து புரித்துகொள்ளுதல்** என்பது கவனித்தல் திறனை சார்ந்தது.எனவே **படித்து புரித்துகொள்ளுதல்,** கவனித்தல் என்பது கூடுதலான உத்தியாக இருக்கின்றது.மற்றொரு விதத்தில் தொடர்புபடுத்தும்பொழுது படித்து புரிந்து கொள்ளுதல் என்பது மனதை பாதிக்கக்கூடிய மாதிரிகளைக் கொண்டு விவரங்களை அதிகமாகவும், விரிவாகவும் அமைக்கப்படும் பாடப்பொருள்களை படிப்பதை சார்ந்தமைகிறது.இச்சூழ்நிலை மாதிரி பாடப்புத்தகத்தின் ஒருங்கிணைந்த சுருக்கமான பாடப்பொருளை கற்பித்தலாக அமையும். இதை பல கேள்விகளுக்கு விளக்கம் அளிப்பதன் மூலம் மீள் ஆய்வு செய்யலாம்.

### 4.20. பின்தங்கிய மாணவர்கள் படித்தலில் ஏற்படுகின்ற குறைபாட்டிற்கான காரணங்கள்

### (Factor related to the poor reading comprehension)

1.வார்த்தைகளை பயன்படுத்துவதில் குறைபாடு

2.பேசுதல் திறமையில் குறைபாடு

3.அச்சடிக்கப்பட்ட புத்தகங்களை அதிகபடியாக படிக்காமை

4.படித்தலில் எதிர்மறையான மனப்பான்மை

### 4.21. மேலே உள்ள குறைபாடுகளை போக்க ஆசிரியர் செய்ய வேண்டியது

1. மாணவர்களுக்கு சுதந்திரம் அல்லது எளிமையான வழிகளில் பாடபுத்தகத்தை படிக்கச் சொல்லுவது
2. சில வேலைகளில் கவனித்தலில் மட்டுமே செய்து முடிக்கச் சொல்லுவது.

3. படிக்கின்றபோது அவ்வேலைகளைப் பற்றி கவலைக் கொள்ளாமல் இருப்பது.
4. எளியமுறையில் கொடுக்கப்பட்ட வேலைகளைச் செய்வது.
5. பாடங்களை செய்துகாட்டல் முறையில் விளக்குவது வேலைகளை முடிக்ககும் திறனுக்கு முக்கியத்துவம் அளிப்பது.இறுதியில் முடிவுகளை சரி செய்வது.
6. பணிகளை வழங்கப்பட்ட பிறகு செய்வது.எங்கே தவறுகள் செய்தோம் என்று கண்டறிவது.

மிக முக்கியமாக கற்பித்தல் எல்லைகளைக் அமைப்பதற்கு பதிலாக கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்

**1.**குழந்தை எந்தப் பகுதியை சரியாக செய்ய முடியவில்லை?

**2.**ஒரு பணியை முடிக்க எந்த சிறு படிநிலைகள் தேவைப்படுகின்றன?

**3.**குழந்தைகளே தாங்கள் சுயமான படிநிலைகளைச் செய்து அந்த வேலைகளை முடிக்கின்றார்களா?

**4.**ஒரு பணியை முடிப்பதற்கு எந்த வகையான கலைச்சொற்கள் தேவைப்படுகிறது.அல்லது அந்த குழந்தை போதுமான கலைச்சொற்களை பெற்றுள்ளதா?

ஆசிரியர்கள் மாணவர்களின் வளர்ச்சிக்கான சரியான கற்பித்தல் உத்திகளை கண்டறிவது அவசியம்.உதாரணமாக ஒரு குழந்தை மற்றவர்களின் உணர்வுகளை அங்கிகரிப்பதில் தோல்வி அடைந்தால் பாடபொருளிலில் அந்த இயல்புகளை உணர்வு வரைவடத்தின் மூலமாக அமைத்து அவ்வுணர்வை வெளிப்படுத்தவேண்டும். இந்த வழியில் குழந்தைகள் புரிதல் சம்மந்தமான உத்திகளை எவ்வாறு பெறுவது என்பதையும் அவ்வுத்திகளை புரிந்துகொள்வதில் எங்கெல்லாம் பிரச்சனைகள் தேவைப்படுகின்றதோ எப்படி அதைப் பயன்படுத்துவது என்பதை மாணவர்கள் தெரிந்துகொள்வது அவசியம்.

### 4.22. பாடப்புத்தகங்களில் உள்ள இயற்கையான குறைபாடுகளே மாணவர்களின் புரிதல்களை அநேகமாக பாதிக்கின்றன.

1. வார்த்தைகள் மிக அடர்த்தியானதாக உள்ளபொழுது
2. அதிகபடியாக புரியாத சிக்கலான வார்த்தைகள் காணப்படுகின்றபொழுது
3. நூல் ஆசிரியரின் வார்த்தைகளின் அனுகுமுறை
4. இலக்கிய நடைகள் தெரிந்தவையாக உள்ளதா?
5. அறிதிறன் மற்றும் கல்வி அறிவு வடிவமைப்பிற்குத் தேவையான அனுபவங்களில் ஏற்படுகின்ற குறைபாடு போன்றவை மிக முக்கியமாக குறிப்பிடப்படவேண்டியவை.

**படித்து புரிதலுக்கான ஐந்து உத்திகள்**

1. கணிப்பு
2. கேள்வி கேட்பது
3. தெளிவுப்படுத்துதல்
4. கற்பனை செய்தல்
5. சுருங்கக் கூறுவது

### 4.23. கணிப்பு

கற்பனை என்பது மனநிலை கற்பனையின் பயனைக்குறிக்கிறது.ஒரு வாக்கியத்தின் மனநிலை மாதிரியை மதிப்பிடுவதன் மூலம் வாக்கியத்தின புரிதலை உயர்த்துகிறது.மிகஅதிகமாக வெற்றியடைந்த புரிதல் தன்மை உடையவர்கள் தங்களின் கற்பனைகளை தொடர்ச்சியாக மொழி மாற்றம் செய்கின்றனர்.எடுத்துக்காட்டாக படம் எடுப்பது கற்பனைகளை மாற்றி கதையாக உருவாக்குவது.குழந்தைகள் இந்த கற்பனையை சுயமாக செய்து பாடத்தின் மைய கருத்துக்களை எவ்வாறு ஒருங்கிணைப்பது போன்றவற்றை பற்றி பயிர்ச்சி அளிப்பது அவசியம்.

### 4.24. சுருங்கக் கூறுவது

சுருக்கமாககூறுவது என்பது சூழநிலை மாதிரியோடு நெருங்கிய தொடர்புடையது.மேலும் சுருங்க எழுதுதல் என்பது அனைத்து அம்சங்களை உள்ளடக்கியது.தொடர்ச்சியாக கருப்பொருள் என்பது பற்றிய முழுமையான விவரம் ஒத்த கருத்துக்களை ஒருங்கிணைத்து முழுமைபடுத்துவதே போன்ற உட்கூறுகளை உள்ளடக்கியது. மேலும் மதிப்பீட்டு முறைகள் மனநிலை மற்றும் உருவாக்குவதில் பொதுமைப்படுத்துதல் போன்ற உட்கூறுகளை உள்ளடக்கியது.மேலும் சுருங்கக் கூறுதல் என்பது அடிப்படை மொழி திறன் அனுமானம் சார்ந்த திறன்கள் வாக்கியத்துடன் ஒரு ஈடுபாடு மற்றும் அவற்றைப் பற்றிய அறிவு போன்றவை அவசியமாகின்றது.

### குறைபாட்டுக் கோட்பாடு (Deficit theory):

குறைபாட்டுக் கோட்பாடானது பின்தங்கிய மாணவர்கள் பள்ளிகளில் உயர் விகிதங்களில் தோல்வியை அனுபவிப்பது ஏன் என்பதை விளக்கும் ஒரு முயற்சியாக 1960களில் உருவானது. குறைந்த சமூக பொருளாதார வீடுகளில் இருந்து வரும் குழந்தைகள் பொருளாதார குறைபாட்டினால் வளமில்லாத வாய்மொழியைக் கொண்டிருப்பதாக அறிவுறுத்துகிறது. ஏனெனில் அவர்கள் வீடுகளில் வாய்மொழிக்கான தூண்டல் மிகவும் குறைவாக இருப்பதேயாகும். வெற்றிக்குத் தேவையான மொழியியல் வளங்கள் எதுவுமின்றி பள்ளியில் நுழைகின்றனர். இந்த வளமில்லா வாய்மொழியைக் கொண்டிருக்கும் குழந்தைகள் உண்மையில் திறமையான மொழியைப் பயன்படுத்துபவர்களாக இருக்கலாம். ஆனால் தங்கள் மொழித் திறனை நிரூபிக்கக் கூடிய சூழ்நிலைகள் அமையாது போனதால் அவர்கள் வாய்மொழி குறைந்ததாய் காணப்படலாம். குறைந்த சமூகப் பொருளாதார வகுப்புகளில் இருந்து வரும் குழந்தைகளால் முழுமையான

வாக்கியத்தைப் பேச முடியாது. பொதுவாக பொருட்களின் பெயர்கள் தெரியாது, கருத்துகளை உருவாக்க முடியாது அல்லது தருக்க எண்ணங்களை வெளிப்படுத்த முடியாது மற்றும் வாய்மொழி வெளிப்பாடுகள் மிக சொற்பமான அளவிலும் தரத்திலும் இருக்கும் என்று குறைபாட்டுக் கோட்பாடு கூறுகிறது. எனவே பின்தங்கிய குழுவில் இருந்து வரும் குழந்தைகள் குறைவான மொழியியல் வளர்ச்சியின் விளைவாக அறிவார்ந்த நிலையில் பின்தங்கி உள்ளனர் என்று குறைபாட்டுக் கோட்பாடு கூறுகிறது.

### 4.5.2. தொடர்பின்மைக் கோட்பாடு (Discontinuity theory):

மொழியின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளை தங்கள் அடிப்படை ஊகங்களின்படி பிரிக்கலாம். மொழி என்பது ஒரு சிக்கலானதாக இருப்பதால் அது வெறுமனே ஒன்றிமில்லாமையிலிருந்து தோன்றி இருக்காது. ஆனால் நம் முன்னோர் நடுவில் முந்தைய மொழியியல் அமைப்பில் இருந்து உருவாகி இருக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு சில கோட்பாடுகள் உள்ளன. இந்தக் கோட்பாடுகள் எல்லாம் தொடர்ச்சி சார்ந்த கோட்பாடுகள் என்று அழைக்கப்பெறும்.

மொழியை மனித இனம் அல்லாதது நடுவில் காணப்படும் எதையும் கொண்டு ஒப்பிட முடியாது என்று சொல்லுமளவு தனிப்பட்ட மனிதப் பண்பு கொண்டது. எனவே மனித இனம் தளிர்க்கும் முன்னிலையிலிருந்து ஆரம்ப மனிதனுக்கு மாறும் போது திடீரென தோன்றியிருக்க வேண்டும் என்று தொடர்ச்சி சார்ந்த கோட்பாடுகளுக்கு எதிர் கோணத்திலிருந்து சில கோட்பாடுகள் எழுந்தன. அவற்றைத் தொடர்பின்மை சார்ந்த கோட்பாடுகள் என்று வரையறுக்கலாம்.

மொழி பரிணாம வளர்ச்சியில் தொடர்ச்சி சார்ந்த கோட்பாடுகள் நம் முன்னோர் நடுவில் தொடங்கி மக்கள் பேச்சு தற்போது உள்ளது போல ஒத்திருக்கும் வரை மொழி படிப்படியாக பல்வேறு நிலைகளில் வளர்ந்து பல்வேறு அம்சங்களால் வளர்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இதற்கிடையில் தொடர்பின்மைக் கோட்பாடு மனித மொழி ஒப்பிட்டுக் கூறும் அளவு கூட ஆதி மனிதனுக்கு முன் ஒத்த எதுவும் இல்லை. எனவே மொழி, மனித சரித்திரத்தில் திடீரென தோன்றியதாக உள்ளது என்று கூறுகிறது. இது தனி நபர் உள்ளே மரபணு மாற்றத்தின் விளைவாக நிகழப்பட்டு நம் முன்னோர் வழியாக கடந்து வந்து இறுதியில் ஒரு மேலாதிக்க திறனாக மொழி மாறி இருக்கலாம் என்று கூறுகின்றனர்.

முதல் தொடர்ச்சிக் கோட்பாடு என்பது மனிதத் தொடர்பு மற்றும் விலங்குகள் தொடர்பு இடையே அடிப்படை வேறுபாடு இல்லை என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இருவரும் செய்தியைப் புரிந்து கொள்ளக் கூடிய தங்களது இனத்தாரிடையையே தகவலைப் பரிமாறிக் கொள்கின்றனர். மனிதர்கள் மற்றும் விலங்குகள் இருவருக்குமே தகவல் தொடர்பு தேவை மற்றும் ஒலிகள், இரைச்சல் மற்றும் அறிகுறிகள் பயன்படுத்துதல் சம அளவில் முக்கியமாக இருக்கிறது. சாத்தியமான செய்திகள் அளவில் முரண்பாடு இருந்தாலும் மற்றும் ஒலிகள், இரைச்சல், அறிகுறிகள் போன்றவை வேறுபட்டாலும் இவையனைத்தும் ஒரு வளர்ந்த மொழி அல்லது மொழியின் பரிணாம வளர்ச்சியில் தொடர்ந்து வளரும் மொழியின் வடிவங்களாக

இருக்கின்றன. தகவல் தொடர்பு அமைப்புகளின் வளர்ச்சி, மொழி நோக்கிய ஒரு நேர்வழிச் சாலை என்று இந்தத் தூண்டல் கோட்பாட்டாளர்கள் எண்ணுகின்றனர்.

எனினும் நுண்ணறிவில் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. மனித நுண்ணறிவைக் குறிப்பிட்டது என்று அழைக்க முடியும். ஏனென்றால் மொழியின் அளவை அதிகரிக்க முடியும் மற்றும் கருத்தியல் பொருட்களையும் , சம்பவங்களையும் மற்றும் சூழ்நிலைகளையும் பெயரிட முடியும். இந்த வகையான நுண்ணறிவு விலங்குகளிடம் இல்லை. குறிப்பிட்ட நுண்ணறிவு, மொழிக்கு ஒரு முக்கியமான மற்றும் அடிப்படை சாராம்சமாக இருக்கிறது.

மனித பரிணாமத்தின் போது திடீரென்று தோன்றிய மொழி ஒரு தனிப்பட்ட பண்பாகும். – **நோம் சோம்ஸ்கி**

தொடர்பின்மைக் கோட்பாடு உலகத்தில் உள்ள எந்த மொழிகளையும் விட மனித மொழி அமைப்பு மிகவும் சிக்கலானது என்று காட்டுகிறது. நோம் சோம்ஸ்கி உலகின் முன்னணி மொழியியலாளர்களில் ஒருவர். நம் முன்னோர்களில் ஒருவருக்கு சாத்தியமான மரபணு மாற்றத்தால் பேச மற்றும் மொழி புரிந்து கொள்ளும் திறன் கிடைக்கப்பெற்றிருக்கும். அதன் மூலம் அவர்கள் சந்ததியினருக்கு கடத்தப்பட்டிருக்கும் என்பதை ஒப்புக் கொள்கிறார்.

### 4.6. மொழியின் கல்வி விளைவுகள் (Educational implications of Language):

மொழி மற்றும் கல்வியறிவு தேசிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களைக் கற்பிக்க முக்கிய கருவிகளாகப் பயன்படுகின்றன. சொல்லகராதி மற்றும் கருத்து வளர்ச்சி பள்ளியில் இருக்கும் ஆண்டுகளில் குழந்தைகளிடம் தொடர்கிறது. வாசித்தல் மற்றும் எழுதுதல் கற்றுக் கொடுக்கப்படுகிறது. குழந்தைகள் வளர வளர மொழியின் புரிதல் மற்றும் பயன்பாடு இன்னும் சிக்கலாகிறது. எந்த பாடத்தின் ஆசிரியராக இருந்தாலும் மொழி எவ்வாறு கற்றுக்கொள்ளப்படுகிறது? மற்றும் கல்விச் சூழல்களில் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது? என்ற அடிப்படை புரிதல் இருக்க வேண்டும். ஏனெனில் அனைத்துப் பாடக் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாடுகளில் மொழி பாதிப்பை ஏற்படுத்துகிறது. மொழி மற்றும் கல்வி விவாதங்களில் மொழியானது வாய்மொழி குறியீடுகளாலான பகிரப்படும் அமைப்பு என வரையறுக்கப்படுகிறது. மேலும் மொழியானது ஒரு பொதுவான தொடர்பு கொள்ளும் நிகழ்வு குறிப்பாக கற்றலில் விளக்கங்களைத் தரக்கூடிய தொடர்பாக வரையறுக்க முடியும். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ள பேச்சு மற்றும் எழுத்து மொழியைப் பயன்படுத்துகின்றனர். பணிகளை வழங்க, கற்றல் செயல்பாடுகளில் ஈடுபட, கல்வி பாடப்பொருளை வழங்க, கற்றலை மதிப்பிட, அறிவு மற்றும் திறனை வெளிப்படுத்த மற்றும் வகுப்பறை வாழ்க்கையை உருவாக்க மொழி பயன்படுகிறது. கூடுதலாக மாணவர்கள் கற்கும் அனைத்துமே மொழியாகும். அவர்கள் வாசிக்கவும் மற்றும் எழுதவும் (கல்வி எழுத்து மொழி) கற்கின்றனர். பிற பாடத்துறைகளின் பேச்சு பற்றியும் கற்கின்றனர். மொழியின் இரு வரையறைகளும் மொழி மற்றும் கல்வியின் தொடர்பைப் புரிந்து கொள்ள முக்கியமானது.

குழந்தைகள் பேச்சு மற்றும் எழுத்து மொழி இரண்டினையும் கற்கிறார்கள். அவர்கள் சொல்லகராதி மற்றும் சிக்கலான இலக்கண கட்டமைப்புகளைப் பயன்படுத்துவதைத் தொடர்புத்திறன்(பல்வேறு சமூக சூழ்நிலைகளில் மொழியைப் பொருத்தமான மற்றும் பயனுள்ள வகையில் பயன்படுத்த விதிகள்) பேச்சு மற்றும் எழுத்து மொழியைப் புரிதல் மற்றும் தங்களை வெளிப்படுத்தும் வழிகள் ஆகியவற்றை வளர்த்துக் கொள்கின்றனர். இளம் குழந்தைகளுக்கான கல்வித் திட்டம் பெரும்பாலும் மொழிக் கற்றலை எளிதாக்கிடும் பாடத்திட்டம் மற்றும் வழிமுறைகளை வலியுறுத்துகிறது.

பேச்சு மொழியைப் பொறுத்தவரையில் கற்பித்தல் திட்டங்கள் பல்வேறு வகைகளில் உபயோகிக்கும் முறையிலிருந்து வருணனைக்குப் புரிந்து கொள்ள வாய்ப்புகளையும், முகபாவனை முறைகளைப் பயிற்சி செய்திட வாய்ப்புகளையும் வலியுறுத்துகிறது.

எழுத்து மொழியில் இளம் குழந்தைகளுக்கான வகுப்பறைகள் அகர எழுத்துக்களையும் எழுத்து–ஒலி தொடர்பையும் அடிப்படைக் காட்சி சொல்லகராதி மற்றும் புரிதல் உத்திகள் ஆகியவற்றிற்கு வாய்ப்புகள் வழங்கப்படும். மேலும் இளம் குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள கதைகளை வாசித்தலும் இடம் பெறும். குழந்தைகள் தங்களை எழுத்து மொழி மூலம் எவ்வாறு வெளிப்படுத்துவது என்று கற்றிடும் வாய்ப்புகள் வழங்கப்படும். அவை எழுத்துக்கள் , சொற்கள் , வாக்கியம் மற்றும் உரை கட்டமைப்புகள் அமைக்கவும் மற்றும் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து எவ்வாறு ஒரு கதை அமைக்கப் பெறும் என்றும் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளாகும்.

குழந்தைகள் இயல்பாகவே மொழிக் கற்பவர்களாக மொழியுடன் பின்னப்பட்டு மற்றும் இது அவர்களை மேலும் தூண்டுகிறது. உயர் மொழி சூழல் அவர்களுக்குத் தேவையான கற்றல் கருவிகளைத் தந்து மென்மேலும் அவர்களின் பேச்சு மற்றும் எழுத்து மொழித் திறன்களை வளர்க்கிறது என்ற மாற்று விவாதமும் இருக்கிறது. ஆசிரியர்கள் மொழிக் கற்றலை வழங்கினாலும் வழங்கப்படும் கற்றல் முறை முன்னரே தீர்மானிக்கப்பட்டதைப் பரிந்துரைப்பதாக இருப்பதைக் காட்டிலும் குழந்தைகளின் ஆர்வம் , ஈடுபாடு மற்றும் தேவைகளைப் பின்பற்றியதாய் இருக்க வேண்டும்.

சிக்கலான மொழி செயல்முறைகளில் தேவைப்படுவது குழந்தைகள் தனித்த திறன் கற்கும் மொழி செயல்பாடுகளை விட முழுமையான அல்லது முழு மொழி செயல்பாடுகளில் அனுமதிக்கப்பட வேண்டும். ஏனென்றால் தனித்த திறன் கற்றல் மொழி செயல்முறையைச் சிதைத்து மேலும் சிக்கலாக்கி விடும் மொழிக் கற்றலை மேலும் கடினமாக்கி விடும். எழுத்து மொழிக் கற்றல், பேச்சு மொழிக் கற்றலிலிருந்து வேறுபட்டதாகப் பார்க்கப்படுவதில்லை. எனவே பேச்சு மொழிக் கற்றலில் பயன்படுத்தும் கற்றல் முறைகளை எழுத்து மொழிக் கற்றலுக்கும் பரிந்துரைக்கப்படுகிறது.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் மொழியைப் பரந்த துறைகளில் கற்கின்றனர். அவர்கள் குறிப்பிட்ட பாடங்களில் எவ்வாறு வாதிட வேண்டும் என்று கற்றுக்கொள்ள வேண்டும். மேலும் குறிப்பிட்ட பாடங்களின் உரைகளைத் தங்கள் மொழியின் மரபோடு எழுதவும் மற்றும் படிக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும். வகுப்பறைகளில் கற்றல் மொழியை

முதன்மையாகக் கொண்டு நிறைவேற்றப்படுகிறது. ஆசிரியரின் விரிவுரை, கேள்விகள் கேட்டல் , விவாதங்களைத் திட்டமிடுதல் மற்றும் வாசித்தல் மற்றும் எழுதுதல் பணிகளை அளித்தல் ஆகிய அனைத்தும் மொழியின் மூலமே நடைபெறுகிறது. மாணவர்கள் வாசித்தல், எழுதுதல் மற்றும் இணையத்தை ஆராய்தல் கேள்விகளுக்குப் பதில் அளித்தல் , ஆசிரியர் விரிவுரைகளைக் கேட்டல் , மாணவர்களின் ஒப்படைப்புகள் , முழு வகுப்பறை மற்றும் குழு விவாதங்கள் , எழுதப்பட்ட உரை மற்றும் சொல்லகராதி ஆகியவற்றை மனனம் செய்தல், போன்ற அனைத்திலும் மொழியின் மூலமே கல்வி செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர். கல்வியில் தாய்மொழி மட்டுமல்லாது இரண்டாம் மொழி மற்றும் மூன்றாம் மொழியிலும் மாணவர்கள் புலமை பெற்று உலகையே வலம் வருகிறார்கள்.

**4.27. வகுப்பறை இடைவினை மாற்றத்தை புரிந்துகொள்ளுதல்**

ஆசிரியர் மாணவர் இடைநிலை மாற்றம் என்பத பரந்த உணர்வுடனும் மிகுந்த பிணைப்புடன் காணப்படும்.இந்த உணர்வில் ஆசிரியர் மாணவர் இடையே மிகுந்த அளவிற்கு ஒரு நெருக்கத்தை ஏற்படுத்துகிறது.கற்பவர் மற்றும் கற்பிப்பவர்களுக்கு இடையே நடைபெறும் இடைவிணை அதிகபடியாக தகவல் தொடர்பிற்கு பயன்படுகிறது. மேலும் இவர்களின் இடைவினையானது விவாதத்திற்கும் மிகுந்த கவனத்ததுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது.இவற்றில் கற்பவர்கள் மரபுகளில் வகுப்பறையில் நடைபெறுகின்ற இடைவினை மாற்றத்தைவிட தங்கள் ஒத்தகுழு மாணவர்களனிடம் வெளிப்படுத்தும் இடைவினை மாற்றமே மிகுந்த பரந்த அளவில் பயனுடையதாக அமைகிறது.

இடைவினை மாற்றத்தின் மூலம் மற்ற குழுக்களுடன் மொழிசார்ந்த கூறுகளை உருவாக்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் மிகுந்த வாய்ப்பளிக்கிறது.குழுக்களுக்கு கட்டுப்படுத்தப்படாத வகையில் பணிகளை வழங்கின்றபொழுது அவர்கள் பணியை விரைவாக செய்து முடிப்பர்.கற்பவரினுடைய பார்வையில் மொழியானது ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டிற்கு மிகுந்த இலாபகரமானதாகவும் போட்டி நிறைந்தாகவும் காணப்படுகிறது.

**வகுப்பறை இடைவினை மாற்றம் வகைகள்**

**1.மொழிவெளியீடு**

**2.மொழி உள்ளீடு**

**மொழி வெளியீடு**

மொழி வெளியீடு என்பத மேலை நாட்டு மாணவர்களுடைய திறன் சார்ந்தது. இதனுடைய முக்கிய நோக்கம் கற்பவர்களை மொழித்த திறன் படைத்தவர்களாக உருவாக்குவது மொழிப்

புரிதலை விரைவுபடுத்துதல் வகுப்பறை இடைவினை மாற்றத்ததை ஒரு அறிவியல் சார்ந்ததாகவும் அறிவை விரிவடையச் செய்யக்கூடியதாகவும் மாற்றுதல்.

### 4.28. வகுப்பறை இடைவினை மாற்றத்தை உயர்த்தும் வழிமுறைகள் (Strategies of Promoting Classroom Interaction)

ஆங்கில வகுப்பறைகளில் மாணவர்களுக்கு அவர்களுடைய தன்னபிக்கை மிகக் குறைந்த அளவில் காணப்படுகிறது.சக மாணவர்களுடன் தோல்வியடைவதை அவர்கள் விரும்புவதில்லை. எனவே இச்சூழ்நிலையில் வகுப்பாசிரியர் ஒவ்வொரு மாணவரிடமும் தனித்தனியான இடைவினை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது.மேலும் ஒவ்வொரு வினாவிற்கும் அனைத்து மாணவர்ளும் விடையளிக்க வேண்டும் என்கிற பழக்கத்தை பயிற்சி செய்ய வேண்டும். இதில் அனைத்து மாணவர்களும் பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும்.மாணவர்களுடைய கவனம், பாதுகாப்பு, சுய உணர்வு, நம்பிக்கை போன்றவற்றைப் பற்றி வகுப்பறையில் ஆசிரியர் விளக்கமளிக்கவேண்டும்.இந்த விரும்பதக்க பழக்கத்தை மாணவர்களிம் ஆசிரியர் உருவாக்க வேண்டும்.

### 4.29. மொழியியலில் கற்பவர் அடையும் படி நிலைகள்

ஒரு மொழிக் கற்பித்தலில் பல்வேறு வழிமுறைகளும் மற்றும் செயல்முறைகளை நாம் குறிப்பிட்டுள்ளளோம்.மிகவும் எளிமையான மொழிகளை வெளிப்படுத்துவதே தொடக்க நிலையில் உள்ளவர்களுக்கு தேவைப்படுகிறது.இடைநிலையில் கற்பவர்கள் மொழியைப் பற்றிஅவற்றினுடைய கூறுகளைப்பற்றியும் தெரிந்து வைத்துள்ளனர்.தொடக்கநிலையில் உள்ளவர்கள் கருத்தியல் சார்ந்த விவாதங்களை விரும்புவதில்லை.ஆனால் கருத்தியியலில் முன்னேறியவர்களுக்கு எளிமையான கேள்விகளிலிருந்து தொடங்கி கடினமான கேள்விகளுக்கு பயிற்சி அளிப்பது அவர்களுருடைய மொழியியல் திறனுக்கு உதவிகரமாக அமையும்.

மேலும் கொடுக்கப்பட்ட உபகரணங்கள் மூலம் பயிற்சி அளிப்பதே பல்வேறு செயல்முறைகளில் ஈடுபடுத்துவது மற்றவர்களுடன் இணைந்து செயல்படுவது சமூகத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உதவுவது போன்றவைகளை மொழியியலில் கற்றல் திறன் படைத்தவர்கள் ஈடுபடுத்தவேண்டும்.

கற்பவர்கள் பல்வேறு வகையான சமூக பின்னனியுடனும் திறனுடனும் உடற்ச் சார்ந்த கூறுகளுடனும் காணப்படுவதை ஒவ்வொருவரும் ஒத்துக்கொள்ளுதல் வேண்டும்.இவற்றைக் களைய ஒவ்வொருவரும் இணைந்து செயல்படுவது, கொடுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவது பிரச்சனைகளை தீர்ப்பது போன்றவற்றை ஆசிரியர் உதவியுடன் செய்தல் அவசியம்.இவ்வாறு இணைந்து கற்பதன் மூலம் வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்.

### 4.30. நேர்மறையான ஆசிரியர் மாணவர் ஒத்துழைப்பை கட்டமைப்பது (Building Positive Teacher-learner Rapport)

வகுப்பறை இடைவினை மாற்றத்தை அதிகரிக்க வேண்டுமெனில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே கற்றல் உறவுகள் அதிகபடியாக அமைந்திருத்தல் வேண்டும்.ஒரு சிறந்த ஆசிரியர் ஒவ்வொரு மாணவர் பற்றியும் முழுமையான விவரங்களை சேகரித்து வைத்திருக்க வேண்டும்.அதாவது ஒரு மாணவனுடைய அறிவு புரிதல்திறன் சமூகபின்புலம் போன்றவைகள்.மிகப்பெரிய அளவிலான உணர்வுபூர்வமான புரிதல் ஆசிரியர்-மாணவர்களுக்கு அவசியம்.வகுப்பறையில் இவ்விருவருக்குமே சம பொறுப்பு உண்டு.அவ்வாறு உள்ளபொழுதே ஆசிரியர் மாணவர் ஒத்துழைப்பில் தரம் மற்றும் பண்பும் மேம்படும்.

### 4.31. வகுப்பறைக்கவலைகளை குறைக்கும் வழிமுறைகள் (Reducing Classroom Anxiety)

ஒரு ஆங்கில வகுப்பறையில் ஒரு மாணவன் தான் விரும்பத்தக்க வகையில் ஆசிரியருடனும் சக தோழர்களுடனும் இடைவினை மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.ஒரு மாணவனுடைய பல்வேறு ஆளுமைகளை கவனித்தல் கலாச்சார பின்புலம், ஆங்கிலத்திறன், ஆர்வம் போன்றவற்றை ஒரு ஆசிரியர் பதிவு செய்தல் அவசியம். இதன் மூலம் மாணவர்களுடைய மொழித்திறனிலுள்ள கவலைகளை புரிந்து கொண்டு அவர்களுடைய பிரச்சனையை தீர்ப்பதிலும் அவர்களுடைய தன்னபிக்கை தன்மதிப்பு போன்றவற்றை விளக்க பல்வேறு வகையான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

**Question for discussion of reflection:**

1. Explain uses of language in various subjects.
   பல்வேறு பாடங்களில் மொழியின் பயன்பாடடை விவரி.
2. Explain effectiveness of medium of instruction in language across curriculum.
   கலைதிட்டத்தில் விரவியுள்ள மொழியினால் கற்பிதிதல் ஊடகத்தில் ஏற்படும் விளைவுகளை விவரி.
3. Explain advantage mother language as a medium of instruction and why?
   தூய் மொழி என்பது ஒரு கற்பித்தல் ஊடகமாக உள்ள பொழுது ஏற்படும் நன்மைகள் யாது. ஏன?

## அலகு-5 மொழி தொடர்பான சிக்கல்கள்

## (Language Related Issues)

**பாடப்பொருள் நோக்கங்கள்**

இப்பாடப்பொருளைக் கற்ற பின்பு ஆசிரிய மாணவர்கள் கீழ்க்காணும் கற்றல் இலக்குகளை அடைவர்.

- இருமொழி, பன்மொழி கருத்துக்களைக் பகிர்தல்.
- பாடப்பொருளின் எழுத்தாற்றலை வளர்த்தல்.
- அறிவாற்றலை வெளிப்படுத்துதல்.
- எழுத்தாற்றலை வெளிக்கொணர்தல்.

**முன்னுரை**

மனித வாழ்வில் மொழி முக்கிய பங்கு வகிக்கிறது. சமுதாயத்தில் நிகழும் உண்மைகளைப் புலன்களால் அறிய உதவுகிறது. மொழியின் முக்கிய குறிக்கோளானது மக்களிடையே செய்தி எண்ணம் முதலானவற்றைப் பரிமாறிக் கொள்ளவும் அவர்களின் கருத்தைத் தெரிவிக்கவும் உதவுகிறது.

ஒருவர் பேசும்போது அவருடைய குறிக்கோளைச் செயல்படுத்தவும் கருத்தினைத் தெரிவிக்கவும் மொழி உதவுகிறது ஒரு மனிதன் மொழியை பல்வேறு காரணங்களுக்காக பயன்படுத்துகின்றான்.

ஒரு மனிதனின் உணர்வினை வெளிப்படுத்தி உதவி கேட்பதற்கும் மற்றும் மன்னிப்பு கேட்பதற்காகவும் பயன்படுகிறது.

**இருமொழியியல்**

இருமொழி புலமை என்பது குறைந்தது இரு மொழியில் புலமை பெற்ற தனி நபரை குறிப்பதாகும். இது குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் வேறுபடும்.

**பன்மொழியியல்**

பன்மொழியியல் என்பது பல மொழிகள் பேசக்கூடிய தனி நபரையோ அல்லது குறிப்பிட்ட சமுதாயத்தினரையோ குறிப்பிடுவதாகும். ஒரு மொழி பேசுபவர்களை விட பன்மொழி பேசுபவர்களையே உலகில் அதிக அளவில் காணப்படுகின்றனர்.

உலகமயமாக்குதலும் கலாச்சாரமுமே உலகில் பன்மொழி உருவாகக் காரணமாகிறது.

இணையம் மற்றும் தனி நபரின் வெளிப்பாட்டு ஆர்வம் பன்மொழிகளைக் கற்று கொள்ளவும் அதனை பயன்படுத்தவும் காரணமாகிறது.

**பல்வேறு பண்பாட்டு பின்னி உடைய மாணவர்களைக் கொண்ட வகுப்பில் உள்ள சவால்கள்**

உலகளாவிய மாணவர்களின் கல்வி மற்றும் மனக்கிளர்ச்சியை நோக்கும் பொழுது ஒரு புதிய சூழலில் அவர்கள் பயிலும்போது கீழ்கண்ட இவ்விரண்டு காரணிகளும் உறுதுணைப் புரிகிறது.

1. உலக மாணவர்கள் சுசர்லான்டனின் அகராதியை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.
2. அறிவுரை வழங்குபவர்கள் உலகளாவிய மாணவர்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புகளை முழுமையாக கிரகித்துள்ளார்களா என்பதனை அறிந்து கொள்ள வேண்டும்.

**எடுத்துக்காட்டாக,**

- தனது துறை சார்ந்த கல்வியிலிருந்து விலகுதல் பிறகு சேர்தல் வாய்ப்புகளை சரியாக தேர்ந்தெடுத்தல்.
- தன் துறை சார்ந்த கல்வினை விரிவாக பயிலுகிறார்களா?
- சுதந்திரமாக பயிலுகிறார்களா?
- வெளிநாடுகளில் இருந்து வந்து பயிலும் மாணவர்களுடன் கல்வியில் சமமாக இருக்க தன் நாட்டிலேயே பயிலும் மாணவர்கள் தன் துறை சார்ந்த கல்வியின் சுமையை ஒவ்வொரு வருடமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் இதனை பற்றி நேச்சுரலைசேஷன் வேலைகட்டுப்பாட்டு உறுப்பினர் மாணவர்களுக்கு நினைவூட்ட வேண்டும்.
- கார்ல் டன்னில் பயிலும் உலக அளவிலான மாணவர்களை சீரான கற்றல் திட்டத்தினை அவர்களே உருவாக்கி செயல்படுத்த அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.
- சீரான பாடச்சுமை என்பது சீரான அளவிலான கற்றல் எழுதுதல் மற்றும் செயல்முறை திட்டத்தினோடு மாணவர்களின் ஆங்கில மொழித்திறனைக் கருத்தில் கொண்டு ஏற்படுத்த வேண்டும்.

**தகவல்களை வெளிப்படுத்தும் உரைகளைக் கொண்ட நூல்களும் அவற்றை படித்துப் புரிந்துகொள்ளுதலும்**

- மாணவர்கள் புதிய உத்திகளை கையாண்டு சமூக அறிவியல், அறிவியல் மற்றும் கணக்கு பாடங்ளை பயிலுதல் வேண்டும். ஏனெனில் அவைகள் தகவல்களை தருபவை
- தகவல்கள் கதை மற்றும் கதாபாத்திரத்தினை அடிப்படையாக கொண்டது.
- ஒவ்வொரு பக்கத்திலும் சில பத்திகளும் ஒவ்வொன்றிலும் பல வாக்கியங்களும் சொற்களும் அமைந்து காணப்படும்.
- இது கருத்துக்களை விரிவாக விவரிக்க பயன்படுகின்றது.

**உள்ளடக்கத்தை பகுத்தறியும் திறன் வளர்த்தல்**

- 1 முதல் 4ம் வகுப்புளில் பயிலும் மாணவர்கள் முதலில் படிப்பதற்காக கற்கிறார்கள் பின்னர் கற்பதற்காக பயில்கின்றார்கள் ஆரம்ப கல்வி பயில்பவாகள் கற்றல் திறனை வளர்த்து கொள்வதினால் புதிய தகவல்களைக் கற்கின்றனர். விரிவான விளக்கம் உடைய கருத்துகளை உள்ளடக்கிய புத்தகங்களில் கருத்துக்கள் எவ்வாறு அமையப் பெற்றுள்ளது என்பதை பொருத்துத்தான் அவை கற்கும் போது மாணவர்களுக்கு எளிமையானதா அல்லது கடினமானதா என்பதனை தீர்மானிக்க முடியும்.
- விரிவான விளக்கமுடைய கருத்துக்களை உள்ளடக்கிய புத்தகங்களில் கருத்துக்கள் எவ்வாறு அமையப்பெற்றுள்ளது என்பதை பொருத்துத்துத்தான் அவை கற்க்கும் போது மாணவர்களுக்கு எளிமையானதா அல்லது கடினமானதா என்பதனை தீர்மானிக்க முடியும்.
- விரிவான விளக்கமுடைய புத்தகங்களில் கருத்துக்கள் வெவ்வேறுவிதமாக அமையப் பெற்றதால் ஆரம்ப கல்வி பயிலும் மாணவர்களுக்கு அது சிரமமாக உள்ளது.
- சில பத்திகளில் கருத்துக்கள் விளக்கமளிப்பதாகவும் மற்ற பத்திகளில் கருத்துக்கள் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் கூறியிருக்கின்றனர். மற்றவைகளில் காரண - பலன்களை பற்றி கூறியிருக்கின்றனர்.
- கல்வி கற்றலில் உணர்ந்து கற்றல் மற்றும் புரிந்து கொண்டு கற்றல் ஆகியவை உதவுகிறது.

- நடுநிலை மற்றும் உயர்நிலை கல்வி பயிலும் மாணவர்களுக்கு விரிவான கருத்துக்களை உடைய புத்தகங்கள் மிகுந்த சவால்களை உடையதாக இருக்கும். விரிவான விளக்கமுடைய கருத்துக்கள் வெவ்வேறு விதமாக அமையப்பெற்றதனால் அதிக அளவில் மாணவர்கள் அதனை கற்கும்போது கற்றலில் சிரமம் ஏற்படுகின்றது. அதனுடைய பலன் விரிவாக கற்றலில் எதிர்மறை பயன்களைப் உருவாக்குகின்றது.

- **வாய்மொழி கற்றலின் முன்னேற்றம்**

வாய்மொழியியல் என்பது கேட்டல் புரிந்து கொள்ளுதல் சொற்களை பற்றி அறியும் திறன் அம்மொழியின் இலக்கணம் மற்றும் ஒலியியல் திறன் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். வாய்மொழியியல் திறனை அதிகரிக்கும் செயல்கள்.

**பொருட்களைக்காட்டி சொல்லுதல்**

மாணவர்கள் தன் வீட்டிலிருந்து ஏதேனும் ஒரு பொருளை கொண்டுவந்து அதனை பற்றி கூறுவார்கள் அதனை தொடர்ந்து மற்றவர்கள் அதனை பற்றி கேள்வி கேட்டபார்கள் மாணவர்கள் ஏற்புடைய பதில்கள் அளிப்பார்கள்.

**தினமும் வாய்மொழிக் கற்றல்**

ஆசிரியர் தினமும் தவறான ஒரு சொற்றொடரினை கரும்பலகையில் எழுதுவார் மாணவர்கள் அதனை தனித்தனியாக வந்து அந்த சொற்றொடரை சாயானதாக மாற்ற வேண்டும்.

உதாரணமாக மறுநாள் நடத்தும் பாடத்திலுள்ள ஆசிரியர் ஒரு வார்த்தையினை முன்னதாகவே மாணவர்களுக்கு சொல்லி புரியவைப்பார் பின்னர் மாணவர்களை சிறு குழுக்களாக பரித்து அந்த சொல்லிற்கான பொருளை கூறி அதனைப் பற்றி மாணவர்களை பேச வைப்பார். பின்னர் மாணவர்கள் அவரவர் குழுக்களுடன் சேர்ந்து அந்த சொல்லோடு பொருந்தக் கூடிய படங்களை வரைவர். அதன் பின்னர் வகுப்பறையில் அதனைப் பற்றி ஆலோசிப்பர்.

2. ஆசிரியர் மாணவர்களுக்கு ராபர்ட் விளையாடினான் கிரிக்கெட் என்ற வார்த்தைகளைக் கொடுத்து அதனை சரியான சொற்றொடராக மாற்றச் சொல்லுவார் பின்னர் அதனை வகுப்பில் உள்ள மற்றவர்களிடம் ஆலோசிப்பர்.

3. வியத்தகுச் சொற்களை ஆசிரியர் தான் ஒரு வாரத்திற்கு கற்றுதரக் கூடிய கார்டுகளில் எழுதி வைத்திருப்பர். மாணவர்களை வட்ட அமைப்பில் உட்கார வைத்து ஒரு மாணவனை அழைத்து அவரிடம் ஒரு வார்த்தையை கொடுப்பார். மாணவன் அந்த சொல்லிற்கான அர்தத்தை நடித்துக் காட்டுவார்.மற்றவர்கள் அந்த சொல்லினைக் கண்டு பிடித்தவுடன் அதனைப் பலமுறை சொல்லியும் எழுதியும் எழுத்துக்கூட்டி படித்தும் பயிற்சி செய்வர்.

**4.விவாதம்**

மாணவர்களிடம் ஒரு தலைப்புக் கொடுத்து அதனைப் பற்றி விவாதம் நடத்துதல். கொடுத்த தலைப்பு பற்றி அவர்களிடம் பேசுதல் தலைப்பு சம்மந்தப்பட்ட கருத்துக்களை அவர்களுக்கு வழங்குதல்.

**5. வார்த்தைகளை உருவாக்குதல்**

சொற்களின் பகுதி மற்றும் விகுதியினை மாணவர்களிடம் கொடுத்து அதிலிருந்து புதிய சொற்களை உருவாக்குதல் போன்ற பயிற்சினை மாணவர்களுக்குக் கொடுத்தல். பின்னர் அந்த வார்த்தைகளின் தொகுப்பினை வகுப்பறையில் ஒட்டுவதினால் மாணவர்களுக்கு அது உதவும். திட்டம் சார்ந்த கோட்ப்பாடு

**6.கேட்டல் திறன் சார்ந்த பயிற்சிகள்**

சிறு பிள்ளைகளை வட்ட அமைப்பில் அமர வைத்து ஆசிரியர் அவர் காதுகளில் ஒரு சொற்றொடரை கூறுவார் ஒருவர் மற்றவரிடம் அதனை கூறுவர் இறுதியில் ஆசிரியர் கூறிய முழு சொற்றொடரை முழுமையாக அவர்கள் கூறுகிறார்களா? என்பதனை ஆசிரியர் கவனிக்க வேண்டும்.

உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஆசிரியர் வகுப்பில் கூறுவதை கவனித்து முக்கியமான கருத்துக்களை உள்வாங்குதல் மற்றும் குறிப்பெடுத்தல் திறனை வளர்க்கின்றது.

(எடுத்துக்காட்டாக)

வகுப்பில் பாடம் நடத்தும் பொழுது மாணவர்களிடம் சில வாக்கியங்களை அடிக்கடி சொல்லுவதினால் அவர்கள் முக்கிய செய்திகளை குறிப்பெடுத்துக் கொள்வார்கள் உ.த இது முக்கியமானது இப்போது நான் கூறப்போவது முக்கியமான ஒன்று. முதலில் நீங்கள் செய்ய வேண்டியது

**பொருளடக்கத்தினை படித்து காண்பித்தல்**

கற்றலில் சத்தமாக படிப்பது மற்றும் புரிந்து கொள்ளும் திறன்கள் முக்கியமானதாக கருதப்படுகின்றது. நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் விரிவாக கற்ககூடிய கருத்துக்கள் கொண்ட புத்தகங்கள் பெரும் சுமையாக உள்ளன. இதனால் கற்றலில் அவர்களுக்கு வெறுப்பு ஏற்படுகின்றது. அதனால் படிப்பில் வெற்றி பெருவது சிரமமாக உள்ளது.

கற்றல் மற்றும் புரிந்து கொள்ளுதல் திறனை மாணவர்களிடையே வளர்க்க அவர்களுக்கு கொடுத்து புரிய வைத்தல் அவசியமானதாக இருக்கின்றது.

**எடுத்துக்காட்டாக**

ஒப்பிடுதல் மற்றும் வேறுபடுத்துதல் கருத்துக்கள் பத்திகளில் வரும் பொழுது மாணவர்கள் சில வார்த்தைகளை அடையாளம் செய்ய சொல்லும்போது அவர்களால் சுலபமாக பயிலமுடியும். மாணவர்களின் புரிந்து கொள்ளுதல் திறனை வளர்க்க அவர்களுக்கு புதிய வார்த்தைகளைக் கற்பித்தல் முக்கியமானதாகும் மற்றும் கடினமான பாடங்களும் அதனுடைய தலைப்பு வரைபடங்கள் கருத்தாக்கம் முதலியவை மூலமாக மாணவர்களுக்கு சுலபமாக கற்பிக்கும்போது அவர்களும் சுலபமாக அதனை கற்கின்றனர்.

மாணவர்களின் கற்றல் திறனை சோதிக்கும் பொழுது கேட்கப்படும் கேள்விகள் மாதிரித் தேர்வுகளின் கேள்விகளோடு ஒத்துப்போகும் அளவிற்கு இருக்க வேண்டும்.

புரிந்து கொள்ளும் திறன்களை மாணவர்களிடையே வளர்த்தல் மூலமாக விரிவான பாடங்களை மாணவர்கள் படிக்க ஏதுவாக்கமுடிகிறது.

மாணவர்கள் கணிதம் அறிவியல் மற்றும் சமூக அறிவியல் கற்கும்போது தலைப்பு குறிப்பு சட்டம் வரைபடங்கள் மூலமாக கற்பதனால் அவர்களால் கருத்துக்களை ஒழுங்குபடுத்தி புரிந்துகொண்டு செயல்படுத்தும் பொழுது கற்றல் மற்றும் படிப்பில் முன்னேற்றம் மற்றும் தேர்ச்சி கிடைக்கப்பெறுகின்றனர்.

**மனப்பதிவு கட்டமைப்புக் கோட்பாடு**

அறிதிறன் செயல் தியரி அறிவு எவ்வாறு பெறப்படுகிறது செயல்படுகிறது மற்றும் ஒழுங்குபடுத்தபடுகின்றது என்பதனை பற்றி கூறுகின்றது.

ஒருவனுடைய புரிந்து கொள்ளுதல் திறன் அவர்கள் அனுபவத்திலும் உலக அறிவையும் உள்ளடக்கி இருக்கும்.

ஒரு செயல் பற்றி புரிந்து கொள்ளுதல் நடக்கும்போது அறவுதானாக வெளிப்படையாக தோன்றுகின்றது.

நமது அனுபவம் மூலம் பெறப்பட்ட அறிவைக் குறிக்கிறது. நாம் செய்த செயல்களை நினைவூட்ட இயலும் மற்றும் நமது நடத்தையினை ஒழுங்கு படுத்திடவும் பயன்படுகின்றது. பின் விளைவுகளை யூகிக்கவும் அது உதவுகின்றது.

ஸ்கீமா என்பது குழந்தை தான் எதிர்கொள்ளும் பொருள், மனித அல்லது தொடர்பாக புலன்கள் வாயிலாகஅடையும் மன ரீதியான தன்மைகளை வெளிப்படுத்துவதாகும். கால இடைவெளி அடையும். காலத்தால் மாற்றம் விரிவடையும், தன்மை உடையது புதிய தகவல்கள் சேர்க்கப்படுவதன் காரணமாக இ∴து விரிவடைகிறது. ஆனால் ஆழமாக நிறுவப்பட்ட ஸ்கீமா

மெதுவாகவும் மந்தமாவும் செயல்படக்கூடிய ஒன்றாகும். இதன் காரணமாக மக்கள் சிலா் பழைய கருத்துக்களுடன் தங்களது பாா்வையினை மாற்றிக்கொள்ளாமல் வாழ்கின்றனா். புதிய தகவல்கள் கிடைக்க பெறுவதினால் அவைகள் தற்போது இருக்கும் வில் உள்ள தகவல்களை ஒன்று சோ்க்கின்றது.

சுருங்கக் கூறின் ஸ்கீமா என்பது நாம் புலன்களால் அறிந்துணரக் கூடிய தகவல்களை மனரீதியாகப் பதிவிட்டு, தொடா்புடைய மனப்பதிவுகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட கட்டமைப்பு ஆகும். இத்ன மூலமே நாம் கற்றறிந்தவற்றை நமது நீண்டகால நினைவுப்பகுதியில் சேமித்து வைக்கிறோம். அதாவது நினைவில் அறிவுத்தொகுப்பாக நிலைநிறுத்திடுகிறோம்.

புதிய தகவா்களை நாம் நது சுற்றுச்சூழலிலிருந்து பெற்றிடும்போது, அவற்றை நமது நிகழ்கால நினைவில் உள்ள அறிவுக்கட்டமைப்போடு ஒப்பிட்டு பொருளுணா்ந்தறிகிறோம்.

**அறிதிறன் வளா்ச்சியும் ஸ்கீமாவில் ஏற்படும் மாற்றங்களும்**

மனப்பதிவுகள் இணைந்து வலைப்பின்னல் போன்ற அமைப்பு உருவாகின்றது என்றும், இதனை ஸ்கீமா என்று அழைக்கிறோம் என்றும் அறிந்துள்ளோம். இந்த ஸ்கீமா அல்லது அறிவுக் கட்டமைப்பு, குழந்தைகளின் கற்றல் அனுபவங்கள் அதிகரிக்க அதிகரிக்க விரி வுபடுத்துவதோடு, மாற்றமும் அடைந்து தொடா்ந்து மேம்பாடு அடைகிறது. எனவே சிறு குழந்தைகளை விட பெரியவா்கள் தகவலைப் பரிசீலிக்கும் முறை மேம்பட்டுக் காணப்படுவதோடு, அவா்களது அறிவும் உயா்நிலையில் அமைந்திருக்கும்.

ஸ்கீமா உருப்பெற்று சீா்படுத்தப்படுதலில் அதாவது அறிதிறன் வளா்ச்சியில் நான்கு உட்கூறுகள் இடம் பெறுகின்றன. ஆவையாவன 1.தன்வயப்படுத்துதல் 2.பொருத்துதல் 3.இணங்குதல் 4.ஒருங்கமைத்த் இனி இவை பற்றி சுருக்கமாகப் பாா்ப்போம்.

**தன்வயப்படுத்துதல்**

குழந்தை தனது சூழ்நிலையிலிருந்து பெறும் புதிய அனுபவத்தை தன் மனதில் ஏற்கனவேயுள்ள ஸ்கீமாவுடன் இணைத்தலே தன்வயப்படுத்துதல் எனப்படுகிறது. ஒரு ஸ்கீமா உருவானவுடன் அது ஒவ்வொரு புதிய பொருளுக்கும், புதிய நிலைமைக்கும் பொருத்திப் பாா்க்கப்பட்டு பொருள் உணா்ந்தறியப்படுகிறது. இதன் காரணமாகவே, குழந்தைகள் புதியவற்றைப் புரிந்து கொள்ள, ஏற்கனவே பெற்றுள்ள அனுபவத் தொகுப்பை பயன்படுத்தும் திறனைப் பெற்றிருக்கின்றனா்.

**பொருத்துதல்**

தன்வயப்படுத்துதலைத் தொடர்ந்து, 'பொருத்துதல்' என்னும் செயல்பாடு நிகழ்கிறது. குழந்தை புதிய அனுபவத்தைப் பெறும்போது அது ஏற்கனவே குழந்தையிடம் உள்ள ஸ்கீமாவோடு பொருத்திப் பார்க்கப்பட்டு, 'வேறுபாடுகள்' அல்லது முரண்பாடுகள் இருந்தால் அதை சீர்செய்யும் வகையில் ஏற்கனவே உள் இருக்கும் ஸ்கீமா மாற்றி அமைக்கப்படுகிறது. இவ்வாறு அனுபவங்கள் சேர சேர, ஸ்கீமா மாற்றமடைந்து கொண்டே வருகிறது. அதாவது குழந்தையின் சிந்தனைத்திறன் வளர்ச்சியடைகிறது.

**இணங்குதல்**

புதிய அனுபவங்களை ஸ்கீமாவில் சேர்த்திடுவது தன்வயப்படுத்துதல் ஆகும். பொருத்துதல் வாயிலாக, புதிய அனுபவத்தின் அடிப்படையில் ஏற்கனவே உள்ள ஸ்கீமா விரிவடைகிறது அல்லது மாற்றியமைக்கப்படுகிறது. இதன் விளைவாக குழந்தை தான் எதிர்படும் புதிய சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றியமைத்துக் கொள்கிறது. இச்செயலையே இணங்குதல் என்று பியாஜே அழைக்கிறார். எந்தவொரு ஸ்கீமாவும் நிரந்தரமானதன்று புதிய அனுபவங்களுக்கு ஏற்ப மாற்றமடைந்து கொண்டேயிருக்கும். மாற்றியமைக்க முடியாத சூழ்நிலையில் புதிய ஸ்கீமா ஒன்று ஏற்கனவேயுள்ள ஸ்கீமாவைத் தவிர தோற்றிவக்கப்படும்.

**எடுத்துக்காட்டு**

பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் மட்டும் உணவாக அளிக்கப்படுகிறது. ஏனெனில் அதன் ஜீரண அமைப்பு பாலை மட்டும் கிரகித்துக் கொள்ளும் தன்மை படைத்தது. சில மாதங்களுக்குப் பிறகு, சிறிது சிறிதாக கூழ், மசித்த காய்கறிகள் போன்ற திட உணவுப் பொருட்கள் குழந்தைக்குக் கொடுக்கப்படும்போது, சமநிலை பிறழ்வு ஏற்பட்டு, பயிற்றுப்போக்கு ஏற்படக் கூடும். ஆனால சில நாட்களிலேயே இது நின்று பொய் திட உணவுப் பொருட்களையும் ஜீரணிக்கும் வகையில அதன் ஜீரண அமைப்பு மாற்றமடைகிறது.

இதே போன்று குழந்தையின் அறிதிறன் கட்டமைப்பும், தான் எதிர்கொள்ளும் சிக்கலான கருத்துகளையும் தன்வயப்படுத்திக் கொள்ளும் வகையில் மாற்றமடைந்து கொண்டே இருப்பதாக பியாஜே கருதுகிறார். இவ்வாறு அறிதிறன் கட்டமைப்பு மாற்றமடைவதாலேயே குழந்தையின் அறிவு வளர்ச்சி ஏற்படுகிறது.எனவே அறிதிறன் வளர்ச்சி என்பது அறிந்திருக்கும் பொருட்களின் அளவு அல்லது எண்ணிக்கைப் பெருக்கம் மட்டுமல்ல ஆராய்ந்து அறியும் முறையிலேயே பெருத்த மாற்றங்களையும் பெறுவது ஆகும்.

**ஒருங்கமைத்தல்**

பல ஸ்கீமாக்கள் உருப்பெற்றிருக்கும் நிலையில் அவை தனித் தனியாக இயங்காமல் ஒன்றிணைக்கப்படுதலே ஒருங்கமைத்தல் ஆகும். ஆக குழந்தையின் அறிதிறன் கட்டமைப்பு தொடர்ந்து மாற்றமடைந்து மேம்பாடு அடைகிறது.

அறிதிறன் கட்டமைப்பு

1.ஒருங்கமைத்தல்

2.இணங்குதல்

பொருத்துதால்

தன்வயப்படுத்துதல்

எடுத்துக்காட்டாக பார்த்தல், பற்றுதல் என்னும் இரண்டு உடல்திறன்களைப் பெற்றபின், அவற்றை முறையாக இணைத்து, தான் பார்த்த பொருளை பொறுக்கி எடுத்தல் என்ற செய்திறனைப் பெறுதல்.

**திட்டபலன்**

தகவல்கள் தற்போது செயல்படும் அல்லது அது தொடர்புடையதில் மாற்றம் உருவாகிறது. செயற்கை அறிதிறன் பகுதியில் இருக்கின்ற வெற்றிபெறாத முழுமை அடையாத முயற்சியின் தாக்கம் வில் காணப்படுகிறது.

எடுத்துக்காட்டாக

கணிணியினை, ஒரு புத்தகத்தை தானாக வாசிக்க செய்வதோ அல்லது மனிதனை போல செயல்பட செய்வது இயலாத கிரியம் ஏனெனில் அதற்கேற்ற தகவல்கள் ஆக கணிணியில் பொருத்தப்படவேண்டும் அவ்வாறு செய்யாத நிலையில் இது சாத்தியமில்லை.

பொது அறிவு மற்றும் புதிய கருத்துக்கள் மற்றும் கோட்டுபாடுகளுக்கும் முக்கியம் அளிக்கின்றது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வி கற்கும்போது புதிய அறிவை உருவாக்கவும் மற்றும் அது தொடர்பாக புதிய தகவல்களை உருவாக்கவும் பயன்படவேண்டும்.

**உரையமைப்பு**

அச்சிடப்பட்டோ அல்லது எழுதப்பட்டடோ இருக்கும் நூலில், கருத்துகளை வெளிப்படுத்துவதில் உரை அமைப்பு முக்கியமானதாக உள்ளது.உரை அல்லது வாக்கியங்களின் தொகுப்பமைப்பு தொடர்ச்சியாக இருந்தால்தான், படிப்பவர் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

பொதுவாக ஒரு நல்ல உரை அமைப்பு என்பது, தகவல் அல்லது கருத்து எவ்வாறு சிறந்த மறையில பத்தியில் அமையப்பெற்றுள்ளது என்பதைச் சார்ந்ததாகும்.உரையமைப்பு என்பது நூலாசிரியரின் எண்ணங்கள் கருத்துகளின் வடிவ அமைப்பாகும்.

ஒரு நல்ல உரை அமைப்பு கீழ்க்கண்ட பண்புகளைக் கொண்டு இருக்கும்.

- முன்னுரை
- கருத்துகளில் தொடர்ச்சி
- பொருத்தமான சொற்கள் கையாளப்படல்
- கருத்து விளக்கங்களில் தொளிவு
- சுவைபடக் கூறல்
- எடுத்துக்காட்டுகள் கொண்டு விளக்குதல்
- ஒற்றுமை (எதைப் போன்று), வேற்றுமை (எதற்கு மாறாக) என்பதைக் கூறல்.
- பிழையற்ற வாக்கியங்கள்
- பழகுமொழியில் மாணாக்கா் புரிந்துகொள்ளும் வகையில் கூறல்.
- தேவையற்ற கடினமான சொற்களையும், பிறமொழிச் சொற்கலப்பையும் தவிர்த்தல்.
- வினாக்களுக்கான விடையை எளிதில் அடைய வழிவகை செய்திடல்
- கருத்துகளை எளிதில் தொகுத்தறியும் வகையில் அமைத்திடல்

உரைகளை, அவற்றின் பொருள் விளக்கும் தன்மையின் அடிப்படையில் பின்வரும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்திடலாம்.

**கதை வடிவில விவரிக்கும் உரை**

பொழுதுபோக்கு தொடர்பான கதைகளை விவரிக்கும் வகையில் இவ்வுரையமைப்பு இருக்கும்.

**விளக்குதல் உரை**

தா்க்கரீதியாக தகவல்களை அளிப்பதாகவும், எடுத்துக்காட்டுகள் கொண்டு கருத்துகளை விளக்கும் முறையிலும் இவ்வகை உரை அமைப்பு அமைந்திருக்கும்.

**தொழிலநுட்பம் அல்லது அறிவியல் சாா்ந்த உரை**

அளிக்கப்படும் தகவல்கள் ஒரு செயல்பாட்டின் அடிப்படையை விளக்குவதாக இவ்வுரையமைப்பு விளங்குகிறது.அதாவது காரண-காரிய தொடா்பினை புரியச் செய்தலுக்கு முக்கியத்துவம் அளிப்பதாக இவ்வகை உரை அமைப்பு அமைந்திடும்.

**ஏற்றுக்கொள்ளத் தூண்டிடும் உரை**

தெரிவிக்கப்படும் கருத்துகளை, படிப்போா் ஏற்றுக் கொள்ளும் வகையில் காரண – காரியத் தொடா்பினை முன்னிலைப்படுத்தி வழங்கிடும் வகையில் இத்தகைய உரை அமைந்திருக்கும்.

உரை அமைப்பிற்கான சாயானதொரு அமைப்பு என்று எதுவும் இல்லை. எழுதுபவா்கள் அவரவா் விருப்பத்திற்கு ஏற்ப உரையை அமைத்தக் கொள்கின்றனா்.பொதுவாக உரை அமைப்புகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

**ஒப்பீட்டு அமைப்பு**

இவ்வகை உரை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதா்கள், நிகழ்வுகள், கருத்துகள் போன்றவற்றை ஒப்பிட்டு, அவற்றிற்கு இடையே உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஆராய்வதாக அமைந்து இருக்கும்.

**காரணம் - விளைவு அமைப்பு**

இவ்வகை உரை, ஒரு குறிப்பிட்ட நிகழ்வு அல்லது கருத்து, அதனைத் தொடா்ந்து ஏற்படும் விளைவு அல்லது கருத்து ஆகியவற்றிற்கு இடையேயுள்ள காரண – காரிய தொடா்பை விளக்குவதாக அமைந்திடும்.

**வரிசைக்கிரம அமைப்பு**

இவ்வகை உரை அமைப்பு, நிகழ்வுகளை கால வரிசைப்படுத்திஅமைத்தும், ஒரு செயல்முறையை அதன் படிநிலைகள் கொண்டு விளக்குவதாகவும் அமைந்திருக்கும்.

**பிரச்சனை தீர்வு அமைப்பு**

இவ்வகை உரைஅமைப்பு ஒரு பிரச்சனை அல்லது பிரச்சனைகளை முன்னிலைப்படுத்தி, அவற்றின் இயல்புகள், அவற்றிற்கான காரணங்கள், அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகள் என யாவற்றையும் முழுமையாக விளக்கிடுவதோடு, தீர்வின் தாக்கம் குறித்தும் விவாதிக்கும் வகையில் அமைந்திருக்கும்.

**வர்ணனை அமைப்பு**

இவ்வகை உரை அமைப்பு ஒரு கருத்து அல்லது நிகழ்வு குறித்து விரிவாக விவரித்து, அது பற்றிய மனச்சித்திரத்தை கற்பவர்களிடம் உருவாக்கிடும் வகையில் அமைந்திருக்கும்.

**வினா-விடை அமைப்பு**

இவ்வகை உரை அமைப்பு ஒரு வினாவினை எழுப்பி, அதற்கான தீர்வு குறித்து விவாதிக்கும் வகையில் அமைந்திருக்கும்.

**சுழற்சி அமைப்பு**

இவ்வகை உரை அமைப்பு, ஒரு குறிப்பிட்ட நிகழ்விலிருந்து தொடங்கி, அதனைத் தொடர்ந்து பல்வேறு விஷயங்களை விவாதித்தபின், முதலில் தொடாங்கி நிகழ்வுக்கே வரும் வகையில் அமைந்திருக்கும்.

**பாடப்புத்தகத்தில் உள்ள பாடப்பொருள் பகுதிகளை படித்துப் புரிந்து கொண்டு கற்றுத் தேர்ச்சியடைதல்**

பாடப்புத்தகத்தில் உள்ள பாடப்பொருள் பகுதி ஒன்றை பொருளறிந்து படித்து, கற்றல் தேர்ச்சி பெறுவதில் இடம் பெறும் படிகளாவன

படித்தறிய வேண்டிய பாடப்பொருள் பகுதியை பரிசீலித்தல்

பொருத்தமான படிகத்தறியும் உத்தியை தேர்வு செய்து பயன்படுத்திடல்

படிக்கும்போது பொருத்தமான உத்தியைப் பயன்படுத்தி குறிப்பெடுத்தல்.

படித்து முடித்தபின் குறிப்புகளின் துணைக்கொண்டு படித்த பாடப்பகுதியின் கருத்துகளை சுருக்கமாக தொகுத்தல்.

பாடக்கருத்துகளின் சுருக்கமான தொகுப்பை ஒரு முறை வாசித்து எழுதிப் பார்த்தல்.

**படித்தறிய வேண்டிய பாடப்பொருள் பகுதியை பரிசீலித்தல்**

படித்தறிய வேண்டிய பாடப்பொருள் பகுதியை ஆய்வு செய்து அதில் இடம் பெற்றுள்ள தலைப்புகள், துணைத்தலைப்புகள், துணைத்தலைப்புகள் ஒவ்வொன்றிலும் இடம் பெற்றுள்ள முக்கிய கருத்துகள் அருஞ்சொற்கள், வரையறைகள், அட்டவணைகள், வரைபட விளக்கங்கள் போன்றவற்றைக் கண்டறிதல், இப்படிநிலையில் நடைபெறுகிறது. அதாவது பாடப்பகுதியின் அமைப்பு பற்றி தெரிந்து கொள்வதையே பாடப்பகுதியை பரிசீலித்தல் என்கிறோம். இதன் மூலம் பாடப்பகுதியின் கட்டமைப்புக்கு ஏற்ப, பொருத்தமான 'வாசித்தல் உத்தியை' தெரிவு செய்து பயன்படுத்திடலாம். பொருளுணர்ந்து வாசிக்கும்போது குறிப்பெடுத்தல் விளைபயன் மிக்க கற்றலுக்கு அவசியமாகும். அதாவது குறிப்பெடுத்தலுக்கு உதவிடும் வகையிலான வாசித்தல் உத்தியைத் தெரிவு செய்வதைத்தான் 'பொருத்தமான வாசித்தல் உத்தியை தெரிவு செய்தல்' என்கிறோம்

உங்களுக்கு கொடுக்கப்படுள்ள கட்டுரையின் மைய கருத்தினை கண்டறிய வேண்டும்.

**துணைத்தலைப்பு**

கட்டுரையின் மைய கருத்து எவ்வாறு மற்ற கருத்துக்களுடன் சேர்க்கபட்டுள்ளது மற்றும் கட்டுரை எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என்பதனைக் கண்டறிய வேண்டும்.

இதில் வேறு ஏதேனும் துணைக் கருத்துக்கள் உள்ளதா என்று கண்டுபிடிக்க வேண்டும். துணை தலைப்புகளை நீங்களாக உறுவாக்கிக் கொள்ளலாம்.

முக்கியமாக கருத்துக்களை மட்டும் தனியாக எழுதவும் வேறு தகவல்கள் அல்லது கருத்துக்கள் உள்ளனவா என்று பார்க்கவும் அவ்வாறு இருப்பின் சிறிது இடைவெளி விட்டு துணைத் தலைப்பு கீழே எழுதிக் கொள்ளவும்.

முழுமையான வாக்கியங்களை எழுதக்கூடாது முடிந்தவரை சுருக்கமானவற்றை எழுத வேண்டும். வார்த்தைகளைக் சுருக்கமாக எழுதவும்.

சொற்களின் விகுதியினை அப்படியே வைத்துக் கொள்ளவும் ஏனென்றால் பின்னர் கட்டுரையை முழுமையாக படிக்கும்போது விகுதிகள் முக்கியமான கருத்துக்களைக் கண்டுபிடிக்க உதவியாக இருக்கும்.

**சுருக்கமான தொகுப்பு**

ஒரு கதை அல்லது கட்டுரையின் முக்கிய கருத்துக்களைக் சுருக்கமாக தொகுப்பதுதான்.

நாம் படிக்கும் புத்தகத்திலிருக்கும் பெரிய பத்திகளில் உள்ள கருத்துக்களைக் சுருக்கவும் ஆசிரியர் விரிவுரை ஆற்றும்போது மற்றும் தகவல் தொடர்பு வளங்களிலிருந்து கருத்தாக்கம் முடியும்.

**கருத்தாக்கம் செய்வது**

கொடுக்கப்பட்டுள்ள பத்திகளில் உள்ள முக்கிய மற்றும் மைய கருத்துக்களை மட்டும் சிறுதொகுதியாக மாற்றி அமைக்கவும். மாணவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள கட்டுரையினை எந்த அளவிற்கு புரிந்து கொண்டு அதனை வெளிப்படுத்தி உள்ளனா் என்பதனைச் சோதிக்க இது உதவும்.

- புதிய தகவல்கள் திரட்டும்போதும் மற்றும் ஆராய்ச்சி செய்யும் போதும் இது உதவுகின்றது.
- கொடுக்கப்படுள்ள கட்டுரையினை வேகமாகவும் பொருள் உணர்ந்து படித்து அதனனுடைய மைய பொருளைக் கண்டறிய வேண்டும்.
- முக்கியமான கருத்துக்களை கோடிட்டு வைக்கவும்.
- கட்டுரையை முழுமையாக படித்து அதில் உள்ள கிளைக் கருத்துக்களையும் புரிந்து கொள்ளவும்.
- துணைத் தலைப்புகள் மற்றும் வரைபடங்கள் ஆகியவற்றை வகை செய்து கொள்ளவும்
- மைய கருத்தினை ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் எழுதவும்.
- பிறகு மற்ற கருத்துக்களையும் சேர்த்து தொகுக்கவும் கடைசியாக நீங்கள் எழுதிய பத்தியில் எல்லா முக்கிய கருத்துக்களையும் இணைந்துள்ளீரா என்று சரிபார்த்துக் கொள்ளவும்.

**கற்றல் மற்றும் எழுதுதல் தொடர்பு**

கல்வியாளர்கள் கற்றல் மற்றும் எழுதுதல்களுக்குமான தொடர்பு பற்றி அடிக்கடி கூறுவார்கள் டாக்டர் சேட்கின்செல்லா சான் பிரான்சிஸ்கோ கற்றல் மற்றும் எழுதுதலின் தொடர்பு பற்றி கீழ்வறுமாரு கூறுகிறார். விரிவாகவும் தினசரியும் படிக்கும்போது ஒருவருக்கு எழுத்துத் திறன் வளர்கிறது.

- சிறுவயதில் படிக்கும் ஆர்வமுள்ளவர்கள் பிந்நாளில் நல்ல எழுத்து திறமை பெற்றவர்களாக இருப்பர்.

- தினசரி படிக்கும் பழக்கத்தினை ஒருவா் மேற்கொள்கும்போது அதனுடைய தாக்கம் எழுத்துத் திறனை மேம்படுத்தும்.
- வளரும் எழுத்தாளா்கள் பிறா் எழுதிய செயலாக்கம் உடைய நிறைய பலன்களை உடைய கட்டுரைகளை எடுத்துக்காட்டாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- ஏனென்றால் ஒருவா் வெவ்வேறு நடைகளில் எழுத கேட்டுக்கொள்ளப்படும்போது அவரால் சுலபமாக வேறு நடையினை பின்பற்ற முடியாது

**எடுத்துக்காட்டாக**

- ஒருவா் வல்லுநராக இருந்தால் அவரால் சுலபமாக எழுத இயலாது. கற்றல் மற்றும் எழுதும் திறன்களை ஒன்றன் பின் ஒன்றாகத்தான் மாணவா்களுக்கு கற்றுத்தர வேண்டும். இவை இரண்டும் ஒரே நேரத்தில் கற்றுத் தர இயலாது ஆங்கிலம் கற்கும்போது எழுத்துத் திறனை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளபட்ட முயற்சி. இது கெயில் ஹெட்டெய்லா் என்பாரால் கூறப்பட்டுள்ளது.
- இளம் எழுத்தாளா்கள் ஆரம்பத்தில் எழுதும் பொழுது நிறைய தவறுகள் செய்வா் அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. பிறகு அதனை மெதுவாக அவா்களுக்கு உணா்த்துவதால் அதனை அவா்கள் புரிந்து கொள்வாா்கள்.
- சிறுவா்கள் தாங்கள் கற்றதை படித்தவற்றை எழுத்தின் மூலம் பரிமாறிக்கொள்வதை ஊக்குவிக்க வேண்டும் அவ்வாறு செய்வதினால் அவா்களின் எழுத்துத்திறன் மேம்படும்.
- மாணவா்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகள் பற்றி சிந்திக்க அவா்களின் ஆசிரியா் ஊக்குவிக்க வேண்டும். இங்கே மாணவா்கள் தங்கள் கருத்துக்களைக் பகிா்ந்து கொள்ள வேண்டிய அவசியமாகின்றது. அவா்கள் எழுத்தின் மூலமாக அது வெளிப்படுத்தும் பொழுது ஆசிரியா்கள் மாணவா்களை ஊக்குவித்து அவா்கள் தங்கள் கட்டுரையினை மேம்படுத்தி எழுத உதவ வேண்டும்.

**கருத்துக்களை ஒருமுகப்படுத்துதல்**

இந்நிலையில் மாணவா்கள் தங்கள் கருத்துக்களை ஒருமுகப்படுத்துதல் முக்கிய பங்கு வகுக்கின்றது. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் வாக்கியங்கள் சரியாக உள்ளதா கருத்துக்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ளதா என்று ஆசிரியா் கவனிக்க வேண்டும். முக்கியமான கருத்துக்கள் விடுபட்டுள்ளனவா மற்றும் தலைப்பிற்கு பொருந்தாத கருத்துக்கள் சோ்க்கப்பட்டுள்ளதா என்பதனை கண்டறிய வேண்டும்.

**மதிப்பிடுதல் ஒழுங்குபடுத்துதல் மற்றும் மாற்றங்கள் செய்தல்**

- இந்நிலையில் மாணவர்கள் தங்கள் கட்டுரையினைப் பலமுறை படித்து பார்த்து தவறு ஏதேனும் உள்ளதா மாற்றங்கள் செய்யலாமா என்று பார்க்க வேண்டும்.
- கருத்துக்கள் ஒன்றன் பின் ஒன்றாக சொல்லப்பட்டுள்ளதா அல்லது ஏதேனும் முரண்பாடு உள்ளதா என்று பலமுறை படித்து பார்த்து கட்டுரையினை ஒழுங்குபடுத்தி முழுமையான கட்டுரையாக தயாரிக்க வேண்டும். ஆசிரியர் அந்த கட்டுரையில் பிழைகள் இருப்பின் அதனை மாற்றி அமைத்து சரியாக்க மாணவர்களுக்கு உதவ வேண்டும்.
- மாணவர்கள் எழுதிய கட்டுரைகளை ஆராய்ந்து அவர்கள் கூறவரும் பொதுக்கருத்தினை அறிந்துணர்தல் வேண்டும்.

**காரணத்தோடு எழுதுதல்**

மாணவர்கள் எதற்காக எழுதுகின்றனர் என்பதனை ஆசிரியர் அறிய வேண்டும் ஆசிரியரின் நன்மதிப்பை பெற்று நல்ல மதிபெண்கள் பெறுவதற்காக சிலர் எழுதுவர். ஆனால் ஆசிரியர்கள் சிலர் மாணவர்களை ஊக்குவித்து கட்டுரைகளை எழுதவைப்பர். அவர்களின் கட்டுரைகள் செய்தி தாள்களுக்கு அனுப்பி வைக்கவும் மற்றும் கல்லூரி நூலகங்களில் அவர்களது கட்டுரைகள் இடம் பெறவும் ஆசிரியர் வழிகாட்டியாக இரப்பார்.

மாணவர்களும் தங்கள் தொகுப்பினை பலரும் படிக்க ஏதுவாக இருக்கும் என்ற நோக்கத்தோடு எழுதுவர் இவ்வாறு ஊக்கத்தின்னோடு எழுதுவதினால் நிச்சயமாக அவனுடைய கட்டுரை வெற்றயை பெறும்

**கற்பதற்கும் எழுதுவதற்கும் புரிந்துகொள்வதற்கும் உதவுதல்**

எழுதுதல் கற்பதற்கு என்று என்னும் போது மாணவர்கள் கட்டுரைக்கான கருத்துக்களை சிந்தித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் என்று கருதுவர்.

மாணவர்கள் தங்கள் கட்டுரை புரிந்து கொள்ளமுடியாதவாறு உள்ளது என்று கவலைபட தேவையில்லை ஏனென்றால் அதனை யாரும் சரிபார்ப்பதில்லை இந்த கருத்தினை வைத்து பார்க்கும்பொழுது எழுதும் கட்டுரை மிக சரியாக துல்லியமானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

**வகுப்பறையில் பின்வரும் செயல்கள் செய்வதினால் கற்பதற்காக எழுதல் திறன் வளர்க்கலாம்**

**கெவின் கெவின் என்பவர்** தன் மாணவர்களை அவர்கள் குடும்பத்தில் அவர்கள் எத்தனையாவதாக பிறந்தனர் என்பதனை பற்றி கூறச் செய்தார். இவ்வாறு செய்வதினால் அவர்கள் தங்கள் குடும்ப பின்னனியை தெரிந்து கொள்ளவும் அதனை தன் சக மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் உதவியது

- மாணவர்களைக் கேட்கும் பயிற்சிகளில் அதிகம் பங்கெடுக்க வைத்தல்
- பிறகு அவர்களைத் தாங்கள் கற்றதை எழுதச் செய்தல்.
- மாணவர்கள் பிரதிபலிப்பு பற்றி எழுதச் செய்தல்

**முடிவுரை**

இந்த பகுதியில் மொழியினைக் கற்பதில் உள்ள சிரமங்கள் பற்றி ஆழமாகவும் எழுத்து திறனை எவ்வாறு மேம்படுத்தி கொள்ளலாம் என்பது பற்றி விரிவாக பார்க்க முடிகிறது.

**பாடப்பகுதி வினாக்கள்**

1.இருமொழி கருத்தைப் பற்றி விளக்குக.

2.பன்மொழிப் கருத்தைப் பற்றி விளக்குக.

3.வாய்மொழிக் கற்றலின் முக்கியத்துவத்தை விளக்குக.

4.பல கலாச்சாரம் நிறைந்த வகுப்பறையில் கற்பிக்கும் மொழி எதிர்கொள்ளும் அறைக்கூவலை விளக்குக.

5.கதை வடிவில் விவரிக்கும் உரைக்கும் விளக்குதல் உரைக்கும் இடையே உள்ளதை வேறுபடுத்துக.

6.கலைத்திட்டத்தில் விரவியுள்ளமொழி எவ்வாறு சிறப்பாக அமையும் என்பதை விளக்குக.